Registered as a News Paper
பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly


நாதம் -16 | வெள்ளி -15 | 03-09-யூன்-2005



## குனியாத நிலைபெற்று பணியாத பலம் பெறுவோம்







## இலக்குத்தவறா சிகரம்- தலைவன் தமிழீழம் வெல்வான் முதல்வன்



# 2005 பௌதீக ஆண்டு பிரகடனமும்; எஞ்சிய ஏழுமாத ஏணிப்படிகளும்

ஐ.நா. சபையின் அனுசரணையுடன் பௌதீகவியலிற்கான சர்வதேச அமைப்பினால் நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் இந்த 2005 ஆம் ஆண்டு 'அனைத்துலக பௌதீக ஆண்டு' ஆக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. 20ஆம் நூற்றாண்டு போற்றும் விஞ்ஞானியாகிய அல்பேர்ட் ஐன்ஸ்ரைன் மூலக்கூறுகளின் பரிமாணங்களை ஆராய்ந்ததுடன், பௌதீகவியலின் பார்வைத்தளங்களில் புரட்சியைப் புகுத்தி, வெவ்வேறு கண்ணோட்டங்களினூடாக அதை வளர்த்தெடுப்பதற்கு ஆதரவான தனது 3 கொள்கைகளை வெளியிட்டு நூறாண்டுகள் பூர்த்தியாகும் இந்த வேளையில், இப்படியானதொரு பிரகடனம் காலப்பொருத்தமானதே! அது மட்டுமல்ல உலகின் இத்தகைய தலைசிறந்த விஞ்ஞானி இயற்கை எய்தியும் 50 ஆண்டுகள் கடக்கும் நேரத்தில், பௌதீகவியலின் வளர்ச்சிக்கு இவ்வாறான பிரகடனம் நிச்சயம் ஒரு உந்துசக்தியாகத் திகழும் என்று நம்பலாம்.

1879 இல் யேர்மனியில் யூதக்குடிமகனாகப் பிறந்த ஐன்ஸ்ரைன் 1921ஆம் ஆண்டில் பௌதீகத்திற்கான நோபல் பரிசைப் பெற்றிருந்தார். உலகளாவிய அளவில் புகழ் பெற்றிருந்த இவர் ஹிட்லர் ஆட்சியேற்ற பின்னர் ஏற்பட்ட யூத விரோதப்போக்குகளினால் யேர்மனியை விட்டு நீங்கி, அமெரிக்காவில் குடியேறினார். 'ஆமாம், பௌதீகவியலின் வளர்ச்சி என்றால் அது விஞ்ஞானிகள் சார்ந்த சமாச்சாரம் ஆச்சே! அவர்களல்லவா அதை வளர்த்தெடுக்க வேண்டும்! நம்மால் என்ன செய்துவிட முடியும்? சரி அப்படி நாம் பௌதீகத்திற்கு ஏதாவது பண்ணித்தீர்த்தாலும், அதனால் நமக்கு என்ன லாபம் கிட்டிவிடப் போகிறது ?', என்று நம்முடைய அடிமனம் சிலவேளை எண்ணக் கூடும்.

கடவுள் பற்றி ஐன்ஸ் ரைன் கூறிய கருத்து மிகவும் ஆழமானது. 'இந்த உலகினை கடவுள் சூதாட்டத்துக்குரிய பகடைக்காயாகக் கருதவில்லை. எல்லாம ஒரு விதியிலேயே இயங்கி வருகிறது' (God does not play dice with the world). தமிழ் மொழி வழக்கில் வாய்க்குவாய் வரும் 'மாற்ற முடியாத தலைவிதி' தானா அவராலும் பேசப்பட்டிருக்கிறது ? ஒன்றுவிட்ட அக்கா முறையில் ஒருவர் 'ரிவிரெச' ராணுவ நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்து செல்லும்போது, விமானக் குண்டு வீச்சிற்கு உள்ளானார். தனது கடைசி நேரத்திலும் கூட நின்ற தனது 2 பிள்ளைகளையும் தன்னால் முடிந்தவரை பக்கத்து வாய்க்காலுக்குள் தள்ளிக்காப்பாற்றி விட்டே அவர் சிதறியிருந்தார். அந்தச் சம்பவத்தை அவருடைய கணவன் 'தன்னுடைய தலைவிதி' என்றே புரிந்து வைத்திருந்தார். இந்தியாவின் மாநகரங்களில் ஒன்றான அஹ்மதாபாத் இல் கணனி மென்பொருள் வடிவமைப்பாளராக இருக்கும் தன் நண்பரைப் பற்றி DW-சர்வதேச வானொலிச்செய்தியாளர் ஒருவர் பின்வருமாறு குறிப்பிடுகிறார் : 'குறித்த அந்த நண்பருடன் ஒருமுறை குளிரூட்டப்பட்ட அவரது சொகுசு வாகனத்தில் சென்றுகொண்டிருந்தோம். வயது 30களின் ஆரம்பத்திலிருந்த அவர் மிகவும் மேம்பட்ட பொருளாதார நிலையை எட்டியிருந்தார். மடிக்கணனி (Laptop), கைத்தொலைபேசி என நவீன இந்தியாவே அவருடன் கூட நகர்ந்துகொண்டிருந்தது. பிரதான வீதியை எட்டும் வேளையில் நடைபாதையோரக் குடியிருப்புகளில் தென்பட்ட பல்லாயிரக்கணக்கான அடித்தட்டு மக்கள் தென்பட்டனர். முழுக்குடும்பம் மட்டுமல்ல, கால்வாசித்தேசமே அச்சேரிகளில் தான் கண்மூடி எழுந்து காலம் ஓட்டிக்கொண்டிருக்கிறது. அவர்களுடைய எதிர்காலம் பற்றி நண்பரைக் கேட்டேன். அநாவசியமான கேள்வியைக் காதில் வாங்கிக்கொண்டது போல சலிப்புடன், 'அது ஹரிஜனங்கள்- தீண்டத்தகாததுகள். உதுதான் அவையின்ரை வாழ்க்கை எண்டிறது அவையின்ரை தலைவிதி. அதை மாத்தேலாது !' என்றார். ஆக ஒன்றுகளினதும், பூச்சியங்களினதும் கூட்டில் உருவாகும் Binary System என்பதின் அடிப்படையில் அமைந்த நவீன தொழில்நுட்பமாகிய தகவல் தொழில்நுட்பத்தில் கற்றுத்தேர்ச்சி அடைந்த அவர் புறவுலகினை உள்வாங்கும் திறனில் கேவலமான வெறும் பூச்சியமாகவே இருக்கிறார். அறிவியலை வெறும் பிழைப்புக்கான தெப்பமெனக் பொத்திப்பிடித்துள்ளாரே தவிர, அவரது பார்வைகள் அனைத்தும் சூன்ய இருட்டே !

அறிவியல் என்பது வாழ்க்கையை நாம் நோக்கும் கண்ணாடி போன்றது. அதன் முக்கிய கூறாகவே பௌதீகவியல் விளங்குகின்றது. ஒவ்வொன்றையும், அது சார்ந்த இயக்கத்தையும் காரியங்களை வைத்துத்தேடிய காரணங்களினால் புரிந்துகொள்வதே பௌதீகம். வினைகளை, அவற்றினாலான விளைவுகளை வெற்றுக்கற்பிதங்களால் நியாயப்படுத்த முனையாமல், ஒவ்வொன்றையும் ஐம்பூதங்களின் கூறாக நோக்கி, அவற்றின் அடிப்படைகளை ஆதாரமாக வைத்துப் பகுத்துணர்வதே அது. அவ்வாறு பகுத்துணர்வதற்கான அறிவியல் விழிப்புநிலையே ஒவ்வொரு சமூகத்தினதும் மேம்பாட்டுக்கு அடிப்படையானது. தமிழர்களாகிய நாம் உட்பட தென்னாசியாவின் இத்தகைய பார்வைநிலைக்கு அடிப்படையாக நமது கடந்தகாலம் விளங்குகிறது.

**சு.ஞாலவன்**

தனிமனிதன் எதிர்நோக்கும் இன்ப-துன்பங்கள், போரியல் இடர்கள், இயற்கை அனர்த்தங்கள் என அனைத்தையுமே 'விதி' என வியாக்கியானம் செய்ய விழையும் சமூகக் கிருமிகளின் ஒப்புதல்களை, எந்த விதச் சங்கடமுமின்றிப் பிரபல்யப் படுத்தும் சில ஊடகங்களை எதிர்கொள்ள வேண்டிய கடப்பாடும் இக்கட்டுரைக்குக் காரணமாகின்றது.

ஐம்பூதங்கள் எனப்படும் நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்பனவற்றின் வெவ்வேறு வகையிலமைந்த கூட்டே நாம் வாழும் இவ்வு லகின் ஒவ்வொரு சடப்பொருளும், விலங்குகளும் என்கின்றன உபநிடதங்கள். நிலையற்ற வாழ்வின் மெய்ப்பொருளை நோக்கிய நம் மூதாதையரின் தேடல்களில் வெவ்வேறு தத்துவங்கள் கருப்பெற்றன. ஒரு சுடரிலிருந்து எவ்வாறு இன்னும் பல விளக்குகள் ஒளிபெற்றுப் பிரகாசிக்கின்றனவோ, அதேபோல் பிரம்மத்திலிருந்து சகலதும் உருவாகி மீண்டும் அதுவே ஆகின்றன, என் கின்றன உபநிடதங்கள். இதைத் தொடர்ந்து லோகாயுதம் புலன்களால் உணரப்படாத அனைத்தும் கற்பனையே எனக்கருதின. ஆகாயம் தவிர்ந்த ஏனைய 4 பூதங்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட லோகாயுதம் 4 பூதங்களின் விகிதாசாரச் சேர்க்கைகளினாலே சகலதும் உருவாகின என்றது. உடல் கூட இவ்வாறே தோன்றியதென்றும் அவ்வாறு 4 பூதங்களினதும் குறிப்பிட்ட கலவையின் போது இயற்கையாகவே உணரப்படும் ஒன்றே உயிர் எனவும் வாதிட்டது. நவீன அறிவியல் கூட உடலை மேற்கூறிய பூதங்களின் கூட்டாகவே விளக்குகிறதென்றாலும், பல கட்டங்கள் தாண்டி முற்றிலும் நுணுக்கமானதொரு தேடலில் இன்றைய ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். இதற்கு அடிப்படையாக மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே ஆறாமனதுடன் ஆய்வில் ஆழ்ந்த எமது முன்னோர்களின் தத்துவங்கள் துணைபோகின்றன.

தத்துவக் கட்டங்களின் நகர்வில் கிறிஸ்துவிற்கு முன்னைய நூற்றாண்டுகளிலே தனக்கு முன்னையவற்றின் குறைகளை நிவர்த்தி செய்துகொண்டு எழுந்ததுதான் சாங்கிய தத்துவம். அதன்படி நிலையான பிரகிருதியும், அதிலிருந்து காரணம் கருதிய காரியங்களாக மாற்றங்களுறும் ஏனையவையுமே உலகிலுள்ள யாவும்! ஆடையும், வீடும் காரணங்கள் கருதிய காரியங்களானால், அவற்றுக்கான பிரகிருதியாக நூலும், கல்லும் ஏனையவும் விளங்குகின்றன. புதிர்கள் நிரம்பிய உலக வாழ்வினை வெறுமனே சுகித்துச் செல்பவர்களாக அன்றி, விடை காண்பதற்கு அவாவுற்ற ஆயிரக்கணக்கானோரின் தத்துவப்பிழிவுகளே இத்தகைய கற்பிதங்கள் யாவும். திருவள்ளுவரும் சாங்கியத்தத்துவத்தினால் கவரப்பட்டவர் என்றே சில வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். இருந்தாலும் இவற்றில் ஒன்றைக் காண்பதற்கு நாம் தவறிவிடக்கூடாது. ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு தத்துவங்கள் மேலோங்கி நின்றதுடன், அதிலுள்ள குறைகள் இனங்காணப்பட்ட மாத்திரத்தே புதிதான ஒன்று பற்றிய தேடல் இயல்பாகவே அக்காலத்தைய சமூகத்தில் தோற்றம் பெற்று, வளர்ந்திருக்கிறது. அதாவது இருளின் போதனைகளை 'இது மாற்ற முடியாதது' என எவரும் ஏற்றுக் கொள்ளத்தலைப்படவில்லை. மாறாக ஒவ்வொன்றையும் ஐயந்திரிபுற அறிவிக்கும் ஒரு அறிவு நோக்கி நகர்பவர்களாகவே அவர்கள் இருந்தார்கள். ஒவ்வொரு காலகட்டத்திலும் ஆதாரங்களுடன் கற்பிக்கப்பட்ட யாவும் அறிவியல் நோக்கிய ஏணிப்படிகளே அன்றி முடிந்தமான முடிவுகள் அல்ல. ஏனென்றால் அறிவு என்பது விரிவு நோக்கிய நகர்வுடன் கூடியதே தவிர, அசையாத சூன்யநிலை அன்று.



ஒருகாலத்தில் புதிய பல தேடல்களுடன் வளர்ந்து வந்த நமது அறிவியல் வேர்கள் ஆரிய மேலாதிக்கம், நிலப்பிரபுத்துவம், காலனித்துவம் என பலவற்றின் பிடியினில் அகப்பட்டு, சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்தும் ஒருசிலரின் விருப்புகளுக்கு ஏவல் செய்யும் வகையிலான தேக்கநிலையை அடைந்தது. அறிவியலின் இன்றியமையாத 'நகர்வு' ஸ்தம்பிதம் அடைந்தது. பிரம்மம் சுடரைப் போன்று புதிதாய் பல சுடர்களை உண்டாக்க வல்லதென்ற உபநிடதக்கருத்து ஒரு காலத்தில் வலிமையான வியாக்கியானமாக இருந்தாலும், எண்ணெய்யிலுள்ள காபன், வளியிலுள்ள ஒட்சிசனோடு சேர்ந்து, நிலை மாறுவது குறித்து அங்கு பேசப்படவில்லை. இன்றும் ஐம்பூதங்களின் அசாதாரண ஆற்றலின் வெளிப்பாடே சுனாமியெனப் பிரசங்கித்துப் பிழைக்கும் இழிவானவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இயற்கையை மனித இனமாகிய ஹோமோசாப்பியன்ஸ் [illegible] முற்பட்ட காலத்திலிருந்தே வணங்கி வந்துள்ளோம்-கட்டுக்கடங்காத அதன் ஆற்றலினால் அச்சமுறும் வேளையிலெல்லாம் வேள்விகள் செய்துள்ளோம். ஆனாலும் இயற்கை என்றுமே உயிரினத்தின் எதிரியாய் இருந்ததில்லை. அமீபாவிலிருந்து டைனோசர்கள் வரை எல்லாவற்றையும் உருவாக இடம்கொடுத்தது மட்டுமன்றி, உயிரினங்கள் அனைத்திலும் ஆற்றல் மிக்கவனாக மனிதனைத் தேர்ந்தெடுத்ததும் இயற்கையே! அதற்காக இயற்கை ஒன்றும் வாய்க்குள் வந்து கனிந்துரியும் வாழைக்கனி அல்ல! மாறாக அவிழ்த்துக்கொண்டே இருக்க வேண்டிய புதிர்!!

கட்டுரையின் ஆரம்பத்தில் நாம் பார்த்த அஹ்மதாபாத் கணனி-மென்பொருள் வடிவமைப்பாளரை மீண்டும் பார்ப்போம் உலகைப் பௌதீக இயக்கங்களின் அரங்கமாக ஏற்று ஆராய்ந்த அறிவியலின் பெறுபேறுகளில் முக்கியமான ஒன்றாகிய கணனியைக் கற்றுத் தேர்ந்த அவர் தனது அந்தஸ்துக்கான அடிப்படையாக மட்டுமே அதைக்கையாள்கிறார். மற்றையபடி ஆதிகாலத்தின் குகைவாழ் உயிரினத்திலிருந்து எந்தவித அறிவியல் கூர்ப்பையும் அவரைப் போன்றவர்கள் அடைந்துவிடவில்லை என்றே கூற வேண்டும். அறிவியல் என்பது ஏதோ பகட்டும் பந்தாவும் அல்ல!

(20 ஆம் பக்கம் பார்க்க..)



ஐக்கிய நாடுகள் சபையின் கட்டடம்

# கிளிங்டன் ஏன் சந்திரிகாவைப் பலப்படுத்த வேண்டும் என்று சொன்னார்?

கொழும்பில் பில் கிளிங்டன் ரி.ஆர்.ஓவின் பணிப்பாளருடன் கைகுலுக்கியுள்ளார். ஆனால் வன்னிக்கு வரவில்லை. இதே சமயம் செய்தியாளருடன் கதைத்தபோது வன்னிக்கு வர விருப்பம் என்று கூறி யுள்ளார். சுனாமியின் நேரடி விளைவுகளில் ஒன்றாக ரி.ஆர்.ஓ சர்வதேச அரங்கில் தவிர்க்கப்படவியலாத ஒரு அமைப்பாக எழுச்சிபெற்றிருக் கிறது. இந்த யதார்த் தத்தைப் பிரதிபலிப்ப தாகவே கிளிங்டனும் கொபி அனானும் ரி.ஆர்.ஓ. பணிப் பாளரை சந்தித் தமை என்பதை எடுத்துக்கொள்ள வேண்டும்.

ரி.ஆர்.ஓவை அவர்கள்



வருகின்றார். கண்டியில் நடந்த உதவிவழங்கும் நாடுகள் கூட்டத்தி லும் அப்படியொரு தோற்றம் வரக் கூடிய விதத்தில்தான் உரை நிகழ்த்தினார்.

ஆயின் கிளிங்டனும் ஜப்பானும் ஏனைய மேற்குநாடுகளும் இந்தத் தோற்றத்தை நம்புகின்றனவா? அல்லது சந்திரிகா சமாதானத்திற்கு விசுவாசமில்லை என்று நன்கு தெரிந்து கொண்டபின்பும்

அவர்கள் ஏன் அப்படி நம்புகி றார்கள்? இதற்கு முக்கியமாக இரண்டு காரணங்கள் இருக்கமுடியும். முதலாவது கடந்த சுமார் மூன்று ஆண்டுகளுக்கு மேலான யுத்த நிறுத்தத்தின் விளைவாக இலங் கைத்தீவின் கவர்ச்சி ஒப்பீட்டளவில் முன்னெப்பொழுதையும்விட அதிகரித் திருக்கிறது. குறிப்பாக சுனாமியோடு அந்தக் கவர்ச்சி மேலும் அதிகரித்தி ருக்கிறது. இந்நிலையில், பிராந்திய மற்றும் உலகளாவிய நலன்கள் அவை சார்ந்த போட்டிகள் என்ப வற்றின் அடிப்படையில் கொழும் பிலுள்ள அரசாங்கம் எதுவாயினும் அதோடு ஒத்துப்போகவேண்டிய ஒரு யதார்த்தம் மேற்குநாடுகளுக்கு உண்டு. கொஞ்சம் இறுக்கிப் பிடித் தாலும் கொழும்பு இந்தியாவிடம் போய்விடும், அல்லது சீனாவிட மாவதுபோகும்.

அதிலும் குறிப்பாக கனவான் அரசியலுக்குரிய நாகரிகங்களை உதறித்தள்ளிவிட்டு தன்வழியில் போகும் சந்திரிகா போன்ற ஒரு தலைவியை அதிகம் தனிமைப் படுத்துவதோ அல்லது எரிச்சலடை யவைப்பதோ சில சமயம் நிலைமை களை கையாளக் கடினமான ஏதும் வளர்ச்சிக்கு இட்டுச் சென்றுவிடக்கூடும் என்று அஞ்சவும் இடமுண்டு. இது முதலாவது காரணம்.



ஆவணங்கள் போதும் என்று சுட்டிக் காட்டியதாக சண்டேலீடர் பத்திரிகை கூறுகின்றது.

எஸ்.பி.திஸநாயக்காவை விடுவிப்பதற்காக முன்பு யூ.என்.பி பெரிய போராட்டங்களுக்கு முஸ்தீபு போட்டது ஆனால் பிறகவற்றை கைவிட்டுவிட்டது. ஏனென்று ஒரு கொழும்புவாழ் தமிழ் எம்.பியிடம் கேட்டேன். அவர் சொன்னார்... யூ.என்.பி காரர்களின் ஊழல்கள் பற்றிய ஆவணங்கள் முழுவதும் சந்திரிகாவிடம் உண்டாம். யூ.என்.பி அளவுக்கு மிஞ்சிப்போனால் சந்திரிகா சில யூ.என்.பி பிரதானிகளை தூக்கி

முன்வந்தது? சந்திரிகாவுடன் மோதமுடியாது என்ற தோல்வியு ணர்வினாலா?

அப்படித்தான் யோசிக்க வேண்டி யிருக்கிறது. சந்திரிகா எளிதில் அசைக்கப்பட முடியாதவர்போல காணப்படுகிறார். ஆட்சியதிகாரத்தை தக்கவைப்பதற்காக வெட்கம், துக்கம், நாகரிகம் எதுவுமின்றி அவர் மேற்கொள்ளும் வழிமுறைகள் அவரைத் தொடர்ந்தும் பலமானவராக வைத்திருக்கின்றன. எனவே அடுத்த சனாதிபதித் தேர்தல் வரைக்கும்- அதற்கிடையில் அவர் ஏதும் அரசிய லமைப்புக் குறுக்குவழிகளைக் கண்டு பிடிக்கவில்லை என்றால்- பொறுத் திருக்கவேண்டிய ஒரு தேவை மேற்குநாடுகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. சந்திரிகாவைத் தவிர அவர்களுக்கு

ஓரளவிற்கு அங்கீகரிப்பது தெரிகிறது. ஆனால் இப்போதைக்கு வன்னிக்கு வரத்தான் தயாரில்லை. அதாவது புலிகளை மட்டுப் படுத்தப்பட்ட அளவில் அங்கீகரிக்கவே அவர்கள் தயார். ஆனால் அதே சமயம் அரசாங்கத்தையும் அணைத்துக்கொண்டு போவதே அவர்களின் மூலோபாயமாய் இருக்கிறது.



கிளிங்டனின் அண் மைய விஜயத்தின்போது அவர் சந்திரிகாவைப் பாராட்டியிருக்கிறார். அரசி யலில் சந்திரிகா செய்த தியாகங்களைப் பற்றியும் பிரஸ்தாபித்திருக்கிறார். கணவனைக் கொல்லக்கொடுத்தது, ஒருகண்ணை இழந்தது போன்றவற்றைச் சுட்டிக் காட்டி அவரைப் பலப்படுத்தவேண்டும் என்றும் கிளிங்டன் கூறியிருக்கிறார்.

சந்திரிகாவைப் பலப்படுத்தினால் சமாதானத்தைப் பலப்படுத்தமுடியாது என்பதே இலங்கைத்தீவின் இப்போ துள்ள அரசியல் யதார்த்தமாகும். ஆயின் கிளிங்டன் ஏன் சந்திரிகாவைப் பலப்படுத்துமாறு சொல்கிறார்? அண்மையில் ஜே.வி.பி பிரதானிகள் ஜப்பானுக்குச் சென்றிருந்தார்கள். அவர்களை அங்கே விருந்தினர்களாக அழைத்ததன் மூலம் சமாதானத் துக்கு ஆதரவாக அவர்களுடைய மனதை மாற்றுவதே ஜப்பானின் உள்நோக்கம் என்று கூறப்படுகின்றது. ஆயின் ஜே.வி.பிதான் சமாதானத் துக்குத் தடையா? சந்திரிகா தடை யில்லையா?

அப்படியொரு தோற்றத் தைத்தான் சந்திரிகா காட்டி

அவர்கள் தவிர்க்கவியலாதபடி சந்திரிகாவை அரவணைத்துக் கொண்டு போகவேண்டியிருக்கிறதா? இதில் எது சரி?

இரண்டாவதே சரி. அவர்க ளுக்கு சந்திரிகாவின் உள்ளடக்கம் எதுவென்று நன்கு தெரிகிறது. ஆனால் அதே சமயம் சந்திரிகாவை முற்றுமுழுதாக தனிமைப்படுத்தினால் காரியத்தை கொண்டுநடத்த முடியாது என்றும் அவர்கள் நம்புகிறார்கள்.

கடந்த சுமார் மூன்று ஆண்டு களுக்கு மேலான கால சமாதான முயற்சிகளுக்கு ஊடாக நோர்வே பெற்றிருக்கும் ஒரு மனப்பதிவு நிச்ச யமாக ஏனைய மேற்குநாடுகளுடன் பரிமாறப்பட்டே இருக்கும். எனவே அவர்கள் சந்திரிகாவை நம்புகி றார்கள். அல்லது அவர்கள் ஏமாறு கிறார்கள் என்பதைவிடவும் சந்திரி காவுடன் ஒத்துப்போனால்தான் நிலைமைகளைக்கையாளலாம் என்று நம்புகிறார்கள் என்பதே சரி.

இரண்டாவது காரணம், கொழும் பில் தற்சமயம் காணப்படும் தலைவர்களில் ஆட்சித் தந்திரம் மிக்க வராக சந்திரிகாவே காணப்படுகிறார் என்பது. தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்க அவர் கையாளும் வழி முறைகள் கீழ்த்தரமானவையாயும், அருவருப்பானவைகளாயும் இருக் கின்றனதான். ஆனால் எதை எப்படிச்செய்தாலும் அவர்தான் ஆட்சி யதிகாரத்தை தக்கவைத்துக்கொண்டி ருக்கிறார். தனது அரசியல் எதிரிகளை எப்படியோ சமாளித்து வருகிறார்.

ஹெலஉறுமயவை உடைத் தது, முஸ்லிம் காங்கிரசை உடைத் தது, தொழிலாளர் காங்கிரசை தம்வசப்படுத்தியது, எஸ்.பி.திஸ நாயக்காவை சிறையில் போட்டது, இதுவரையிலும் ஜே.வி.பி

**நிலாந்தன்**

தன்னைவிட்டுப்போகாதபடி பார்த்துக் கொள்வது போன்ற எல்லாவற்றிலும் அவர் எத்தகைய வழிமுறைகளைக் கையாண்டாலும் தொடர்ந்து ஆட்சி யதிகாரத்தை தக்கவைத்துக்கொண்டி ருக்கிறார் என்பதே இங்கு கவனிக்கப் படவேண்டியது.

அண்மையில் கண்டியில் அவர் ஜே.வி.பியை சாடி உரைநிகழ்த்திய தைத் தொடர்ந்து ஜே.வி.பி முறுகிக்கொண்டு சில கடும் நடவ டிக்கைகள் எடுக்க முற்பட்டது. அப் போது சந்திரிகாவால் பதவி உயர்வு தரப்பட்ட ஒரு பொலிஸ் உயரதிகாரி ஜே.வி.பி முக்கியஸ்தர் ஒருவரை சந்தித்திருக்கிறார். ஜே.வி.பி தலைவர் களின் ஊழல்கள் பற்றிய ஆவணங் களின் பிரதிகளை அந்த முக்கியஸ் தரிடம் காட்டிய மேற்படி பொலிஸ் அதிகாரி நீங்கள் ஆட்சியிலிருந்து வெளியேறினால் உங்களுடைய தலைவர்களை உள்ளே தள்ள இந்த



உள்ளே போட்டுவிடுவார் என்ற அச்சம் காரணமாகவே பெருமளவு யூ.என்.பி காரர்கள் எஸ்.பி.திஸநாயக்காவை விடுவிக்கும் போராட்டத்தில் பெரிய கவனம் செலுத்தவில்லையாம்.

இதில் மிலிந்த மொறகொட அண்மையில் ஒரு நகர்வை மேற் கொண்டிருந்தார். சந்திரிகாவைக் கண்டுகதைத்து எஸ்.பியை விடு விப்பதற்காக பேரம் பேசுவதே அந்தச் சந்திப்பின் நோக்கம் என்று கூறப் பட்டது. ஆனால் சந்திரிகா மசிந்து கொடுக்கவில்லை. இதில் எஸ்.பியை விடுவிப்பதில் மொறகொடவுக்கு வேறு உள்நோக்கங்கள் இருக்கலாம் என்று அஜித் சமரநாயக்க கூறுகிறார். எஸ்.பி நீண்டகாலம் சிறையிலி ருந்துவிட்டு வெளிவரும்போது சிறைமீண்ட தியாகியாகிவிடுவார் என்றும் அதனால் யூ.என்.பி க்குள் தற்சமயம் இரண்டாவது அல்லது மூன்றாவது இடத்திலிருக்கும் மிலிந்த மொறகொடவுக்குப் போட்டியாக அவர் எழமுடியும் என்று அஞ்சியே மொற கொட சந்திரிகாவுடன் பேரம்பேசி யதாகக் கூறப்படுகிறது.

எதுவோ மொறகொடவின் முயற்சி இப்பத்தி எழுதப்படும் நாள் வரை பலனெதையும் தரவில்லை. இதில் ஒரு விஷயம் தெளிவாகத் தெரிகிறது. போராடப்புறப்பட்ட யூ.என்.பி ஏன் சமரசத்துக்கு

வேறு தெரிவு இல்லை. எனவே அவரைப் பலப்படுத்துவது பற்றி அவர்கள் கதைக்கவேண்டியிருக் கிறது.

ஆனால் அவர்கள் இன்னொரு தரப்பைப் பலப்படுத்தலாம் அதுதான் புலிகளின் தரப்பு. ஆனால் இது விசயத்தில் அவர்கள் வரைய றைகளை வைத்துக்கொண்டிருக்கி றார்கள். இப்படி வரையறைகளை வைத்துக்கொண்டு சந்திரிகாவை பலப்படுத்துவதென்பது இதுவரை யிலும் எதைப்பெற்றுத் தந்திருக்கிறது என்று தமிழர்கள் கேட்க வேண்டிய வேளை வந்துவிட்டது. இந்தக் கேள்விக்கு விடைகிடைக்கப் பிந்தும். ஏதோஒரு கணத்தில் தமிழர்கள் மேற்குநாடுகளின் அங்கீகாரத்துக் காகக்காத்திருப்பதால் பலனேது மில்லை என்று விரக்தி வசப்படும் ஒரு நிலைக்கு செல்வார்களாயிருந் தால், அல்லது இந்த யுத்தநிறுத்தம் எனப்படுவது தமது போர்த்திறனை நீர்த்துப்போகச்செய்யும் ஒரு கால இழுத்தடிப்பே என்று அவர்கள் சந்தேகிப்பார்களாயிருந்தால், கடந்த சுமார் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக நிலவிவரும் இலங்கைத்தீவின் மிகநீண்ட மிக அபூர்வமான இந்த யுத்தநிறுத்தத்தை பாதுகாக்கமுடியாது போனாலும் போகலாம்.

# இடர்களுக்கு மத்தியில் சிறாட்டிக்குளம் கிராமம்





மல்லாவியிலிருந்து பாண்டியன் குளம் நட்டாங்கண்டல் ஊடாக சிறாட்டிக்குளம் எனும் கிராமத்திற்குச் சென்றோம். நான்கு பக்கங்களும், அடர்ந்த காடுகளால் சூழப்பட்ட அக்கிராமத்திற்குச் செல்லும் பாதை காடுகளின் ஊடாக விறகுகள வெட்டுவதற்காக உழவு இயந்திரங்கள் செல்வதற்கு அமைக்கப்பட்ட பாதை போன்று உள்ளது. குன்றும், குழியும் இல்லாத இடமே இல்லை. இப்பாதையின் பயணம் தொடர்பாக ஒரு பெரியவர் கூறும்போது, பிரசவத்திற்காக ஒரு பெண்ணை மருத்துவ மனைக்கு இப்பாதையால் அழைத்துச் சென்றால் வழியிலேயே பிரசவம் நிகழ்ந்துவிடும் என்கிறார். அப்படியாயின் அப்பாதையின் நிலையை நீங்களும் ஒருமுறை கற்பனை செய்து பாருங்கள். இதை விட ஒரு பாலம் ஆற்றின் கொள்ளளவு, அமைவு என்பவற்றுக்கு எந்த விதத்திலும் ஏற்றவாறு அமைக்கப்படவில்லை. ஏதோ கடமைக்கு அமைக்கப்பட்டது போன்றே எண்ணத் தோன்றுகின்றது அதுதான் உண்மையும் கூட. சிறாட்டிக்குளம் மக்கள் மனதில் அவர்கள் வாழ்வில் மறக்க முடியாத துன்பியல்கரமான சம்பவங்களை ஏற்படுத்தியதுண்டு. இந்த பறங்கி ஆற்றுக்கும், அதன் பாலத்திற்கும்.

மேலும் யானைகளின் நடமாட்டம் இருப்பதனை மக்களிடம் கேட்கத் தேவையில்லை. வீதிகளில் காணப்படும் லத்திகள் தெளிவாகவே காட்டுகின்றன. யானையின் தாக்குதலுக்கு இலக்காகிப் பலர் இறந்திருக்கின்றனர். அண்மையில் கூடஒரு வீட்டினைச் சேதப்படுத்தி களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த நெல்களை தின்றுவிட்டதாகக் கூறுகின்றனர்.

45 குடும்பங்கள் வாழ்கின்ற சிறாட்டிக்குளம், பாண்டியன்குளம் உதவி அரச அதிபர் பிரிக்குட்பட்டதும், முல்லைத்தீவு மாவட்டத்திற்குச் சொந்தமான எல்லைக் கிராமம். ரணகோச இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து பின் மீளக் குடியேறிய மக்கள். இவர்களின் பொருளாதாரம் விவசாயம் குறிப்பாக நெல், மற்றும் மக்கள் கூலித்தொழிலையும் மேற்கொள்கின்றனர். வாழ்க்கைத்தரம் பின் தங்கிய நிலையிலே உள்ளது. அக்கிராமத்தில் உள்ள அனைத்து வீடுகளும், ஒரு வகைப்புல்லினாலேயே வேயப்பட்டிருக்கின்றன. நிரந்தரமில்லாத நகரத்து ஆடம்பரமோ, இரைச்சல்களோ அமைதியற்ற சூழலோ இல்லை. மாறாக எளிமையான, அமைதியான இயற்கையான பல்வேறு பறவைகள் எழுப்புகின்ற ஒலிகளைத் தவிர வேறு எந்த ஆரவாரமும் அற்ற ஒரு வகையான அமைதியான அழகான கிராமம் சிறாட்டிக்குளம்.

சிறாட்டிக்குள மக்கள் தாங்கள் பெற்றிருக்கின்ற கல்வியறிவினை விட நிறைய பண்புகள், வரவேற்று உபசரிக்கும் பண்பாடு போன்ற நல்ல பழக்க வழக்கங்கள் மிகுந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இங்குள்ள மக்கள் தங்கள் வாழ்வில் அடிப்படைத்தேவைகளைத் தவிர (அதுவும்கூட பெரும் சிரமத்திற்கு மத்தியில் பூர்த்தி செய்து கொள்கின்றனர்) வேறு எந்த வசதிகளும் அற்றே காணப்படுகின்றனர்.

தரம் ஐந்துவரை கொண்ட ஒரு பாடசாலை, தபாலக வசதி இல்லை, ஆரம்ப சுகாதார நிலைய வசதிகள் இல்லை, தொலைக்காட்சி வசதிகள் இல்லை, இரண்டு நூற்றாண்டுக்கு முன் கண்டு பிடிக்கப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டியை இயக்க முடியாத அளவிற்கு தொழில்நுட்ப அறிவு, தொடர்பாடல்கள் பண்டைய காலமுறை போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கும் மத்தியில் அக்கிராம மக்கள் வாழ்ந்து வருகின்றனர். வேறொரு சமூக மக்கள் நாளுக்கு நாள் புதிய புதிய நாகரிகம், புதிய புதிய தொழில்நுட்பம் போன்றவற்றின் பயனை அனுபவிக்க அக்கிராமத்து மக்கள் ஏதோ வாழ்ந்தால் போதும் என்ற நிலையிலுள்ளனர்.



சிறாட்டிக்குள மக்கள் அப்பாவிகளாக உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து தங்கள் வாழ்க்கையைச் செலுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

இதைவிட இக்கிராமத்து மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கேட்டறியும் நோக்கில் சிறாட்டிக்குள கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் மு.யோகராசா அவர்களைச் சந்தித்தோம்.

எங்களுடைய பிரச்சினைகள் என்னவென்றால் ஒன்று வீதிப்பிரச்சினை, முக்கியமாகப் பாலம், அடுத்து வயல் நிலப்பிரச்சினைகள் அதாவது இந்தப் பிரதேசத்தில் இருக்கின்ற மூப்பங்குளத்திற்குக் கீழ் நெல் பயிரிடக்கூடிய 150 ஏக்கர் வயல் நிலங்கள் பற்றை வளர்ந்து போய்க் காணப்படுகின்றன. இதனை இங்குள்ள மக்களுக்கு பகிர்ந்தளித்தால் மிகவும் உதவியாக இருக்கும். ஆனால் அதிகாரிகளோ இன்று வரைக்கும் எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. நாங்கள் கடந்த இரண்டு மூன்று வருடங்களாக கேட்டுக்கொண்டே வருகின்றோம். தருவதாகக் கூறுகின்றார்களே தவிர இது வரைக்கும் ஒரு முடிவும் இல்லை என்கிறார் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்.

அத்தோடு கிராமத்தினைச் சேர்ந்த பல மக்களின் கோரிக்கையும் இது தான். பயிர் செய்யக்கூடிய நிலையில் இருக்கின்ற அவ்விளை நிலங்களை அந்த வறிய குடும்பங்களைச் சேர்ந்த மக்களுக்கு பகிர்ந்தளித்தால் பெரும் பயனை அம் மக்கள் பெறுவார்கள். பற்றைகள் வளர்ந்து எவருக்கும் தற்போது பயனின்றிக்கிடக்கும் அந்நிலங்களை சிறாட்டிக்குள மக்களுக்கு வழங்கினால் அவர்களின் வாழ்க்கைத் தரமும் ஓரளவுக்கு உயரும். எனவே இதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து அம்மக்கள் வாழ்க்கைத் தரமுயர சம்பந்தப்பட்டோர் வழி காட்டவேண்டும்.

இதைவிட அம்மக்கள் எதிர்கொள்கின்ற மற்றொரு முக்கியமான பிரச்சினை பறங்கி ஆறுப்பாலம், மழை காலத்தில் சிறாட்டிக்குள மக்கள் இந்த ஆற்றினை கடந்து எங்கும் செல்ல முடியாது. வெள்ளம் பல அடி உயரத்திற்கு பாய்வதனால் இந் நிலைமை. இதனால் அம்மக்கள் கடந்த காலங்களில் வெளித்தொடர்புகள் அற்ற நிலையில் உணவுப் பொருட்களை பெற்றுக்கொள்ள முடியாது பல நாட்கள் பட்டினியாகக் கிடந்த சம்பவங்களும் உண்டு. மேலும் மழை உள்ள காலங்களில் மாணவர்கள் மூன்றாம் தவணைப் பரீட்சைக்கு நட்டாங்கண்டல் பாடசாலைக்குச் செல்லமுடியாமல் சித்தியடையாத சம்பவங்களும் உண்டு. பாம்புகள் தீண்டினால் கூட மழை காலங்களில் சிகிச்சைக்காக இப் பாலத்தினைக்கடந்து வெளியில் செல்ல முடியாத ஓர் துர்ப்பாக்கிய நிலை இக்கிராம மக்களுக்கு உண்டு.



சிறாட்டிக்குள கிராம அலுவலர் மூன்று கிராமங்களை கவனிக்க வேண்டும் என்பதினால் மாதத்திற்கு இரண்டு மூன்று தடவைகளே இங்கு வந்து செல்கின்றார். இக்கிராம மக்களை கவனத்தில் எடுத்து அரச,அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பன உதவிகள் செய்யவேண்டும் என்பது குறிப்பாக பறங்கியாறுப் பாலம், வீதி என்பவற்றை புனரமைப்புச் செய்து கொடுப்பதோடு அவர்களது வயல் பிரச்சினைகளையும் தீர்த்து வைக்க வேண்டும் என்பதே அனைவரதும் வேண்டுகோள்களாக இருக்கின்றன.

-சுழியன்-



## விசுக்விசுக் விசாலாச்சி

என்னவாமடா திருக்கணாமலையார்.ங. அங்கால இஞ்சால கிளம்பின சத்தமெல்லாம் உமைக்கு மண்போட்டமாரி அப்பிடியே அடங்கீற்றுது. ம்... என்ன இருந்தாலும் ஜெயலலிதாவுக்கு இருந்தமாரித் துணிச்சல் எங்கடயம்மாவுக்கு வராது! [illegible] என்ன கெதியா பிரதான வீதியால கண்ணகி சிலைய எடுத்தெறிஞ்சா, இல்ல அங்கால வடக்கால எவ்வளவு கெதியா மகுதிய இடிச்சு ராமா ராமாண்டு வெளிக்கிட்டாங்கள். அந்தளவுக்கு யுத்தஞ்சரணங்கச்சாமியோட மோத ஏலுமோ இல்ல இதுக்கு முதல் அது மாதிரி ஏதும் நடந்ததோ. சும்மா ஏனடா ஒண்டும்நடவாதுடா. அந்த நாளயில எது ஆயிரத்தி தொளாயிரத்தி எண்பதில ஒரு சிங்கள மந்தி(ரி) சொன்னகதை தெரியுமே... தெரியாட்டிக் கேள், வடக்கிலும் கிழக்கிலும் ஏராளமான பௌத்த ஆலயங்கள் இருந்ததாம். அதெல்லாம் அழியுற ஆவத்தில இருக்கு எண்டெல்லே ஒரு ஆவேச உரை நடத்தினவர் ஆளார் தெரியுமே... வேறஆர் சிறில் மத்தியூவெண்டொருஆள், இப்ப அவரும் விலாசமில்லாமத்தான் போட்டார். உந்த புத்த விகாரையளெல்லாம் எங்க கிடைக்குது தமிழற்ற பாரம்பரிய நிலத்திலதான். இல்ல உதென்ன புதினமோ... இல்லத் தெரியாமத்தான் கேக்கிறன். தமிழர்தான் பௌத்த மதத்தில இருந்ததுக்கு போதுமான ஆதாரங்கிடக்கே. ஆதாரமேயில்லாம இவை அவுட்டுவிடுற கதையளிருக்கே முழுப் பூசணிக்காயத் தூக்கி சோத்துக்க புதைச்சமாரி. பின்ன என்னடா பொடியா புத்தர் நேபாளத்திலயுள்ள பீகார் மாநிலத்தில காயா எண்ட இடத்திலதான் பிறந்தவர். பின்ன அவர் சிங்களமே கதைச்சவர். அவர் உலவின காலத்தில சிங்களம் இருந்ததுக்கு ஏதும் சாட்சி இருக்கே. உப்பிடித் தான்ரா, வவுனியாவில புத்தர் சிலை வச்சநேரமும் நாங்கள் கத்திகட்டிக் கொண்டு போகாட்டியும் கத்திக் கத்திச் சண்டைபிடிச்சனாங்கள். பின்ன அந்த நாளையில அதி உத்தம சனாதிபதி ஜயவர்த்தனா எங்கட தமிழ்த் தலைவர்மாரைக் கூப்பிட்டுக்கதைச்சு நீங்கள் ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ. இந்தா நான் எடுப்பிச்சுப் போடுறனெண்டவர். இப்ப எப்பிடி நாலடிவச்ச சிலைய மனிசன் வாக்களிச்சமாதிரி பிழைவிடாம எடுத்துப்போட்டு அந்த இடத்த உந்தப்பத்தடி சிலைய வைச்சுவிட்டார். என்ன புடுங்கி அடுக்கிறதே... ங... "ஆனையட மயிரை ஆரால புடுங்கேலும்..."

காணுங்காணாததுக்கு வவுனியா சமளங்குளத்தில இப்ப இருக்கிற கல்லுமலைப் பிள்ளையார் கோயிலக்கட்ட ஊருச்சனம் சிரமதானஞ் செய்ய வந்து ஒட்டுமொத்தமா அள்ளிப் பொலுசுற்றேசனுக்குக் கொண்டுபோனவங்கள். கொண்டே அது பழைய புத்தவிகாரை அதைத்தோண்டப் போறம்- எண்டு ஆப்புகள், பொல்லுகள் வல்லீட்டியளெல்லாங்கொண்டு இறங்கி அந்தப் பகுதியச்சுத்தி முள்ளுக் கம்பியடிச்சாங்கள், தோண்டினாங்கள், என்ரரெண்டு கண்ணான அதுக்கால வந்த அரையடி அம்மன் சிலைய சமணத்தெய்வமெண்டாங்கள். முறைப்படி கட்டின கோயிலுக்க சனம் கும்பிடப் போப்படாது எண்டாங்கள். பிறகென்ன உப்பிடி கொஞ்ச நஞ்சத்தில்லு முல்லே-யாழ்ப்பாணப் பட்டிணத்துக்க ஒரு பௌத்த சின்னம், கரவெட்டி ராசகிராமத்துக்க ஒரு புத்தர், காங்கேசன்துறையில ஒருவிகாரை, பிறடறிக் கோட்டையில ஒண்டு, மூதூரில ஒண்டு, ஆனையிறவு,மாங்குளம், மன்னார், மடுறோட்சந்தியில ஒருவிகாரை, விளங்கினதே எங்கத்தயில் விகாரையளை இப்பகாணேல்லயெண்டு எல்லாத்துக்கும் கை முந்த வேணுமடா அந்த நாளையில ஆனையிறவில தீச்சுவாலையில போட்டமாரிக் கைமேல கம்மாரிசடிக்கயில்லயோ, பின்னால புத்தர் அவருக்கு கோயில் விகாரை, அதைப் பராமரிக்க,பிக்கு அவரைப்பராமரிக்க சனம், சனத்தப் பராமரிக்க நிலம், நிலத்தை ஆளக் கச்சேரியெண்டு, வரிசை வம்மையா எல்லாம் நடக்குமாடா. உப்பிடித் தானே மணலாறு தொட்டு குமரேசன் கடவை கொக்கச்சான் குளம் எண்டு கொஞ்ச இடமே குடுத்திட்டியள். நீ ஆயிரஞ்சொல்லு அடியப்போல அண்ணன் தம்பி உதவான். அதை விட்டிட்டு துவங்கின ஆர்ப்பாட்டத்தையும் தொட்டில்ல போட்டாட்டியாச்சு.


# மாலதி படையணியின் தொடர் பயணம்...



குனியாத நிலைதந்து பணியாத பலம் தந்த மாவீரர் மறவர் முன் சுடரேற்றும் சூரியன்.



இலக்குத்தவறா சிகரம் தலைவன்-நாளை தமிழீழம் வெல்வான் முதல்வன்.



குறிபார்த்து தலைமையும் தளபதிகள் பலபேரும் இலக்குகள் தவறாது இப்போதும் எப்போதும்..



வேரினைச்சூழ்ந்து விழுதுகள் கூட்டம் முகங்களிலெல்லாம் உவகையின் ஓட்டம்.



படைநடத்தி பகைவென்ற தலைவி இனியும் பகைவெல்லும் நினைவோடு பரிசுபெற்றாள்.



சுட்டிய இலக்கை சட்டெனச்சுட்டு சுட்டிப்பெண் இவள் பெறுகிறாள் பரிசு.

2001 காலப்பகுதி, வரலாற்று சிறப்பு மிக்க குடாரப்பு தரையிறக்கத்திற்கு சில நாட்களே இருக்கையில் 2 ஆம் லெப்.மாலதி படையணிப்போராளிகளை தேசியத்தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள் சந்தித்தபோது.... சண்டை நடக்கும் பொழுதுகளில் அவசரப்பட்டு குப்பி கடிக்கிறதை தவிர்த்துக்கொள்ளவேணும். உங்களுக்குள்ள போர் அறிவையும் தந்திரத்தையும் பயன்படுத்தி விரைவாக முடிவெடுத்து அந்த இக்கட்டில் இருந்து மீளும் வழியை முதல்ல சிந்தியுங்கோ. எதிரியை எப்பிடியாவது வீழ்த்தும் வழியை தேடுங்கோ. அப்படி எதுவும் செய்யமுடியாதகட்டம் வருமென்றால் உயிரோட பிடிபடப் போறீங்கள் அதை தவிர்க்கவே இனி வழி இல்லை என்கிற நிலை வந்தால் மட்டும் குப்பி கடிக்கிற முடிவை எடுங்கோ....

குடாரப்பு தரையிறக்கம் வெற்றிகரமாக முடிவடைந்து சண்டை தொடர்ந்துகொண்டிருந்த பொழுதொன்றில் கப்டன் யசோ தனித்து போகிறாள். 40 m.m ரக ஆயுதத்தை தாங்கிய வண்ணம் தனது காவலரணில் இருந்து அவசர பணி ஒன்றிற்காக பின்தளம் நோக்கி நகர்ந்த வேளை பதுங்கித்தாக்குதலுக்காக மறைந்திருந்த இரு இராணுவத்தினரை கையெட்டும் தூரத்தில் திடீரென எதிர்கொள்கிறாள். 40.m.m ஐ இயக்கும் தூர இடைவெளி இல்லை என்பதை கணப்பொழுதில் தீர்மானிக்கிறாள். அதன் அடிப்புறத்தால் ஒருவனது தலையில் ஓங்கி ஒரு அடி அதிலேயே அவன் சுருண்டுவிழ, செய்வதறியாது அடுத்தவன் அதிர்ந்து நிமிர்வதற்கிடையில் அவனுக்கு அடுத்த அடி... இருவரும் பிணமாக. அவசரப்பட்டு குப்பிகடிக்கவேண்டாம்.... என்ற தலைவரின் வார்த்தைகள் நினைவில் மீண்டும் மீண்டும் மோத தன் அணியினை சந்தித்த அந்தப்போராளி அவன் திடீரென்று வந்து மடக்கின உடன அண்ணை சொன்னதுதான் ஞாபகம் வந்தது அதால இரண்டுபேரை கொன்று நானும் தப்பி



வந்திட்டன் நீங்களும் இதில கவனமா இருங்கோ பிள்ளையள் அப்பதான் நாங்கள் வெல்லுவம். பிளாட்டூன் ஒன்றின் சிறந்த அணித்தலைவியான அவள் பின்னர் இத்தாவில் பகுதியில சண்டையொன்றின்போது தன் அணியை வெற்றி நோக்கி வழி நடத்தி வீரச்சாவை தழுவிக்கொள்கிறாள். அன்று அந்தப் போராளி எடுத்த முடிவும் அதேவகையில் நடந்த சிறுசிறு நிகழ்வுகளும் சேர்ந்தே ஆனையிறவையும் யாழில் ஒரு பகுதியையும் அன்று மீட்டது.

அது அன்றும். இன்றும் மாலதி படையணிக்கு மீண்டும் தலைவருடனான ஓர் சந்திப்பு. ஓரிரு நாட்கள் மட்டுப்படுத்தப்பட்ட சந்திப்பல்ல பல நாட்கள் தொடர்ந்த சந்திப்பு. குறிப்பிட்ட ஓரிடத்தில் ஒன்றிணைக்கப்பட்டு விளையாட்டுப் போட்டி, சூட்டுப் போட்டி, கடந்த கால போரனுபவம் சார்ந்த கலந்துரையாடல்கள் என போராளிகளை உற்சாகப்படுத்த பல்துறைசார்ந்த அவர்களது திறமைகளை வெளிப்படுத்த உருவாக்கப்பட்ட அந்த சூழ்நிலை பல நாட்கள் நீடித்த ஒன்று. தலைவனாய் மட்டும் இருந்து விடாமல் ஒரு தாயாகவும் நண்பனாகவும் அண்ணனாகவும் மாறி தனது பெருமளவான நேரத்தை ஒதுக்கி மாலதி படையணியினரோடு கலந்திருந்த நாட்கள். போராளிகளால் மறக்கப்படவே முடியாதபொழுதுகள் அவை ஒவ்வொன்றும். எத்தனை ஆயிரம் வேலைகள் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய தலையாய பிரச்சினைகள் சண்டைக்காலத்தை விடவும் சமாதான காலத்தே அதிகம் இருந்தபோதும் தமக்காக அண்ணன் நேரம் ஒதுக்கியதென்பதில் அவர்களுக்கு சொல்லில் அடங்காத பெருமை, மகிழ்ச்சி, நிமிர்வு என ஒரு கூட்டுக்கலவை உணர்வு.

சுட்டெரிக்கும் கடுங்கோடை என்பதால் அவர்கள் குடிக்கும் தண்ணீர் குளிர்மையானதாய் சுத்தமானதாய் இருக்கவேண்டும் என்பதில் இருந்து வழமையான வழங்கல் பகுதி உணவு நிறுத்தி அவர்களுக்கான உணவு வழங்கல் சிற்றுண்டிகள் ஒழுங்குபடுத்தல் என அனைத்தையும் தானே நேரடியாக பொறுப்பேற்று அவர்களது ஒவ்வொரு நிகழ்வையும் அருகே இருந்து பார்த்து சரி, பிழை சொல்லி பாராட்டி,கைதட்டி, குதூகலித்து, கடந்தகால சண்டைகளின்போது ஏற்பட்ட சின்னச்சின்ன பின்னடைவுகள், தாமதித்தல்கள் பற்றிய அவர்களது கேள்விகளுக்கும், போர்ப்பயிற்சிகளின்போது ஏற்படும் சந்தேகங்களுக்கும் விடையளித்து, சண்டைகள் தொடர்பான அவர்களது சிறிய சிறந்த உத்திகளுக்கு செவிமடுத்து... இது அந்த பெருந்தலைவனின் இன்னொரு பக்கம். உலகம் வியக்கும் அந்தப்பேராற்றல், எதிரியை கணத்துக்குக் கணம் கலங்க வைக்கும் அந்த போராற்றல் எத்தனை பெரிய துரோகத்தையும் தன் நுண்ணறிவால் தாண்டி தன் இலக்கில் உறுதியாய் நிற்கும் அந்த மகத்துவம் தன் தங்கைகளோடு அண்ணனாகி தன் பிள்ளைகளோடு தாயாகி...அந்தப்போராளிகள் பேறுபெற்றவர்களே.

அங்கு போட்டிகள் அனைத்திலுமே துப்பாக்கி சுடுவதிலும் கூட குறிபார்த்துச் சுடுவதில் தலைவன் புலி என்றால், தங்கைகள் சளைத்தவர்களாகி விடுவார்களா? அதிலும் அவரே அருகிருந்து



குறிபார்த்துச் சுட்டவள் தங்கை பெறுபேறு பார்க்கிறான் அண்ணன்.

பயிற்சிச் சூட்டில் ஈடுபடுவதும் அவர்களது சூட்டின் பெறுபேற்றை ஓடிச்சென்று பார்த்து ஆரவாரித்து, சிறப்புத் தகைமைகளுக்கு உடனுக்குடன் பரிசு கொடுத்தும் போட்டியாளர்களோடு தானும் ஒருவராகி உற்சாகப்படுத்துவதும் வழமையாயிருக்கும்போது வைத்த குறிதவறுமா அவர்களுக்கு?

விளையாட்டுக்களிலும் சரி, கலை நிகழ்வுகளிலும் சரி சண்டைகள், ஆயுதங்கள், பயிற்சிகள் பற்றிய கலந்துரையாடல்களிலும் சரி அவர்களுக்கிருந்த ஆற்றலும் திறமையும் குறிபார்த்துச் சுடுவதில் இருந்த தேர்ச்சியும், சிறப்புற நடைபெற்ற பரிசளிப்பும் தெளிவாய் உணர்த்தியது ஒன்றைத்தான் வலிமைமிக்க துடிப்பும் துணிச்சலும் நிறைந்த உற்சாகமும் வேகமும் சற்றேனும் குறையாத படைபலமொன்று தலைவனோடு இன்றும் இருப்பதுதான் அது. 'சமாதானம்' கடும் நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டிருக்கும் இந்தக் காலப்பகுதியில் படையணி ஒன்றின் ஒன்றுகூட்டலும் அதன் மனோபலம் உயர்த்



இலக்குத் தவறாதடிப்பாள் தங்கை குருவாய் அருகில் இருப்பான் அண்ணன்.



ஆர்.பி.ஜி எறிகணை ஏவிவிடும் புலி பகை ஏறும் டாங்கியின் நிலை ஏது இனி?

தப்பட்டு உற்சாகப்படுத்தப்பட்டிருப்பதும் காலத்தே செய்த பயிர் எனக் கொள்ளலே பொருத்தப்பாடாகும்.

அன்றைய அந்தச் சந்திப்பே பெரு வெற்றிக்குக் காரணமாய் அமைந்ததென்றால் இன்றைய இந்த பலநாள் சந்திப்பு எதை உணர்த்தத் தயாராகிறது?

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 03 . 06 . 2005
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

## திருந்தவே மாட்டார்கள்!

பொதுக்கட்டமைப்பு இதோ வருகிறது... அதோ வருகிறது... என்ற செய்திகளை சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் ஊடகங்களுக்கு அறிக்கைகளாக விட்டுக்கொண்டிருக்க எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு வழங்கப்படமாட்டாது என ஜே.வி.பி உட்பட இனவாதிகளின் கூச்சல் உச்சஸ்தாயியில் நாட்டில் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

அண்மையில், இலங்கைக்கு விஜயம்செய்த யப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி அவர்கள் ஜே.வி.பியின் தலைமையை ஜப்பானிற்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்தமைக்கு அமைவாக ஜே.வி.பியின் தலைமை யப்பானுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தது.

ஜே.வி.பி யினரின் இந்த விஜயத்தின் பின்னர் ஜே.வி.பியினரின் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான நிலைப்பாட்டில் மாற்றங்களை எதிர்பார்க்கலாம் என்ற ஒரு எதிர்பார்க்கை பரவலாக இருந்தது.

ஆனால், யப்பான் விஜயத்தின் பின்னர் ஜே.வி.பியின் நிலைப்பாட்டில் மாற்றங்கள் எவையும் நிகழ்ந்து விடவில்லை என்பதை அவர்களின் அறிக்கைகளும், பேச்சுக்களும் தெளிவாக சுட்டிநிற்கின்றன.

இந்தநிலையில், சனாதிபதி சந்திரிகா இந்தியாவுக்கான விஜயத்தை ஆரம்பித்துள்ளார். இந்த விஜயத்தின் பின்னர் பொதுக்கட்டமைப்பு வரலாம் என்ற எதிர்பார்க்கையை கொழும்பில் உருவாக்கியுள்ளனர்.

ஆனால், எதிர்பார்த்து களைத்துப்போய் நம்பிக்கை இழந்த நிலைக்கு தமிழ்மக்கள் எப்பொழுதோ வந்தாகிவிட்டது.

யப்பான் விஜயத்தின் பின்னர் எப்படி ஜே.வி.பியினரின் நிலைப்பாட்டில் எத்தகைய மாற்றங்களும் நிகழவில்லையோ, அதைப்போல சனாதிபதியின் இந்திய விஜயத்தின் பின்னர் பொதுக்கட்டமைப்பு வந்துவிடும் என எதிர்பார்ப்பதும் பெரியளவில் பயனெதனையும் தந்துவிடப்போவதில்லை.

ஏனெனில், கல்லில் கூட நார் உரித்து எடுத்துவிடலாம். ஆனால் சிங்கள தலைமைகளிடமிருந்து தமிழ் மக்கள் தொடர்பான எந்த விடயத்தையும் பெற்றுவிடலாம் என எதிர்பார்ப்பது வெறும் அபத்தமே.

ஜே.வி.பியினரின் பிடி சனாதிபதி சந்திரிகாவிடம் உள்ளது எனவும் இதனைக்கொண்டு சனாதிபதி சந்திரிகா ஜே.வி.பியை மடக்கி விடுவார் என்றெல்லாம் கதைகள் அவிழ்த்துவிடப்படுகின்றன.

எவரின் பிடி யாரிடம் இருந்தால் என்ன சிங்கள தேசம் நேர்மையான வழியில் இந்தப் பிரச்சினைக்கு முடிவுகாண உழைக்காத வரை எதுவுமே சாத்தியமில்லை.

இதனை தமிழ் மக்கள் பல தசாப்தங்களுக்கு முன்னரே புரிந்து வைத்துள்ளனர்.

உண்மையில் சொல்லப்போனால் இந்த மூன்றாண்டு காலத்திற்கு மேலான சமாதான முயற்சிக்காலத்தில் சிங்கள அரசுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் தமிழ் மக்களும், தமிழ் மக்களின் தலைமையும் நம்பநடந்தனரே யொழிய நம்பி நடக்கக்கூடிய சூழல் இருக்கவே இல்லை.

இந்த நிலையே இப்பொழுதும் நீடித்துக்கொண்டிருப்பதானது மிகவும் துரதிர்ஷ்டவசமானது.

இந்தநிலையில், தமிழ் மக்கள் மேலும் அரசை நம்பி செயற்பட வேண்டுமென எவரும் எதிர்பார்க்க முடியாது.

அவ்வாறாயின் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டும் காரியங்கள் சிலவற்றை ... சர்வதேச சமூகம் முன்னெடுக்கவேண்டும்.

இத்தகையதொரு நிலையில் மட்டுமே இந்த மப்பும் மந்தாரமுமாகக் கழியும் பொழுதை மாற்றமுடியும்.

இதைவிடுத்து அரச தரப்பிலிருந்து தமிழ்மக்கள் தொடர்பான விடயங்களில் நல்ல பலனெதனையும் எதிர்பார்ப்பதானது வெறும் பகற்கனவாகவே இருக்கும்.

காலத்தை இழுத்தடித்து தமிழ் மக்களை ஏமாற்றுவதிலேயே இப்போதும் சிங்களத்தலைவர்கள் தங்களின் முழுக்கவனத்தையும் செலுத்துகின்றனர்.

இது எந்தவொரு சூழலிலும் சிங்களதேசம் திருந்தப்போவதில்லை என்பதையே காட்டுகிறது.

# மீண்டும் இறுகும் கொலைக்கரங்கள்





விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகள் மீது தனது கொடுங்கரங்களை சிங்கள தேசம் இறுக்கத் தொடங்கி விட்டது. நிழல் யுத்தம் தீவிரமாக முன்னெடுக்கப்படும் மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரைப்பகுதியின் மீதும் அதனைத் தொடர்ந்துள்ள திருமலை மாவட்டத்தின் கசப்பான உண்மைகளை தமிழ் மக்களுக்கு எடுத்துக்காட்டுகின்றன. இந்த விவகாரம் தொடங்கி ஏறக்குறைய இரண்டு மாதங்கள் ஆகிவிட்டபோதும் இது பற்றிய எந்த உருப்படியான நடவடிக்கையும் எந்தத்தரப்பாலும் எடுக்கப்படவில்லை. வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் இந்தத் அந்தம் வரைக்கும் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதனால் வெருகல் ஆற்றிற்கு இருமருங்கும் திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்களின் தென் வட பிரதேசங்களைப் புலிகள் தமது ஆளுகைக்குள் வைத்திருக்கிறார்கள். இவை கடற்தொடர்புடையவை என்பதோடு வடக்கே காடுகளூடாக வன்னியுடனும் இப்பகுதிகள் தொடுக்கப்பட்டுள்ளன.


கடந்த சில மாதங்களாக விடுதலைப்புலிகளின் வான்படை பற்றிய செய்திகளை மிக முக்கியத்துவப்படுத்தி ஊதிப்பெருப்பித்துப் பரப்பிவருகிறது சிறிலங்கா அரசு. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் இதற்காக சிறிலங்காவின் இராஜதந்திர, ஊடக, தன்னார்வ வலு மிகப் பெருமளவில் பயன்படுத்தப்

பகுதிகளான ஈச்சிலம்பற்று, மூதூர் கிழக்கு ஆகிய பிரதேசங்கள் மீதும் கட்டடப்பொருட்கள், எரிபொருட்கள் உட்பட்ட மேலும் சில பொருட்களுக்கான தடை என்பதாக ஒருவிதபொருளாதாரத் தடையை சிறிலங்கா இராணுவம் நடைமுறைப்படுத்திவருகிறது. எந்தவித அரச உத்தரவுமின்றி சிங்கள இராணுவத்தால் இந்த நடைமுறை பின்பற்றப்படுகிறது. இதனை நீக்கும்படி அப்பகுதிப் பொது மக்கள் சாத்வீக வழியிலான ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், மகஜர் கையளிப்புக்களை நடாத்தியபோதும் இவற்றுக்கு சாதகமான பதிலெதுவும் கிட்டவில்லை.

எவ்வகையான பொருட்களுக்கு இந்தக்கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது? சீமெந்து, கட்டடப்பொருட்கள், சகலவிதமான எரிபொருட்கள், மின்கலங்கள் என்பனவற்றோடு தீப்பெட்டிக்கும் இந்த நடைமுறை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. “குறிப்பிட்ட தொகையான மேற்படி பொருட்களை மட்டுமே ஒரு நபர் எடுத்துச்செல்லமுடியும். அதனை விட அதிகளவில் கொண்டு செல்லவேண்டுமெனில் இராணுவத்தினரிடம் அனுமதி பெறப்படல் வேண்டும்” என்கிறது சிங்கள இராணுவத்தின் உத்தரவு.

யுத்த நிறுத்தம் அமுலில் இருக்கின்ற, புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற காலத்தில் இவ்வாறான தீர்மானங்களை இராணுவம் தன்னிச்சையாக எடுக்கமுடியுமா? அவ்வாறு எடுத்தால் சிவில் நிர்வாகிகள், அரசாங்கம் புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறைப் படுத்தப்படுவதைக் கண்காணிக்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு, சமாதான நடைமுறையுடன் தொடர்புடைய சர்வதேச சமூகம், மனித உரிமை அமைப்புகள் என்ற தரப்புகளின் நிலைப்பாடு என்னவாக இருக்க வேண்டும்? என்னவாக இருக்கிறது?

இங்கேதான் மேற்படி தரப்புகளின் இரண்டகத்தனமான போக்குகளும் நடவடிக்கைகளும்



தடை நடவடிக்கையை நிறுத்துமாறு கூறியிருந்தபோதும் படைத்தரப்பு அதனைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. சிறிலங்கா சனாதிபதியின் பிரதிநிதியும் மாகாண நிர்வாகத்தின் தலைமை அதிகாரியுமான ஆளுநர் அதையிட்டு பின்னர் அலட்டிக்கொள்ளவில்லை. விடயம் கிடப்பில் போடப்பட்டுவிட்டது.

இந்தப் பிரதேசங்களுக்கு அப்படி என்ன முக்கியத்துவம்?

**பு.சத்தியமூர்த்தி**

ஏன் சிங்களப் படைகள் இதன்மீது இப்படியொரு தடையை நடைமுறைப்படுத்துகின்றன? மட்டக்களப்பு மாவட்டத்தின் கடற்தொடர்புள்ள பகுதியாகவும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலும் உள்ள பகுதி வாகரை. இது புலிகளின் ஒரு நிலையான தளப்பகுதி. இதனுடன் ஒட்டினாற்போன்று படைக்கட்டுப்பாட்டிலுள்ள பொலநறுவை மாவட்ட வெலிக்கந்தைப் பகுதி உள்ளது.

மட்டக்களப்பில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள அடுத்த பகுதியான படுவான்கரைப் பெருநிலத் தொகுதிக்கும் வாகரைக்குமிடையே சிறு நிலக்கீற்றொன்று மட்டுமே படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. மட்டக்களப்பு-கொழும்பு A-11 வீதியை மையமாகக் கொண்டதாக இருக்கிறது இந்த நிலக்கீற்று.

அதேவேளை வாகரைக்கு வடக்காக உள்ள பகுதி திருமலைத்துறைமுகத்தின் தென்

பட்டது. படுகிறது.

இரணைமடுவில் புலிகளின் வான்தளம் உள்ளது என பரப்பப்பட்ட கதைகளின் இரண்டாவது பாகமாக திருமலை மூதூர் கிழக்கு மற்றும் மட்டக்களப்புப் பகுதிகளில் சிறியரக வான்கலங்களைப் பேணக்கூடிய ஓடுபாதைகளைப் புலிகள் அமைத்து வருகிறார்கள் எனவும் கூக்குரல்கள் எழுகின்றன.

இந்தக் கூக்குரல்களின் பின்னணியிலேயே இந்தப் பகுதிகள் மீதான பொருளாதாரத் தடை-குறிப்பாக கட்டடப்பொருட்கள், எரிபொருட்களுக்கான தடை நடைமுறைப்படுத்தப்படுகிறது. மூதூர் கிழக்கு, ஈச்சிலம் பற்றுப்பகுதிகளுக்கான நுழைவாயில்களான கட்டைப் பறிச்சான் மஹிந்தபுர சோதனைச் சாவடிகளில் தொடங்கிய இந்தத் தடை பின்னர் வாகரையின் நுழைவாயிலான மாங்கேணியிலும் அமுல்செய்யப்படுகிறது. ஏனெனில் மூதூரிலிருந்தோ திருமலையிலிருந்தோ பொருட்கள் வருவது தடுக்கப்பட்டாலும் அவை மாங்கேணி, வாகரை, வெருகல் ஊடாக மூதூர் கிழக்குக்குப் போய்விடக்கூடாது என்பதிலே சிங்களப்படைகள் கவனமாக இருக்கின்றன.

இவை அனைத்தும் முன்னறிவிக்கின்ற செய்தி சிங்களப் படைகள் யுத்தத்திற்குத் தயாராகின்றன என்பதுதான்.

(16ஆம் பக்கம் பார்க்க)

# மக்களை மறந்துவிட்டு...



பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கா விட்டால் உலகின் முன் ஒரு பொய்யராக சனாதிபதி தோற்றமளிக்க வேண்டிவரும் என அமைச்சர் பௌசி கூறியிருக்கிறார். எனவே அதனைத்தவிர்க்க பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்கப்போவதாகவும் அவர் கூறுகிறார்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் மிக அண்மைக்காலமாக அதைப்பற்றியே பேசுபவராக இருக்கிறாயொழிய செயலில் தான் எதனையும் காணவில்லை.

ஆனால் அதற்கு எதிரான கருத்துக்கள் பொதுக்கட்டமைப்பு ஒன்று உருவானால் தாம் செய்யப்போவது என்ன என்பது குறித்து ஜே.வி.பியும் சிஹலஉறுமயவும் மாறி மாறிச் சவால்விட்டுக்கொண்டேயிருக்கின்றன.

இப்பொழுது அவர்கள் ஆட்சியிலிருந்து விலகுவது அல்லது ஆட்சிக்கு வழங்கும் ஆதரவை விலக்கிக்கொள்வது என்பது குறித்துப் பேசவும் ஆரம்பித்துள்ளார்கள்.

இதற்கும் மேலாக பொதுக்கட்டமைப்பு ஒன்று விடுதலைப்புலிகளுடன் அமைக்கப்படுமானால் எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் தனித்துப் போட்டியிடப்போவதாக ஜே.வி.பி அறிவித்திருக்கிறது. இதேவேளை ஜாதிக ஹெல உறுமயவும் தனித்துப் போட்டியிடப்போவதாக அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பானது இவ் இரு அமைப்புகளும் சுனாமி அனர்த்த நிவாரண நடவடிக்கைகளில் புலிகளை இணைத்துவிடக் கூடாது என்பதில் எவ்வளவு தூரம் உறுதியாக நிற்கின்றன என்பதைக்காட்டுகிறது.

இவ் இரு கட்சிகளும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டப்போவதில்லை என்பது வெளிப்படையான விடயமாகும். அதேவேளை ஐக்கிய தேசியக்கட்சி பதவிக்கு-அதிகாரத்துக்கு வந்துவிடக்கூடாது என்பதில் இவை கவனம் செலுத்திவந்தன. சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஐக்கிய தேசியக்கட்சியிலும் மேலானது என்று கருதியே கடந்த தேர்தலில் ஜே.வி.பி சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து போட்டியிட்டது. ஆனால் தேர்தலில் போட்டியிடுவது என இணக்கப்பாட்டுக்கு வந்தபோது இணங்கிக்கொண்ட பல விடயங்களை சிறிலங்கா சுதந்திரக் கட்சி நிறைவேற்றாதபோதும் அதனைப் பார்த்துக்கொண்டிருந்த ஜே.வி.பி இரண்டே இரண்டு விடயங்களில் அது இறுக்கமாக இருக்கின்றது.

1. இனப்பிரச்சினைக்கு சமாதான வழி தீர்வுகாண்பது.

2. தனியார் மயமாக்கல்.

இவ் இரண்டு விடயங்களும்தான் ஜே.வி.பி விட்டுக்கொடுக் காது வலியுறுத்தும் விடயங்களாகும். இந்த விடயங்கள்தான் அக்கட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதாக வைத்துள்ள துருப்புச் சீட்டுக்களாகும்.

அதேவேளை பலத்த எதிர்ப்புகளின் மத்தியில் அரசியலுக்குள் வந்து நாடாளுமன்ற உறுப்பினராவதற்கு ஜாதிக ஹெல உறுமயவுக்கு உதவியதும் இந்த விடயங்கள்தான். அதாவது பௌத்தபிக்குகளாகிய இவர்களுக்கு அரசியல் பிரவேசம் ஏன்? எனப் பலதரப்பும் கண்டித்தபோது அதனை முறியடிக்க எடுத்த ஆயுதம் மேற்குறிப்பிட்ட விடயங்களேயாகும்.

எனவே இவ் இரு விடயங்களிலும் ஜே.வி.பியும் சரி, ஜாதிக ஹெல உறுமயவும்சரி விட்டுக்கொடுப்புச் செய்வது என்பது தற்கொலைக்கு ஒப்பானதாகும். இந்நிலையில் பொதுக்கட்டமைப்பு என்பது ஜே.வி.பியின் சம்மதத்துடன் நடைமுறைப்படுத்துவதென்பது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கு இயலுமானதாக இராது.

அதேவேளை ஜே.வி.பியை மீறி அரசாங்கத்தின் பதவி பறிபோனாலும் பரவாயில்லை. தான் பொய்யராகக்கூடாது என்பதற்காக பொதுக்கட்டமைப்பை அமைக்க ஆலோசித்தாலும் சனாதிபதித் தேர்தல் குறித்து ஜே.வி.பியின் அறிவிப்பு சனாதிபதிக்கு தடுமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கும்.

1999 டிசெம்பரில் நடைபெற்ற சனாதிபதித் தேர்தலின்போது அவர் தனித்துப் போட்டியிட்டு வெற்றிபெற்ற போதும் பின்னர் நடைபெற்ற பொதுத்தேர்தல்களில் அவரது கட்சிக்கு தோல்வியே கிடைத்தது. இதனைச்சரிக்கட்டவே அவர் ஜே.வி.பியுடன் இணையும் முடிவுக்கு வந்தார்.

இப்போது ஜே.வி.பியின் செல்வாக்கு அதிகரித்துள்ள நிலையில் ஜே.வி.பியை வெளியே விட்டால் அது நிச்சயம் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குப் பெரும் பாதகமானதாகவே இருக்கும். இப்பொழுது ஜாதிக ஹெல உறுமய சனாதிபதித் தேர்தலில் தனித்துப்போட்டியிட உள்ள நிலைமையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியையே பாதிக்கும்.

இவற்றின் காரணமாக ஏற்கனவே இழுபறி நிலையிலிருந்த பொதுக்கட்டமைப்பு அமைக்கும் விடயம் மேலும் இழுபறிநிலையிலும் முடிவில்லாமலும் இருப்பதால் உண்மையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உலகின் முன் மிகப்பெரிய பொய்யராக மாறவேண்டியநிலை ஏற்படுவது தவிர்க்கமுடியாதது.

ஆனால் சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து ஐந்து மாதங்கள் கடந்தும் அம்மக்களுக்கான நிவாரணப்பணிகள் புனர்வாழ்வுப் பணிகள் பெரும் இழுபறி நிலையை அடைந்துள்ளன. அந்த மக்கள் சொல்லொணாத் துன்பநிலையில் வாழ்ந்துவருகின்றனர்.

ஏற்கனவே யுத்தம் காரணமாக மிகவும் பாதிப்புற்றிருந்த மக்கள் மேலும் மோசமான பாதிப்புக்குள்ளாகி அதிலிருந்து மீள்வதற்கு வழியின்றி உள்ளனர்.

இதேவேளை தமிழர் தாயகப் பகுதிகளில் மட்டுமல்ல சிங்களவர் வாழும் பகுதிகளிலும் சுனாமி அலைகள் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள நிலையில் அம்மக்களின் நிலையும் அவலமானதாகவே உள்ளது.

அண்மையில் டெலிகிராப் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரை ஒன்று இவர்களின் நிலையை வெளிப்படுத்தியிருந்தது.

இம் மக்களுக்கெல்லாம் விடிவு ஏற்பட வேண்டுமாயின் பொதுக்கட்டமைப்பு ஒன்று உருவாகுவது அவசியமாகிறது. ஏனெனில் ஏற்கனவே உலகநாடுகள் வழங்கிய உதவிகள் கூட தென்பகுதி மக்க ளுக்கே சரிவரக் கிட்டாமைக்கு அரச இயந்திரத்தின் செயற்றிறன் இன்மையே காரணம் என்பது பலமுறை வெளிப் படுத்தப்பட்டு விட்டது.

இந்நிலையிலும் கூட வாக்களிக்கும் மக்களை மறந்துவிட்டு ஜே.வி.பியுடன் இணைந்து சனாதிபதித் தேர்தலைச் சந்திப்பதற்காக பொதுக்கட்டமைப்பை உருவாக்காது சனாதிபதி சந்திரிகா செயற்படுவாராக இருந்தால் விளைவு அவர் எதிர்பார்ப்பதற்கு முற்றிலும் மாறுபாடானதாகவே இருக்கும்.

**நேர்நோக்கு**

**வேலவன்**

# ஆனையிறவு உப்புக்கு கேள்வி அதிகரிக்கும் வாய்ப்பு



இலங்கையின் உப்பு உற்பத்திப் பேட்டைகளில் புத்தளம், ஆனையிறவு, அம்பாந்தோட்டை போன்றன முக்கியமானவைகள். இவற்றுள் புத்தளம், ஆனையிறவு என்பன தமிழீழத்திற்குரியவை. இதில் ஆனையிறவு முக்கியமானதொரு உப்பு உற்பத்திப் பேட்டையாகும். இயற்கையாகவே ஆனையிறவு கடல் நீரேரியில் கல்சியத்தின் அளவு அதிகமாகக் காணப்படுகிறது. அதனால் இங்கு விளைகின்ற உப்பு தரம்மிக்கதாகக் காணப்படுவதோடு அதிகளவான உப்புக்களை உற்பத்தி செய்யக் கூடிய ஏது நிலையும் உண்டு. கடந்த பல ஆண்டுகளாக சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள் இப்பிரதேசம் இருந்தமையால் இதன் பயனை முற்றுமுழுதாக பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்பட்டது. விடுதலைப் புலிகளின் ஓயாத அலை இராணுவ நடவடிக்கையின் மூலம் ஆனையிறவு மீட்கப்பட்டதன் பின் மீண்டும் 2001 ஆம் ஆண்டு பொருண்மிய நிறுவனத்தால் ஆனையிறவு, குறிஞ்சாத்தீவுப் பகுதிகளில் உப்பு உற்பத்தி செயற்பாடுகள் ஆரம்பமாகின.

பல நூற்றுக்கணக்கான இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பளித்து வருகின்றமை என்பது முக்கியமான ஒரு விடயமே. அத்தோடு நவீன முறைகளையும் கையாண்டு உற்பத்தியின் தரம் மேன்மை யடையச் செய்வதில் நிர்வாகத்தினர் காட்டும் அக்கறையும் வரவேற்கத்தக்கது. பெறப்படும் உப்புகளை பலவாறாக பிரித்து வகைப்படுத்தி மக்கள் பயன்பாட்டுக்கு இலகுவான வடிவங் களில் சந்தைப் படுத்தல் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். தரமான பொதிகளில் அறிவுறுத்தல்கள் உள்ளடங்கல்களாக பல் வேறு அளவுகளில் பொதி செய்து விற்பனை செய்து வருகின்றனர்.

ஆனால் ஆனையிறவு, குறிஞ்சாத்தீவுப் பிரதேசங்களில் தற்போது பெறப்படுகின்ற மொத்த உற்பத்தியை விட இன்னும் அதிகளவான உற்பத்தியை பெறலாம். அதற்கு மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் இருக்கின்ற உப்பு விளைகின்ற பாத்திகளை நவீன முறையில் சீரமைத்து, துறைசார்ந்தவர்களின் ஆலோசனையைப் பெற்று உப்பு விளைவிக் கப்படாமல் இருக்கின்ற பாத்திகளையும் சீரமைத்து மேலும் புதிய புதிய இடங்களில் உப்பு உற்பத்தி செய்ய முடியுமாயின் அதனை ஆராய்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டால் இப்பிரதேசங்களில் உள்ள பல நூற்றுக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதோடு தாயகப் பொருளாதாரத்திற்கும் பெரும் பங்களிப்புச் செய்வதாக அமையும்.

ஆனையிறவு உப்பு உற்பத்தித் தளம் எமக்குக் கிடைத்தது பெரும் கொடை என்றே கூறவேண்டும். எனவே எதிர்கால நலன்களையும் கவனத்தில் கொண்டு நடவடிக்கைகளை திட்டமிட்டு மேற்கொண்டால் வளமான தாயகத்தை கட்டியெழுப்ப உப்பு உற்பத்தி நிறுவனம் பெரும் பங்காற்றும்.

அதாவது தற்போது இலங்கையின் குறிப்பாக தென்னிலங்கையின் உப்பு தேவையில் 75 வீதமானவற்றை சந்தைப்படுத்துவதில் அம்பாந்தோட்டை உப்பளமே காணப்படுகிறது.

ஆனால் தற்போது அண்மையில் சுனாமிப்பேரனர்த்தம் காரணமாக அவ் உப்பளம் பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்டது. இதனால் சிறுபோக உப்பு உற்பத்தி எதிர்பார்த்த அளவுக்கு இடம் பெறவில்லை. வழமையாக அம்பாநதோட்டை உப்பளம் உற்பத்தி செய்யும் உப்பின் மொத்த அளவை விட இம் முறை சிறு போக உற்பத்தி குறைந்துள்ளது.

அத்தோடு பெரும் போகத்திலும் வழமையான அளவுக்கு உற்பத்தி செய்ய முடியாமல் போகலாம் என நம்பப்படுகிறது. இதற்கு சுனாமி அனர்த்தம் காரணமாகக் கூறப்படுகிறது.


எனவே எதிர்வரும் குறிப்பிட்ட காலங்களுக்கு தென்னிலங்கை உப்புத் தேவைக்கு ஏற்ற அளவு உப்பினை அம்பாந்தோட்டை உப்பளத்தால் சந்தைப்படுத்த முடியாமல் போகலாம். இதனால் இந்தச் சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி ஆனையிறவு உப்பளம் தனது உற்பத்தியினை அதிகரித்து தரமான முறையில் பாவனைக்கு ஏற்ற முறையில் மாற்றி சந்தையை விரிவுபடுத்தினால் நிரந்தர சந்தை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்வதோடு பொருளாதார ரீதியில் பெரியதொரு பயனை பெறலாம்.

ஆரம்ப காலம் தொட்டு ஆனையிறவு உப்புக்கு இலங்கை வாழ் அனைத்து மக்களிடையேயும் ஒரு கேள்வி இருந்து வந்தது. ஆனால் எதிர்பாராத விதமாக சிறிது காலம் அப்பெயர் இரா ணுவ ஆக்கிரமிப்புக் காரணமாக பிரபல்யம் அடையவில்லை. ஆனால் தற்போது மீண்டும் மக்கள் மத்தியில் இடம் பிடித்து வருகின்றது. எனவே மக்கள் மனங்களில் நிரந்தரமாக இடம் பிடிப்பதோடு சந்தை வாய்ப்பினை விரிவுபடுத்த வேணடிய தேவை ஆனையிறவு உப்பளத்திற்கு எழுந்துள்ளது.

ஆனையிறவு கடல் நீரில் இயற்கையாகவே கல்சி யத்தின் செறிவு அதிகமாக இருப்பது என்பது ஒரு சாதகமான விடயமே. ஆதலால் அம்பாந்தோட்டை உப்பளத்தின் தற்போதைய நிலையினை கருத்தில் கொண்டும் எதிர்கால தாயக நலன்களையும் பொருளாதார ரீதியான அணுகுமுறைகளையும் கருத்தில் எடுத்தும் ஆனையிறவு உப்பளம் தனது செயற்பாட்டினை இன்றே திட்டமிட்டு மேற் கொள்ள தொடங்கினால் அது அனைத்து வழிகளிலும் நன்மையே!

**மு.தமிழ்ச்செல்வன்**

# இந்திய அரசின் சேது சமுத்திரத்திட்டம்



ஒன்றரை நூற்றாண்டுகளாக திட்டமிடப்பட்ட சேது சமுத்திரத்திட்டத்திற்கு ஒருவாறு இந்திய மத்திய அமைச்சரவை அனுமதியுடன் மீண்டும் பேசப்படும் பொருளாக மாறியுள்ளது. சேதுக்கால்வாயின் விளைவுகள், அதனால் ஏற்படப்போகும் சாதக, பாதக நிலைமைகள் பற்றி புலமையாளர்கள், ஊடகவிய லாளர்கள், சூழலியலாளர்கள் கருத்துக்களை பரப்பிவருகின்றனர். சில புலமையாளர்கள் 'எல்லாம் நன்மைக்குத் தான்' என்பது போல் ஈழத்தமிழர் மத்தியில் ஏதோ ·ஒரு உள்நோக்கத்தோடு பிரச்சாரிப்பது புலப்படுகின்றது. அந்தவகை ஈழத்தமிழர் சேதுசமுத்திரக் கால்வாய் ஏற்படுத்தக் கூடிய பிரதான விளைவுகளை தெரிந்து கொள்வது அவசியமானது.

முதலில் சேது சமுத்திரக்கால்வாய் அமைக்கப்படவுள்ள பகுதியை தெரிந்துகொள்ள வேண்டும். அதனை படத்தில் பார்க்கவும். இரண்டாவது இயற்கையின் அமைப்பினை குழப்புவதென்பது சுற்றுச்சூழலுக்கும் அதன் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் என்பதனைப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். மூன்று-ஓர் அரசு பாரிய செலவில் ஒரு திட்டத்தை (2000 கோடி ரூபா) ஆரம்பிக்கின்ற தென்றார் அது பிற அரசுகளதோ மக்களினதோ நலனுக்கானதாக ஒருபோதும் அமையாது என்பதுடன் ஆரம்பிக்கும் அரசுக்கான நலன்களை முதன்மைப்படுத்திக்கொண்டே செயல்படும் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

இது மூன்றையும் வைத்துக்கொண்டு ஈழத்தமிழரின் அரசியலையும் அதன் போக்கையும் சேதுக்கால்வாய் ஊடாக எப்படி இந்தியா கையாளப் போகிறது என்பதை புரிந்து கொள்ளுதல் வேண்டும். ஏனெனில் ஈழத்தமிழர் போராடிக் கொண்டிருக்கும் மக்கள் கூட்டமா கவே உள்ளனர். வேண்டுமாயின் ஈழத்தமிழர்களுக்கு பிராந்திய சுய ஆட்சிமுறைமையோ (ISGA) அல்லது தனி நாடோ சாத்தியமடைந்த பின்பு சேது கால்வாய் சாத்தியப்படுமாக இருந்தால் அத்திட்டத்திற்கான பங்கையும் விளைவையும் பற்றி பரிசீலிக்க முடியும். அத்தகைய முயற்சிக்கான போராட்டம் நிகழ்ந்துகொண்டிருக்கும்போது உருவாக்கப்படும் சேது கால்வாயினால் தமிழர்களுக்கு நன்மை பயக்குமென கூறுவது தமிழர்களை பப்பாசிக்குழலில் ஏத்துவதற்குச் சமமாகும்.

ஏனெனில் சேதுக் கால்வாய் இரண்டு பிரதான பாதிப்புகளை தமிழர்களுக்கு ஏற்படுத்தமுடியும்.

ஒன்று சுற்றுப்புற சூழல் அசுத்தமடைவதற்கான வாய்ப்பு அதிகரிக்கும் மூலமாக குறிப்பாக கடற்பரப்பை ஆழமாக்குதல். அதாவது 11.5 மீற்றர் தற்போதைய ஆழத்தை 14மீற்றராக அதிகரித்தல் என்பது இயல்பான தன்மையை குழப்புவதாகும். அது மட்டுமல்ல சேதுப்பாலம் வழியாக பாக்கு நீரிணை மன்னார் வளைகுடாவுடன் இணைக்கும். 93 கி.மீ நீளமுள்ள கால்வாய் தோண்டப்படுவதாகும். இது இரு வழிப்பாதையாக அமைந்திருப்ப தோடு 30,000 தொன் கொள்ளளவுள்ள கப்பல்கள் செல்வதற்கான வழியாகவும் அமையுமென திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் பவளப் பாறைகள் அழிக்கப்படும், கடல் மாசுக்கள் கரையை நோக்கி நகரும், அபூர்வமான உயிரினங்கள் அழியும் வாய்ப்பு ஏற்படும், தொடரான மணல் திட்டுக்கள் இயற்கை அரண்களாக இருக்கும் நிலை இல்லாமல் போகும். இவையாவும் இந்தியர்க ளுக்கு மட்டும் ஏற்படப் போகும் ஆபத்தல்ல. இலங்கையில் மன்னார் குடாவை அண்டிய பகுதியையும் யாழ் குடாநாட்டின் தீவுகளையும் பாதிக்கும் என்பதே கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும். இது சுற்றுச்சூழல் தொடர்பான விடயம். இது பற்றி சுற்றுச்சூழலியலாளர்கள் அதிகம் கண்டனங்களையும், எதிர்ப்பு களையும் வெளிப்படுத்தி வருகின்றனர். இதன் பாதிப்பு தமிழ் நாட்டுத் தமிழருக்கும் ஈழத்தமிழருக்குமே அதிகமாக அமையும்.

இரண்டாவது பாதுகாப்பு, இராணுவ நோக்கிலான பாதிப்புக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகமுண்டு. தற்போதைய அரசாங்கம் வரை இந்திய அரசாங்கங்களும் அதன் மத்திய அரசும் ஈழத்தமிழர்களது போராட்டத்தை நிராகரித்தே செயல்படுகின்றன. ஈழத்தமிழர் களில் சில அமைப்புக்களையும் சில தனிப்பட்ட நபர்களையும் அணைத்து வைத்திருப்பது தனது நலத்துக்காகவே அன்றி வேறு எதற்காகவும் அல்ல. அத்தகைய நிலையில் ஈழவிடுதலைப் போராட்டத்தையும், அதன் போராட்ட சக்தியையும் அழித்தொழிப்பதற்கு பல வியூகங்களையும் திட்டங்களையும் போட்டு செயல்படும் இந்தியத்தரப்பு தமிழ் மக்களின் நன்மைக்காக சேதுக்கால்வாயை ஆழப்படுத்துவதென்பதை ஏற்றுக் கொள்வது எப்படி?

இரு நாடுகளுக்கு இடையிலான கடற்பரப்பின் தூரம் மிகக் குறைவானது என்பது மட்டுமன்றி இலங்கைத் தீவின் எல்லையோரத்தில் ஆழமாக்கல் என்பது இலங்கைத்தீவின் அனுமதியைக் கோருவதோடு பாதிப்புக்கான மாற்று நிலைகளை கண்டறிதல் அவசியம். அதன் பொறுப்பில் இலங்கைத்தீவில் தமிழர்களுக்கே அதிகமுண்டு. தமிழர்களே கருத்துக்கூறவேண்டியவர்கள். அதனை இந்தியத்தரப்பு கோரவில்லை இந்தியாவின் எல்லைக்குள்ளே நிகழுகிறதென யாரும் விவாதிக்கலாம். ஆனாலும் அயல் நாட்டின் பாதுகாப்பைப்

**ஐங்கரன்**

பொறுத்த விடயங்களை கோருவதென்பது பொதுவான விதிமுறையாக உலகம் ஏற்றுள்ளது. அப்படியாயின் CTBT ஏன்? Koyato ஏன்? என்பதற்கு தெளிவு வேண்டும்.


இந்தியத்தரப்பின் அணுகுமுறை இக்கடற்பரப்பினூடாக எதிர் காலத்தின் நிர்ணயத்தை தமக்குரியதாக்குவதாகும். இதனால் அப்பகுதியில் பாதுகாப்பை தாம் பேணுவதுடன் இக்கடற்பரப்பை அதிக கவனத்திற்கும், அதிக பாதுகாப்புக்கும் உரியதாக்குதல். தமிழர்களின் கடற்படையின் பலத்தைக் கண்டு அச்சமடைந்துள்ள இந்தியா அதனை முறியடிக்க தனது தீவிர கவனத்தில் அப்பிரதேசத்தை கையாளவிரும்புகிறது. இதனால் தமிழர்களின் கடற்படைப் பலத்தை கட்டுப்படுத்தி விடலாமெனவும் இந்தியா கருதலாம். அவ்வகையான அணுகுமுறைக் கூடாக ஈழத்தமிழரின் போராட்டத்தை முறியடிக்க ஒரு கருவியாக சேதுசமுத்திரத்திட்டத்தை இந்தியா பயன்படுத்த முயலலாம்.

அடுத்து காங்கேசன்துறை, மன்னார், பருத்தித்துறை துறைமுகங்கள் கடல்வழிப்பாதைகள் அமைத்தால் வடக்குப் பகுதி அதிக பயனை அடையும் என்பதற்கு எந்த விதமான உத்தரவாதமும் கிடையாது. காரணம் தற்போது அப்பகுதி இராணுவக் கட்டுப்பாட்டிலும் நெருக்கடிக்குள்ளும் அகப்பட்டுள்ளது. அப்பிரதேசம் சிங்கள பெரும்பான்மை மக்களின் பிரதேசமாக மாற்றப்பட்டு வருவதாகவும் அதனை நிரந்தர இராணுவ குடியேற்றமாக மாற்றுகின்ற நோக்கோடு அரசாங்கம் செயல்படுவதும் தெரியவரும் செய்தியாகும். இதனால் இப்பகுதியின் பயன்பாடுகளை தமிழர்கள் பெறப் போகிறார்கள் என்று கூறுவது எந்தவிதத்திலும் உத்தரவாதப்படுத்த முடியாத விடயமாகும். இத்தகைய நிலைப்பாட்டுக்குள் இந்தியர்களது சேது சமுத்திரத்திட்டம் மீண்டும் பெரும்பான்மை சிங்கள மக்களுக்கான பொருளாதார வாய்ப்புக்களை பெருக்க வாய்ப்பை அழிப்பதாகக் கொள்ளலாம். ஏற்கனவே பலாலி விமானத்தளத்தை நவீனமயப்படுத்துவதில் அதிக பங்கை இந்தியா முன்னெடுத்துச் செல்வதும் சேது சமுத்திரத்திட்டத்தின் உபாயங்களை விரிவுபடுத்த உதவும் விடயமாகவே தெரிகின்றது. அதாவது இத்திட்டத்தில் இலங்கை-இந்திய அரசாங்கங்களின் கூட்டுத்தன்மை பொருந்திய உபாயமும் திட்டமிடலும் கலந்துள்ளன.

இலங்கை அரசாங்கத்தின் பாதுகாப்பு ஒப்பந்தம், வர்த்தக ஒப்பந்தம் என்பன இந்தியாவுடன் வகுக்கும் முறைமையானது. சிங்கள மேலாதிக்க வாதத் திற்கான திட்ட மிட்ட அணுகு முறைகளாகும். எனவே இலங்கை அரசாங்கம் சேதுக் கால்வாய் பற்றி முன்வைக்கும் ஒத்துழைப்பு அல்லது ஆதரவு என்பது அதன் நீண்டகால நோக்கங்களை நிறைவேற்ற இந்திய அரசை பயன்படுத்துகின்ற தன்மையை காட்டுவதாகும். இதனை புரிந்து கொள்வதே சேது சமுத்திரத் திட்டத்தின் புரிதலாகும்.

எனவே சேதுக்கால்வாய் திட்டமானது ஈழத்தமிழரின் போராட்ட வழிமுறைக்குரிய தடையை முன்னகர்த்துகின்ற உபாயமாகும். இது இந்திய-இலங்கை அரசாங்கத்தரப்புகளின் திட்டமிட்ட கூட்டான நகர்வாகும். இதனை எச்சரிக்கையுடன் விளங்குவதே ஈழத்தமிழருக்கு சாதகமானதாக அமையும். •



பொதுசன நூலகம்



# காரசாரம்

## உணர்வுகளை புண்படுத்தவேண்டாமே...

உயிர்களைச் சித்திரவதை செய்வது பாவம். இதைவிட அவற்றைக் கட்டிவைத்து, அதாவது இரு கால்களையும் பிணைத்து அவற்றை அசையமுடியாதபடி வைத்துக்கட்டுவதும் அப்படியே வேறு வேறிடங்களுக்கு மாற்றுவதும் பாவம். அவற்றை 'வாயில்லாத சீவன்' என்றே விளிப்பர். காரணம் அவற்றால் பேசமுடியாது. இவற்றுக்காகக் குரல் கொடுக்க ஜீவகாருண்யச்சபைகள் உலகெங்குமுள்ள பல நாடுகளில் உண்டு. அயல்வீட்டில் நாயொன்று அவலமாகக்கத்துவதைக் கேட்ட ஒருவர், அதை ஜீவகாருண்யச் சபையினருக்கு அறிவிக்க, அவர்கள் காவல் துறையினருடன் குறித்த வீட்டை அணுகிச் சோதனையிட்ட போது



நாயை வீட்டினுள் வைத்துப் பூட்டி விட்டு வீட்டுக்காரர் வெளியூர் போயிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அவருக்கெதிராக அவருடைய நாயைப் பட்டினிபோட்டது. இரவில் அடைத்து வைத்தது (பகலில் அடைக்கலாம்) போன்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் வழக்குப் போடப்பட்டு வீட்டுக்காரர் அபராதம் கட்டினார். இது ஸ்கொட்லாண்டில் நடந்தது.

சிறிலங்காவின் ஊவா மாகாணத்தில் ஒருவர் தான் பெற்ற பிள்ளையை சங்கிலியில் பூட்டி வைத்தமைக்காக (அயலவர் தகவல்) சிறைத்தண்டனையை அனுபவிக்கிறார். பூனை ஈன்ற குட்டிகளைத் தெருவில் விட்டமைக்காகத் தண்டிக்கப்பட்டவர்கள் உண்டு. தவிர இந்த ஜீவகாருண்யச்சபைகளின் இடையீடு காரணமாகவே இன்னும் தெருநாய்களை அழிப்பதற்குச் சரியான கொடுமையற்ற முறைகளைக் கண்டுபிடிக்க அரசுகள் திணறுகின்றன.

உயிர்க்கொலை என்பது அனுமதிக்கப்பட்ட ஒன்றுதான். உணவுக்காக உயிர்களைக் கொல்வது சகல உயிரினங்களுக்கும் விதிக்கப்பட்ட விதி. உணவுச்சங்கிலியின் படி தாவரங்களையும் விலங்குகளையும் ஒன்றாக உண்ணும் விலங்கு மனிதன். உணவுக்காக ஆதியிலிருந்து வேட்டையாடி வருகிறான். வேளாண் தொழிலில் கால்நடை வளர்ப்பை மேற்கொண்டு வருகின்றான். உணவுக்காக கோழி, முட்டை, ஆடு, மாடு, முயல் போன்ற அநேக உணவுக்காகக் கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. இலங்கையின் தேவைக்கு தினசரி மூன்று கோடி கோழிகள் தேவைப்படுகிறதாம். (முட்டை உட்பட) மூன்று கோடியில் ஒரு கோடி இறைச்சிக்கென வெட்டப்படுகிறது. இதேபோன்று ஆடுகள், மாடுகள் கூட பெருந்தொகையில் வெட்டப்படுகின்றன.

இதே சமயம் இக்கோழிகள், மாடுகள், ஆடுகள் என்பவை மக்களின் செல்லப்பிராணிகளாகவும் வளர்க்கப்படுகின்றன. குறிப்பாகக் குழந்தைகள் இவற்றுக்குப் பெயர் சூட்டி உணவளித்துக் கூடிவிளையாடி மகிழ்கின்றனர். இதே பிராணிகளை வீட்டின் தேவைக்கு வெட்டும் போது அவர்களுக்குத் தெரியாமல்தான் கொல்லவேண்டியுள்ளது (வேண்டும்). எனவே 1887 ஆம் ஆண்டில் இறைச்சிக்கடைச் சட்டம் என ஒன்று கொண்டுவரப்பட்டது. இச்சட்டத்தின்படி வெட்டப்படும் விலங்குகளுக்கு. இறுதி நேரம்வரை உணவளித்தாகவேண்டும். இதற்கென உள்ள வைத்தியர் ஒருவர் அவ் விலங்கைப் பரிசோதித்து அது நோயற்ற பிராணி என்பதற்கான சான்றை அளிக்கவேண்டும். வெட்டுவதற்காகத் தெரிவுசெய்யப்படும் பிராணி முதல்நாளே அதாவது இருபத்து நான்கு மணித்தியாலங்களுக்கு முன்பாக மக்கள் பார்வையில் கட்டி வைக்கவேண்டும். வெட்டப்படும் இடம் பொது மக்கள் குடியிருப்பில் இருந்து ஒதுக்குப்புறமாக அமைதல் வேண்டும். கழிவுகள் உடனடியாக அகற்றப்பட்டு வெட்டுக்களம் கழுவப்படவேண்டும். வெட்டுக்களம் மக்கள் பார்வையிலிருந்து மறைப்புக் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். வெட்டிய புலால் எட்டு மணித்தியாலத்துள் நுகர்வோரைச் சென்றடைதல் வேண்டும். (அப்போது குளிர்சாதனம் இல்லை) சரி இந்தச் சட்டத்தில் ஆடு, மாடு,பன்றி என்பவை மட்டுமே அடக்கப்பட்டுள்ளன. கோழி புதிதாக இவற்றுடன் சேர்ந்துவிட்டது. அதனால் அதற்கென ஒரு சட்டம் போடப்படவேண்டியுள்ளது.

நிலையாக உள்ள இந்தச் சட்டங்களில் இன்னொரு சரத்தாக கோழிகள் பற்றியும் சேர்க்க வேண்டுமெனப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. கொலை என்பது பிராணிகளோ அல்லது வேறெதுவுமோ ஒருவருடைய மனநிலையைத் தாக்கத்துக்குள்ளாக்கிவிடும். தற்காலத்தில் பகிரங்கமாக மனிதர்களையே சுட்டுத்தள்ளிய தள்ளும் காட்சிகளை பார்த்துப் பார்த்தே மரத்துப்போயுள்ள மனநிலை பாதித்துள்ள மக்கள் இருக்கிறார்கள். என்றாலும் எங்கள் எதிர்காலச் சந்ததியினரை யாவது மனநலமுள்ளவர்களாக மாற்றவும் நாம் ஒரு நாகரிகம் தெரிந்த இனமாக மாறவும், பழகவேண்டும். மக்கள் புழங்கும் பகிரங்கமான இடங்களில் ஏதோ வாழைக்காயைத் தோல் சீவுவதுபோல கொலைசெய்து தோலை உரிப்பது நல்லதல்ல. மனிதம் என்பது எல்லாவிடயங்களிலும் பேணப்படமுடியாததுதான். என்றாலும், ஓரளவு மற்றவர்களின் உணர்வுகளைப் புண்படுத்தாமலாவது எங்கள் வேலைகளைச் செய்யலாமே.

## தொலைபேசி உலகம்..!

மாயா



தொலைபேசியைக் கண்டு பிடித்தவர் அதனுடைய பயன்பாட்டை அறிந்திருந்தாரா என்பது தெரியவில்லை. ஏனெனில் இன்றைய தொலைபேசி உலகு என்பது கிரஹாம்பெல்லின் நோக்குகளுக்கும் அப்பால் போய்விட்டது. கையைக் காதோடு சேர்த்துப்பிடித்துக்கொண்டு தனக்குத்தானே பேசிக்கொண்டும் தலையாட்டிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் ஒருவர் நடந்து சென்றால், அவர் மனநோயாளர் (பைத்தியம்) என்றுதான் அர்த்தம். இன்று அப்படிப்பட்ட மனநோயாளர்கள் ஏராளமாகப் பெருகிவிட்டனர். பஸ்ஸில் பயணஞ் செய்துகொண்டிருக்கிறோம். திடீரெனப் பக்கத்தில் நின்றவர் வெடிச்சிரிப்பு ஒன்றை உதிர்க்கிறார். திரும்பிப்பார்த்தால் காதில் கையை வைத்துக்கொண்டு தலையைச் சாய்த்துக்கொண்டு " 'நோ'டா டைம் இல்ல... கண்ணில்ல கோவிக்காதடா... பிளீஸ்ம்... ம்..." என்று கொஞ்சிக்கொடிருக்கிறான். பக்கத்தில் ஒரு இளம் பெண் பயணி, நெளிந்துகொண்டு, இதைச்சகிக்கவேண்டியுள்ளது. அவன் உண்மையாகவே போனில் தான் பேசுகிறானா? என்ற சந்தேகம் எனக்கு. யாரிடமாவது முக்கியமான தகவலைச் சொல்லப் பொதுத் தொலைபேசித் தளத்துக்குப் போனால் அங்கேயும் இதே தொல்லை. போனி லேயே மணிக்கணக்கில் பேசி கலியாணம் முற்றாக்கும் 'புரோக்கர்'மாரே உள்ளனர்.

அலுவலகங்களில் அதிகாரிகளைச் சந்திக்கப் போகிறோம். ஒரு பிரச்சினையை நேரில் பேசித் தீர்க்கத்தானே போகிறோம். ஆனால் அங்கோ மேசைக்கு மேசை ரெலிபோன். அலுவலக நேரத்தில் சொந்த அலுவல்களை உறவினர்களுடன் மணிக்கணக்கில் பேசி ஒருவழியாக வேலை நேரம் முடியுந்தறுவாயில் மக்களிடம்"அடடா நேரமில்ல நான் முக்கியமா வெளியாலபோறன்... நீங்கள்... கிழமை வாங்கோவன் முடிச்சுத்தரலாம் என்பவர்கள் அதிகம். சில அலுவலகங்களில் தொலைபேசி அழகுக்காகவே வைக்கப்பட்டுள்ளதோ என நினைக்கத்தோன்றும். ஓர் ஆளை அழைக்கும்போது அந்தத் தொலைபேசி வேலைசெய்யாது. சில தொலைபேசிகளில் அதிகாரிகளைக் கூப்பிட்டுப் பேசவேண்டியநேரம் அதை எடுப்பதற்கு ஒரு சிற்றூழியரும் இரார். சில தொலைத் தொடர்பு நிலையங்களில் தொடர்பை கேட்டாலே... பேசினாலும் சரி பேசாவிட்டாலும் சரி காசுகட்டவேண்டும். சில அதிகாரிகளிடம் நேரில் பேச நேரமில்லை என்றாலும் போனில் பேசினால் பதில் கிடைக்கிறது. எதிரில் இருப்பவர்களுக்கு தனக்கு நிறைய அழைப்புகள் வருவதாகக் காட்டுவது ஒரு பெருமை. ஒரு வைத்தியரை அழைக்க வாகனத்தைக் கூப்பிட, தகவலைச் சொல்ல பரிமாற என்றிருக்கும். இதே

தொலைபேசி இன்று ஒரு பொழுது போக்குச் சாதனமாகவும் மாறிவிட்டது. "ஹலோ... நான் சௌந்தர்யா பேசிறன் திருவையாத்திலயிருந்து"

"ஓ... சௌந்தர்யா... பேரைப் போல ஒங்கட கொரலும் செமஜோர்... ஹிஹிஹி"

"இஹ்ஹிஹ்ஹி... பார்க்காம எப்படிசொல்றீங்க..."

"ஹி...ஹி... இல்ல நீங்க வடிவான பொண்ணாத்தான் இருப்பீங்க இல்லியா சரி நீங்க என்ன செய்றீங்க.."

"ஓயெல் படிக்கிறன்... அண்ணா சுகமா... இருக்கிறீங்களா... எனக்கு நீங்கண்டா நல்ல விருப்பம்... ஓ... ம்...அ.. ஹிஹ்ஹி

"நன்றி நன்றி யார் யாருக்காகப் பாட்டுக்கேக்கப்போறீங்க-"

"அம்மாவான...கும், அப்பாவான...கும் அம்மாயில்லை அம்மா ஆனவருக்குப் பாட்டு.

இதே தொலைபேசியை எடுத்து உங்களுடைய தெருவின் கேடுகெட்ட நிலை பற்றி உரியவர்களிடம் எப்போதாவது பேசுவீர்களா. இதே தொலைபேசியில் உங்கள் கிராமத்துக்கான மின் விநியோகம், நீர்ப்பாசனம் பற்றி எப்போதாவது சம்பந்தப்பட்டவர்களிடம் பேசினீர்களா, கைத்தொழில் பற்றி அபிவிருத்திபற்றி நாட்டின் எதிர்காலம் பற்றி கல்விபற்றி... ஊகும் எதுவுமில்லை.

அப்போதே ஒரு கவிஞன் சொன்னான். தீபத்தை வைத்துக் கொண்டு திருக்குறளும் படிக்கலாம், தீயைக்கொண்டு மூடரெல்லாம் ஊரைக்கூட எரிக்கலாம்.

தொலைபேசியை வைத்துக் கொண்டு நல்லதும் செய்யலாம் என்று கொஞ்சம் சிந்திப்போமா?

## உள்ளத்தை உறுத்துமவை



அண்மையில் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து ஒரு சிறிய பாடசாலை ஒன்று கல்விச் சுற்றுலாவுக்குச் சென்றது. சிறிலங்காவின் மலைநாடு உட்பட பல முக்கிய இடங்களை இவர்கள் சென்று பார்த்தனர். மாணவர்கள் பெரும் மகிழ்ச்சியுடன் சென்று திரும்பினர்.

இச் சுற்றுலாவில் அண்ணளவாக ஐம்பதிற்கும் மேற்பட்ட மாணவர்களும், அதிபர், ஆசிரியர்கள் மற்றும் வெளியவர்கள் என கிட்டத்தட்ட எழுபது பேர் வரை சென்றனர். மாணவர்கள் அனைவரும் சுற்றுலாவுக்கு வர வேண்டும் என்பதில் பாடசாலை முதல்வர் உறுதியாக இருந்தார்.

கல்விச் சுற்றுலாவுக்குச் சென்று திரும்பிய மாணவர்கள் தாங்கள் கண்டு இரசித்த இடங்களை பற்றிக் கூறும்போது, சுற்றுலாவுக்குச் செல்லாத மாணவர்களின் மனநிலையில் தாக்கம் ஏற்படும் எனவும் இதனால் குறிப்பிட்ட அனைத்து மாணவர்களையும் சுற்றுலாவுக்கு அனுப்பி வைக்குமாறும் பெற்றோர்களிடம் பாடசாலை முதல்வர் கேட்டுக்கொண்டார்.

இதன்படி சுற்றுலாவுக்கும் சென்று திரும்பினர், இருப்பினும் இதே பாடசாலையில் கல்வி பயில்கின்ற தாய் இல்லாத வறிய குடும்பத்தைச் சேர்ந்த மாணவன் ஒருவனை இவர்கள் விட்டுவிட்டுச் சென்றுவிட்டார்கள்.

இதற்கு அந்த மாணவனின் வறுமையே காரணம். இதனை அந்தக்கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெரியவர் கூறும்போது, "எனக்குத் தெரிந்திருந்தால் நாங்கள் ஒரு இரண்டு பேர் காசைக் கொடுத்து அந்தப் பொடியனையும் சுற்றுலாவுக்கு அனுப்பி இருக்கலாம் என்றார்"

ஆனால் இந்தத் தேவைக்கு அங்கு அவசியம் ஏற்படவில்லை. பாடசாலை நிர்வாகம் மனம் வைத்திருந்தால் அம் மாணவனை அவர்கள் இலவசமாகவே அழைத்துச்சென்றிருக்கலாம், சுற்றுலாவுக்காக ஒவ்வொருவரிடமும் இருந்து ஆயிரம் ரூபா வீதம் அண்ணளவாக எழுபதாயிரம் ரூபா வரை மொத்தமாகச் சேகரித்த அவர்கள் ஒரு மாணவனை அல்ல பல மாணவர்களை இலவசமாக அழைத்துச் சென்றிருக்கலாம். ஆனால் அவர்கள் அதனைச் செய்யவில்லை ஏன் என்பது அவர்களுக்குத் தான் தெரியும்.

அந்தப் பாடசாலையை ஆரம்பித்த இம் மாவட்டத்தின் மறைந்த ஒரு சமூக சேவையாளர் வறிய மாணவர்களுக்காகவே ஒரு சிறுவர் பராமரிப்பு இல்லத்தினையும் ஆரம்பித்தார். அது ஒரு நிறுவனத்தால் இன்று பொறுப்பேற்கப்பட்டு நன்றாகவே நடத்தப்பட்டு வருகிறது. எனவே இவர் ஆரம்பித்து வைத்த இந்தப் பாடசாலையிலா இவ்வாறான கவனயீனம் என அக் கிராமத்தைச் சேர்ந்த பலர் ஆதங்கப்பட்டுக் கொள்கின்றனர். பாடசாலை முதல்வரின் கருத்துகூற்றுப் படி பார்த்தால் இப்போது அம் மாணவனின் மனநிலை...?

## கௌதம புத்தனுக்கு இது... கௌரவம் இல்லா வேலை!

சாந்தசொரூபனே...
கௌதம புத்தனே...
என்னவும் வேண்டாப் பெருமையனாய்
அன்பு, கருணை, அகிம்சையை
மண்ணுலகில் போதித்த மகா புனிதனே.
என்ன நிகழ்ந்தது உமக்கு?

போதிமர நிழலில்
ஞானம் கைவரப் பெற்ற சித்தார்த்தனே
நீதி தவறி விழ...
நெடும்பழி சுமக்கச் சபித்தவர் யாருனை?

ஆக்கிரமிப்பின் குறியீடாய் ஆனாய்நீ
மா தவறு பண்ணினர் உன்பேரால்
களங்கப் படுகின்றது புத்த தர்மம்!

"பிரித்" ஓதும் வாய்களாலேயே
இனவாதக் கூச்சலிட்டு இனங்களைப்
பிரித்தோதும் நின் சீடர்கள்!
நாட்டிலில்லை... மனிதர்களின்
நாவிலில்லை...
அட போதிமர நிழலில் கூடவா
நீதிக்கு ஓர் இடமில்லை?

இரவோடு இரவாகத் தூக்கிவந்து
ஆக்கிரமிப்பின் வடிவமாய் நட்டவர் யாருனை?
நீ போதித்த போதனை இதுதானா?
தீ உமிழ்கிறது நெஞ்சம்
சித்தார்த்தனே பதிலென்ன சொல்லு?

என்ன மதமானாலும் தெய்வம் நீ.
உன் சிலையை அகற்றென்பது
எமக்கும் அழகல்ல. அழகேயல்ல!
அது தமிழன் பண்பாடுமல்ல!
ஆதலால் புத்த பெருமானே...
ஆக்கிரமிப்பின் சின்னமாய் நீ
வந்திருக்கக்கூடாது.
வந்திருக்கவே கூடாது.
வந்துவிட்டாய்... எனினும்
வந்த வேகத்தில் சென்றுவிடு.
இன்றேல்...
அசிங்கப்படப்போவது
சிலையாகிய நீ மட்டுமல்ல
பௌத்த மதமும் இனம்தானே!

வேலணையூர் சுரேஷ்



## மருத்துவம்



# குழந்தைகளுக்கு ஏற்படும் சமிபாடின்மை

சமிபாடின்மை என்பது குழந்தைகளுக்கு ஏற்படும் மிகவும் சகஜமான ஒரு பொதுப்பிரச்சினையே. இது முக்கால்வாசி நேரடியான தவறுகளால் ஏற்படுகிறது. வயிற்றில் சமிபாட்டு அமிலங்கள் சரியான முறையில் சுரக்காமல் ஏற்படும் ஒருவித அசௌகரியமே சமிபாட்டுக் கோளாறுகள்.

**நோய்க்குறிகள்:-**

அடிவயிற்றில் வலி, சாப்பிட்ட பிறகு ஏதோ அதிகமாக வயிறு முட்ட சாப்பிட்டுவிட்டது போன்ற உணர்வு ஏற்படும். நெஞ்செரிச்சல், பசியின்மை, குமட்டல் அல்லது வாந்தி, வாயு வெளியேற்றம் அதிகமாக இருத்தல் ஆகியவை சமிபாட்டுக் கோளாறுகள் இருப்பதன் அறிகுறிகள். குழந்தைகளுக்கு சமிபாடின்மை உடனடியான கடுமைத்தன்மையுடனோ அல்லது நாட்பட்ட அசௌகரியமாகவோ இருக்கலாம். சமிபாடாகாத உணவு நீண்ட நேரம் வயிற்றில் இருக்கும் போது அழற்சி (Inflammation) ஏற்படும். நாட்பட்ட சமிபாடின்மையைத் தொடர்ந்து கடுமையான பிரச்சினைகள் ஏற்படும்.

**காரணங்கள்:-**

அதிகமாக சாப்பிடுவதால் அசௌகரியமும், உடல் வேதனையும் ஏற்படுகிறது. அதிகமாகச் சாப்பிடுதல் அல்லது அடிக்கடி சாப்பிடுதல் சமிபாட்டு உறுப்புகளை அளவுக்கு மீறி வேலை வாங்குகிறது. இதனால் அதிகமாக அமிலங்கள் சுரந்து, இரைப்பை சளிச்சவ்வு நெருக்கமடைகிறது. இதனால் ஹைபர் அசிடிட்டி ஏற்படுகிறது. அதிகமாக சாப்பிடுபவர்களே உங்கள் வயிறு கல்லீரல், கிட்னிகள் போன்ற அனைத்து உறுப்புகளுக்கும் தேவையற்ற சுமையை ஏற்றுகிறீர்கள் என்பதை உணருங்கள்.

குழந்தைகளும், சிறுவர் சிறுமிகளும் உணவை உடனுக்குடன் விழுங்கிவிடும் பழக்கமுடையவர்கள், பெற்றோர்கள் அதிகமாக உணவை வைத்து திணிக்கும் பழக்கத்தைக் கைவிடவேண்டும். ஏனெனில் ஹைட்ரோகுளோரிக் அமிலம் கூடுதலாகச் சுரக்கும், அதேபோல குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பும் அவசரத்தில் சீக்கிரமாகச் சாப்பிடவைக்கும் மோசமான பழக்கத்தையும் தவிர்க்கவேண்டும். இதனால் சீரண நீர், உணவுக் குழலுக்குள் பாயும். இது நெஞ்செரிச்சலை ஏற்படுத்தும்.

சரியாகச் சமைக்கப்படாத உணவும், குழந்தைகளுக்கு சமிபாடின்மையை ஏற்படுத்தும். சில குழந்தைகள் பீன்ஸ், முட்டைக்கோஸ், வெங்காயம், வெள்ளரி மற்றும் கடல் உணவுகளை விரும்பாது. சில சமயம் மலச்சிக்கலும் சமிபாட்டு கோளாறுகளிடையே ஏற்பட்டு அடிவயிற்றில் வலி ஏற்படும்.

**சிகிச்சை:-**

சமிபாட்டுப்பாதையை சுத்தம் செய்தலே இதற்குச் சரியான தீர்வு. முதலில் குழந்தைகளுக்கு வெறும் பழச்சாறுகள் மட்டுமே கொடுக்க வேண்டும். ஒரேஞ்சு சாற்றை வெந்நீரில் 50:50 என்ற விகிதத்தில் முதலில் கொடுக்கலாம்.

ஒரேஞ்சுஜூஸ் ஒத்துக்கொள்ளவில்லை எனில் கரட்ஜூஸ் கொடுக்கலாம். பழங்கள், பழச்சாறுகள் உணவு முறையை மேலும் 2 நாட்களுக்கு கொடுத்து வந்தபிறகு, சமிபாடாகக்கூடிய சற்று வேக வைத்த காய்கறிகள் மற்றும் மோர் ஆகியவற்றைக் கொடுக்கலாம்.

சமிபாடின்மைக்கு சிறந்த மருத்துவம் பழங்களே. ஏனெனில் சமிபாடாகாத உணவுகளை உடனே வெளியேற்றும் குணம் பழங்களுக்கு மட்டுமே உண்டு. சமிபாட்டுக் கோளாறுகளை குணப்படுத்தும் சிறந்த பழம் எலுமிச்சம்பழம், இதன் சாறு வயிற்றில் உள்ள பக்றீரியாக்களைத் தாக்குகிறது. இதனால் அமில உற்பத்தியைத் தடுக்கிறது. நல்ல ஆரோக்கியமான பசியைத் தூண்டுகிறது.

அதேபோல் ஒரேஞ்சுப் பழமும் சமிபாட்டிற்கு தேவையான நட்பு பக்றீரியாக்களை வளர்க்க பெரிதும் உதவுகிறது. திராட்சைப் பழம் வெப்பத்தை உடனடியாக தணித்து வயிற்று எரிச்சலை கட்டுப்படுத்துகிறது. அதேபோல் அன்னாசிப் பழமும் சமிபாட்டு உறுப்புகளை சீராக பராமரிக்க உதவுகிறது.

சமிபாடின்மையால் அவதியுறும் குழந்தைக்கு கீழ்வரும் ஆலோசனைகள் உதவிகரமாக இருக்கும்.

1) உணவு அருந்தும்போது தண்ணீர் அருந்தக்கூடாது. சாப்பிடும் முன் அரை மணி நேரத்திற்கு முன்னதாக அல்லது சாப்பாட்டிற்குப் பிறகு 1மணி நேரம் கழித்து நீர் அருந்தலாம்.

2) உணவை நன்றாக மென்று விழுங்கவேண்டும். சாப்பிடுவதில் அவசரம் கூடாது.

3) வயிறுமுட்டச் சாப்பிடக் கூடாது.

4) பசியில்லாதபோது சாப்பிடக்கூடாது.

5) சாப்பிடும்போது ஏகப்பட்ட உணவுகளைச் சேர்க்கக்கூடாது.

இவை போன்றவற்றைப் பின்பற்றும்போது குழந்தைகளுக்கு ஏற்படும் சமிபாட்டுக் கோளாறுகளை தவிர்த்து சுகமாக வாழலாம்.



## அறிவியல்



# புதிய கருத்தடை முறை

Implanon'இம்பிளானோன்' என்ற பெயரைக் கொண்ட சிகிச்சை நீண்ட வடிவமைப்பையுடைய ஒரு குழாய் போன்று காணப்படுகின்றது. பெண்கள் தமது முழங்கைக்கும் தோளுக்கும் இடைப்பட்ட பகுதியில் வைத்துக் கொள்ள முடியும். வைத்தியர்கள் சில நிமிட நேரம் சத்திரசிகிச்சையும் அற்ற வகையில் இதனைத் தோலுக்குள் புகுத்திவிடுவார்கள். கவனித்துப் பார்க்கும் எவருக்கும் இது தெரியக் கூடிய வாய்ப்பு மிகக்குறைவானது.

அத்தோடு மூன்று வருட காலத்திற்கு கருத்தடை உத்தரவாதம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதனை வெளியே எடுத்து மூன்று வருடங்களின் பின் புதிய Implanon ஒன்றைப் பொருத்தி' தொடர்ந்தும் மூன்று வருடங்களுக்கு 'கருத்தரிப்பு' ஏற்படப்படாமல் உடலில் பொருத்துவதும் வெளியே எடுப்பதும் சில நிமிடங்கள் செய்யக்கூடியது என்று வைத்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நெதர்லாந்தின் மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்யும் AKZO-NOBEL நிறுவனத்தின் சகோதர நிறுவனமான ORGANON இதனைத் தயாரித்துள்ளது. இதற்கு புதிய வைத்தியக்கண்டுபிடிப்புத் தொடர்பாக பத்திரிகையாளர்கள் வட்டாரங்கள் உட்பட பலர் கலந்து கொண்ட அறிமுக வைபவம் சுவிற்சலார்ந்தின் சூரிச் நகரில் இடம் பெற்றது. இதில் உரையாற்றிய ORGANON நிறுவனத்தின் வைத்திய பிரிவைச் சேர்ந்த Andreas keush 14 ஆண்டு கால ஆய்வின் பின் இம்முறை கண்டுபிடிக்கப்பட்டது என்று கூறினார்.

இந்த IMPLANON மருந்தானது உடலில் மாற்றங்களை ஏற்படுத்தும் என்றும் இதனால் சுரப்பிகளில் ஏற்படும் செயற்பாட்டு மாற்றங்கள் கருத்தரிப்பதற்கான வாய்ப்பை இல்லாமல் செய்கின்றன எனவும் தெரிவித்தார்.

2300 பெண்களுக்கு இந்த முறையை தமது நிறுவனம் பரிசோதனை செய்ததாகவும் குறிப்பிட்ட காலங்களில் எந்த ஒரு பெண்ணும் கருத்தரிக்கவில்லை என்ற விபரமும் அவரால் அங்கு வெளியிடப்பட்டன. மற்றைய எல்லாக் கருத்தடை முறைகளையும் விடவும் தற்போது சிறந்த கருத்தடை முறை இதுதான் என்றும் அறிவிக்கப்பட்டது. நடைமுறையிலுள்ள கருத்தடை மாத்திரைகள், ஊசி, மருந்துகள் விளைவுகளை ஏற்படுத்தக்கூடியவை. அத்தோடு குறுகிய கால பாதுகாப்பை வழங்கக் கூடியவை. இந்த வகையில் ஒப்பீட்டு ரீதியில் புதியமுறை சிறந்தது எனக் கருதப்படுகிறது.

இது பற்றிக் கருத்து வெளியிட்டுள்ள பாசல் (BASEL) பல்கலைக்கழக பேராசிரியர் JOHANNES BITZER இந்தப்புதிய கருத்தடை முறையானது இடைவெளிகளை அதிகரிக்க விரும்புபவர்களுக்கு வாய்ப்பு என்று தெரிவித்துள்ளார். ஒரு பிள்ளைக்கும் அடுத்த பிள்ளைகளுக்குமிடையே இரண்டு மூன்று ஆண்டுகள் இடைவெளியை விரும்புகின்றவர்கள் இதன் மூலம் அதிக நன்மை பெறுவார்கள். பேராசிரியர் JOHANNES BITZER BASEL பல்கலைக்கழக பீடத்தின் மகப்பேற்றுப் பிரிவிற்குப் பொறுப்பான பேராசிரியராக கடமையாற்றுகிறார். குறிப்பாக வேலைக்குச் செல்லும் குடும்பத்தை பொறுத்தமட்டில் ஒரு பெரும் நம்பிக்கையையும் உத்தரவாதத்தையும் வழங்குவதுடன் அவர்கள் மீதான சுமையையும் இது குறைக்கும் என்பது அவரது கருத்தாகவுள்ளது. அதே வேளை முற்றிலும் மாறுபாடான சுவிற்சலார்ந்தின் லுசேர்ன் மாநில வைத்தியசாலையின் மகப்பேற்று பிரதம வைத்தியர் BERNHARD SCHUSSELER வெளியிட்ட முறையானது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கருத்தடை மேற்கொள்ளும் பெண்களுக்கு ஒரு மாற்று வழியாக அமைய இந்த வகையானவர்கள் ஒரு வீதத்தினர் மட்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

SCHUSSELER கூறியுள்ள இன்னொரு விடயம் என்ன பெண் பிள்ளைகளைப் பெற விரும்பும் பெண்களுக்கு இது ஒரு நல்ல தடையாக அமைந்து விடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். பக்க விளைவுகள் குறித்தும் அவர் எச்சரிக்கத் தவறவில்லை. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பெண்களில் இரத்தம் தொடர்பான மாற்றங்கள் ஏற்பட்டன என்றும் மாதவிடாய் ஒழுங்காக ஏற்படவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பெண்களில் அதாவது வருடாந்தம் 10 வீதமானவர்கள் குறிப்பிட்ட காலத்தில் தமது உடலில் இருந்து IMPLANON அகற்றியுள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள BASEL பல்கலைக்கழகப் பேராசிரியர் முதன் முறையாக இத்தடை முறையைப் பயன்படுத்துவதற்கு செய்ய முடியாது என்றும் இது விடயத்தில் மகப்பேற்று வைத்தியரும் மகப்பேற்று உதவி நிறுவனங்களும் இது பற்றிய ஆலோசனை வழங்க முடியும் என்றும் சரியான பொருத்தமான முறையினை சுயவிருப்பின் பேரில் தெரிவு செய்ய முடியும் என்றும் கூறியுள்ளார். SCHUSSLER கருத்தான பெண்கள் நாளாந்தம் பயன்படுத்தும் மாத்திரைகளையே அதிகம் விரும்புகின்றார்கள்.

இரத்தத்தாலும் ஓமோன் சுரப்பிகளாலும் ஏற்படும் மாற்றங்களை குற்றச்சாட்டை ORGANON மாத்திரம் பக்கவிளைவாகக்கொண்டிருக்கவில்லை. மாத்திரைகள், ஊசிமருந்துகள் போன்றவற்றுக்கு இத்தாக்கம் உண்டு என்றும் கூறப்பட்டுள்ளது. செலவுரீதியாக மலிவானது என்று ORGANON நிறுவனம் கருதுகின்றது. செலவு சுமார் 300 சுவிஸ் பிராங்குகளாகும். இது 3 வருட செலவாகக் கணிக்கப்படவேண்டும் என கருதுகின்றது. கருத்தடை தொ்டர்பான ஆய்வுகள் பெரும்பாலும் பெண்களை கொண்டே செய்யப்படுகின்றன. ஆண்களைக் கருத்தடைக்குட்படுத்துவது பற்றிய ஆய்வுகள் குறைவாகவேயுள்ளன. இந்த நிலையில் நிறுவனம் ஆண்களுக்கான கருத்தடைமுறையொன்றையும் கண்டறிய ஆய்வுகளை ஆரம்பித்து இருப்பதாகவும் இவ்வாய்வின் முடிவுகள் விரைவில் வெளிவரும் எனவும் கூறப்பட்டுள்ளது.



# குடல் பாதிக்குமாம்..!

ஐபுப்ரோ.ஃபன் உள்ளிட்ட வலி நிவாரணி மாத்திரைகளை 3 மாதங்கள் வரை உட்கொள்ளும் 70 சதவீதத்தினருக்கு குடல் பாதிப்படைந்துள்ளதாக அமெரிக்க ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்!

மூட்டு, கழுத்து, தோள் பட்டை, கை,கால் வலி ஆகியவற்றால் பாதிக்கப்பட்டோருக்கு பெரிய உதவிகரமாக இருந்து வந்த வலி நிவாரணிகள் பற்றி இத்தகைய ஆய்வு இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களை மாற்று சிகிச்சை முறைக்கு அழைத்துச் சென்றுள்ளன.

ஹூஸ்டனில் உள்ள பாய்லர் மருத்துவக் கல்லூரி பேராசிரியர் மற்றும் அவரது சக மருத்துவர்கள் NSAIDS என்று அழைக்கப் படும் ஸ்டெராய்ட் அல்லாத அழற்சி எதிர்ப்பு மருந்துகள் எடுத்துக் கொண்ட 21 நோயாளிகளை பரி சோதனை செய்தனர். இவர்களுடன் பரசிட்டமோல் அல்லது வலி நிவாரணிகளை எடுத்துக்கொள்ளாத 20 பேரை ஒப்பிட்டுப் பார்த்தனர்.

இதில் 71 சதவீதத்தினருக்கு NSAIDS மாத்திரைகளால் குடல் பாதிப்படைந்துள்ளது தெரியவந்தது.

வலி நிவாரணிகள் வயிற்று உபாதைகளை உருவாக்கும் என்பது நாம் அறிந்த விஷயம் என்றாலும், குடல் சேதத்தை ஏற்படுத்தும் என்பது இன்று வரை தெரியாத ஒன்று என்கிறார் டாக்டர் ஒய். கிராஹாம்.

மூட்டு வலி தீர்க்க முடியாத பிரச்சினை என்றாலும் இதற்கு அஸ்ப்ரின், ஐபுப்ரோ.ஃபன் அல்லது நேப்ரோசென், அசிட்டோமினோ.ஃபன் அல்லது சில புதிய மருந்துவகையும் அளித்து சிகிச்சை செய்து வருகின்றனர்.

NSAIDS வலி நிவாரணிகள் நன்றாக பலனளித்தாலும் வயிற்றையும், குடலையும் சேதப்படுத்துகிறது என்று கூறிய கிராஹாம், அமெரிக்காவில் ஆண்டொன்றிற்கு 16,500 பேர் மரணமடைவதற்கு NSAIDSகள் காரணம் என்கிறார்.

அஸ்ப்ரின் அல்லது பிற மருந்துகளை ஒரு ஆண்டிற்கு எடுத்துக்கொண்டவர்களில் 1 முதல் 4 சதவீதம் வரை குடல் தொடர்பான நோய்கள் வருகின்றன என்கிறார் டாக்டர் கிராஹாம்.

மருத்துவரின் சிபாரிசு இல்லாமல் மருத்துவக் கடைகளில் கேட்டுப்பெறும் நேப்ராக்சின் போன்ற வலி நிவாரணிகளால் மாரடைப்பு மற்றும் பக்க வாதநோய் வாய்ப்புகளால் அதிகம் ஏற்படுகிறது என்று ஆய்வு தெரிவித்துள்ளது.

NSAIDS யால் ஏற்படும் வயிற்றுக் கோளாறுகளை குணப்படுத்த ஆன்டாசிட் மருந்துகளை மருத்துவர்கள் கொடுத்து வருகின்றனர்.மேலும் சிலர் புரோட் டான் பம்ப் இன் ஹிபிட்டர்ஸ் என்று அழைக்கப்படும் ஷமிப்ரசோல் போன்றவைகளை சிபாரிசு செய்கின்றனர். ஆனால் புரோட்டான் பம்ப் இன்ஹிபிட்டர்களால் சிறு குடல் பாதிப்பு ஏதுமில்லை என்கிறார் டாக்டர் கிராஹாம்.

இதற்கிடையே கடந்த மாதம் அமெரிக்க அரசு தரப்பில் மேற்கொண்ட ஆய்வில் மூட்டு தொடர்பான உபாதைகளுக்கு அக்குபஞ்சர் உதவுகிறது என்று கூறப்பட்டுள்ளது.

**அன்பு, கருணை, மானிடத்தயவு, சமூகப் பெறுமானங்களை மதித்தல், ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு, சமூகப் பொறுப்புக்கள், உரிமைகளையும் கடமைகளையும் பாதுகாத்தல் ஆகிய விழுமியங்களை உள்ளடக்கிய சமூகக் கட்டுப்பாடானது முழுச் சமூகத்துக்கும் நன்மை பயப்பதாகும். பின்னடைவான சமூகங்களுக்கு மேம்பாட்டு வழிகாட்டிகளாக சமூகக் கட்டுப்பாடு அமைகின்றது.**



# மனித வாழ்வில் சமூகக்கட்டுப்பாடு

**இனியவள்**

சமூகத்தை நெறிப்படுத்தும் முறைகளையே சமூகக் கட்டுப்பாடு என்று அழைக்கின்றோம். மனிதர்களை அவர்களாலேயே உருவாக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் நியாயங்கள் இவற்றிலிருந்து வழுவாமல் எவை எவையெல்லாம் பாதுகாக்கின்றனவோ அவையெல்லாம் சமூகக் கட்டுப்பாடு எனும் தலைப்பின் கீழ் விவாதிக்கப்படுகின்றன. ஒட்டுமொத்த சமூகத்தையும் கால வெள்ளத்தின் மாறுதல்களுக்கேற்ப நெறிப்படுத்துவனவெல்லாம் சமூகக் கட்டுப்பாட்டின் அம்சங்கள்தான் என்ற கருத்தும் நிலைபெற்றிருக்கிறது. இதன் மூலம் நாம் அறிவது மனித சமூகத்தைக் கட்டுக்குள் வைத்திருக்கும் அமைப்பையே சமூகக்கட்டுப்பாடு என்கிறோம்.

ஒவ்வொரு சமூகத்திலும் தனி மனிதர்கள் மற்றும் குழுக்கள் இவற்றை முறைப்படுத்தும் அமைப்புகள் உள்ளன. இவ் அமைப்புகளே சமூகக்கட்டுப்பாடு என அழைக்கப்படுகின்றன. நெறிப்படுத்தப்பட்ட சமூக வாழ்வை ஒட்டியே மக்களை வாழ வைக்கவும் நெறிபிறழ் நிலைக்கு சென்றுவிடாமல் தடுக்கவும் உருவான ஓர் ஏற்பாடே சமூகக் கட்டுப்பாடு என சமூகவியலாளர் கருதுகின்றனர். இந்தச் சமூகக்கட்டுப்பாடு தொடர்ந்து செயல்பட சில சமூகப்பயன் மதிப்புகளும் உதவுகின்றன. சமூகப் பயன்மதிப்புகளோடு வேறு சில காரணிகள் கூட சமூகக்கட்டுப்பாட்டுக்கு உதவுகின்றன. கில்லின் எனும் ஆய்வாளரின் கருத்துப்படி, சில நடவடிக்கைகள், பரிந்துரைகள் மற்றும் கருத்துக்கள், தடைகள், தூண்டுதல்கள், பலவந்தமான செயற்பாடுகள் இவை யாவும் கூட சமூகக்கட்டுப்பாட்டுக்குக் காரணமாக அமைகின்றன என்பார்.

"மனிதன் ஒரு சமூகப்பிராணி" என்பதாக அரிஸ்டோட்டில் கூறுகின்றார். தனது தேவைகளை தான் விரும்பியவாறு பூர்த்திசெய்துகொள்ள மனிதன் விரும்புகின்றான். இந்தத் தேவைகளும், அவற்றை அடைய அவன் பல சந்தர்ப்பங்களில் உருவாக்கும் வழிமுறைகளும் சமூகம் விதித்துள்ள கட்டுப்பாடுகளினின்றும் விலகிச் செல்வதாக அமையலாம். சமூக ஏற்பாடுகளிலிருந்து இச் செயற்பாடுகள் விலகிச் சென்றால் சமூகத்தில் சட்டம், ஒழுங்குகெட்டு குழப்பமே மிஞ்சுகிறது. மனிதனின் இந்த முரண்பாடான செயல்பாடுகள் ஏதாவது சிலவழிகளில் கட்டுப்படுத்தப்படவேண்டும். இது பண்பட்ட மனித உருவாக்கத்துக்கு வழிவகுக்கும்.

சமூகம் தனி மனிதனின் வழிமுறைகளைக் கட்டுப்படுத்தலையே பற்பல கோணங்களில் அவசியமாக்குகிறது. சமூகம் எதிர்பார்க்கும் கோணத்தில் மனிதனின் செயற்பாடுகள் அமையுவேண்டும் என்பதே சமூகக்கட்டுப்பாட்டின் நோக்கமாகும். ஆர்.ஜி.ஸ்மித் எனும் சமூகவியலாளரின் கருத்துப்படி அனைவராலும் உணரப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறைகளைக்கொண்டு இலக்கினை நாம் அடைவதையே சமூகக் கட்டுப்பாடாகக் காண்கிறோம் என்பார்.

சமூக வாழ்வில் பல்வேறு வாழ்வியல் முறைகள் உள்ளன. இவ் முறைமைகளின் நோக்கம் யாதெனில், சமூக வாழ்வுக்குப் பொருத்தமாகவும், அதன் நோக்கங்களுக்கு முரண்படாமலும் மனிதன் வாழவேண்டும் என்பதுதான். இந்த நடவடிக்கையே சமூகமயமாக்கல் என்பதாகும். சமூக மயமாதலின் ஆரம்ப காலகட்டத்தில்தான் சார்ந்திருக்கும் குழுவின் பழக்க வழக்கங்களை ஒட்டியே வாழ்க்கை ஆரம்பமாகிறது. பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஒப்பார்குழு இவர்களிடமிருந்தும் குழந்தைகள் சில சமூகப் பயன் மதிப்புகளைப் பெற்றுக்கொள்கின்றனர்.சில நடவடிக்கைகளில் ஈடுபட நியாயத்தையும் தூண்டுதலையும் ஏற்படுத்துபவை இச் சமூகப் பயன் மதிப்புகளே. எனவேதான் சமூக மயமாதல் எனும் நடவடிக்கை சமூகக் கட்டுப்பாட்டுக்குக் காரணமான தலையாய காரணியாய் விளங்குகிறது.

சமூகக்கட்டுப்பாட்டில் கல்வியும் முக்கிய பங்கு வகிக்கின்றது. மானிடப் பண்பானது சமூகத்திற்கு சமூகம் வேறுபடுகிறது. மனிதன் ஏதோ ஒரு வகையில் ஒவ்வொரு இடத்திலிருந்தும் கல்வியைப் பெறுகின்றான். குடும்பம், பாடசாலை, விளையாட்டுக்கள், சங்கங்கள், பல்கலைக்கழகங்கள், வெகுசனத் தொடர்பு சாதனங்கள் இன்னோரன்ன பல இடங்களிலிருந்தும் அவனுக்கு கல்வி கிட்டுகிறது. இந்த வகையில் கல்வி ஒரு முக்கியமான சமூகக்கட்டுப் பாட்டுக்காரணியாக விளங்குகிறது. மக்கள் எவ்வாறு இருக்கவேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் வழிமுறையாகச் செயல்படுகின்றது. ஆயினும் கல்வி கற்பிக்கப்படும் முறை சமூகத்திற்குச் சமூகம் வேறுபடுகிறது. கில்லின் மற்றும் கில்லின் (Gillin and Gillin) கூற்றுப்படி கல்வியின் மூலம் உண்மையை உணரும் தன்மையும், அறிவைப் பயன்படுத்தும் தன்மையும், உணர்வுகள், பழக்கவழக்கங்கள், பாரம்பரியம், இவற்றின் வழியாக சமூகக்கட்டுப்பாட்டை நிலைநிறுத்தும் தன்மையும் ஒருங்கே அடைகிறோம் என்பார்.

சமூகக் கட்டுப்பாட்டில் நம்பிக்கையும் சமயமும் பெரும் பங்கு வகிக்கின்றன. நம்பிக்கைகளும், சமயத்தின் தாக்கமும் மனிதனின் நடத்தையை சமூகத்தின் எதிர்பார்ப்புகளுக்கும் சமூகப் பயன் மதிப்புகளுக்கும் தகுந்தவாறு கட்டுப்படுத்தப்படுகின்றன. மாற்றங்கள் மிக அதிகமாக நிகழும் சமூகத்தைக் காட்டிலும் நிலைத்த தன்மை கொண்ட சமூகத்தில் சமயமும் நம்பிக்கைகளும் முக்கியமான கட்டுப்பாட்டுக்காரணிகளாக விளங்குகின்றன.

ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள் போன்றவை சமூகக் கட்டுப்பாட்டுக்குக் காரணமாக அமைகின்றன. பெரிய மனிதர்களின் அறிவுரைகள், புத்தகங்கள், பிரச்சாரங்களின்போது தெரிவிக்கப்படும் கருத்துக்கள் இவையெல்லாம் சமூகக் கட்டுப்பாட்டுக்காரணிகளாக அமைகின்றன. சில சந்தர்ப்பங்களில் சடங்குகளும், விழாக்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. இந்தச் சடங்குகளுக்கென்று சில அர்த்தங்கள் முன்னோர் வகுத்திருக்கின்றனர். இந்த அர்த்தங்களின் வழிநின்று மனிதர்கள் தம் வாழ்வினை நெறிப்படுத்திக்கொள்வதும் ஒருவித சமூகக் கட்டுப்பாடே. அதேபோன்று ஒவ்வொரு சமூகத்திலும் பல விழாக்கள் நடைபெறுகின்றன. மனிதர்கள் ஆன்மீகம் மற்றும் சமூகத் தேவைகளை உணர்வதற்காகவும் சமூக நலத்தையும் உணரவேண்டும் என்பதற்காகவும் உருவானவை. ஒரு மனிதன் மற்றைய மனிதனின் நலனில், உணர்வில் எவ்வாறான பங்கை வகிக்க வேண்டுமென்பதையும் நல்வழிகளையும் போதிக்கின்றன.

எந்தக் காலத்திலும் தலைவர்கள், மக்களுக்கு ஏதாவதொரு வகையில், ஏதாவது ஒரு துறையில் வழிகாட்டிகளாக இருந்து வந்திருக்கின்றனர். இவ் வழிகாட்டுதலும் சமூகக் கட்டுப்பாட்டின் ஒரு பகுதியே. சமூக, அரசியல் துறைகளில் மட்டுமல்லாது ஆன்மீகம்போன்ற துறைகளிலும் தலைவர்களின் செயற்பாடு மனிதர்களின் சொந்த வாழ்க்கையில் பெரும் செல்வாக்கினை ஏற்படுத்தி மாற்றங்களை நிகழ்த்தியுள்ளது.

சட்டமும் நிர்வாகமும் முக்கிய சமூகக் கட்டுப்பாட்டு வழிமுறைகளாகச் செயற்படுகின்றன. சமூகத்தில் உள்ள தனிமனிதர்களின் நடத்தையைக் கட்டுப்படுத்துவதற்காகவும் ஒழுங்குபடுத்துவதற்காகவும் சில சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இச் சட்டங்களுக்கு கீழ்ப்படியாதிருத்தலும், அவற்றை மீறுதலும் தண்டனைக்குரியவையாகக் கருதப்படுகின்றன. நவீன சமூகத்தில் சட்டம் மனித வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் தொடர்புடையதாக இருக்கிறது.

தத்துவங்களும், தத்துவார்த்த விளக்கங்களும் கூட சமூகக் கட்டுப்பாட்டுக் காரணிகளாக அமையும் வாய்ப்புண்டாகிறது.

பல சமூகங்களில் பண்பாட்டின் ஒரு முக்கிய செயற்பாடு எதுவெனில் மக்கட் கூட்டத்தை நெறிப்படுத்துவதும் அவர்கள் சிந்தனையை ஒருமுகப் படுத்துவதுமாகும். சமூக வாழ்வின் தொடர்ச்சிக்காக, மனிதர்கள் தங்களை இதனுள் ஈடுபடுத்தியேயாகவேண்டும். 'மாந்தர் வழி' எனும் கருதுகோளினை அறிமுகப்படுத்தியவர் கிரஹம்சம்னர் என்பவராவார். 'மாந்தர்வழி' ஒரு குழுவைப் பொறுத்தளவில் நேர்மறையான பங்கினை வகிக்கிறது. அவை குழுவாழ்க்கையைப் பிரதிபலிக்கின்றன. 'மாந்தர்வழி' என்பது நம்பிக்கைகள், மனப்பான்மைகள், நடத்தை வழிகள் போன்றவை ஒரு குழுவிலோ சமுதாயத்திலோ கடைப்பிடிக்கப்படும் விதமேயாகும்.

ஏற்புத் தரங்களுக்கு உலகளாவிய தன்மைகள் கிடையாது. ஆனால் அவற்றுக்கு பழமை வாதத் தன்மை உண்டு. ஏற்புத்தரங்கள் தனிமனித நடத்தையைத் தீர்மானிக்கின்றன. ஒவ்வொரு மனிதனையும் இனம்காண ஏற்புத்தரங்கள் உதவி புரிகின்றன. சமூக அங்கத்துவத்தை நிலைநிறுத்த ஏற்புத்தரங்கள் உதவுகின்றன. இந்த வகையில் ஆளிடைத் தொடர்புகளுக்கேற்ப சமூகக்கட்டுப் பாட்டுக்காரணியாக செயற்படுகின்றன. சமூகச் சிந்தனையாளர்களின் கருத்துப்படி, குழுக்களின் தொடர்ந்த செயற்பாட்டுக்காக சமூக உறுப்பினர்கள் சில வழக்கங்களைக்கடைப்பிடிக்கின்றார்கள் இவையே ஏற்புத் தரங்களாக உருவாகின்றன.

சமூகக் கட்டுப்பாட்டின் மூலம் சமூகத்தின் அமைப்பு குலையாமல் பாதுகாக்கப்படுகிறது. ஹேபர்ஸ் பென்சரின் கூற்றுப்படி, சமூகம் என்பது தனிமனிதர்களின் கூட்டமைப்பேயாகும். மனிதன் தனது தனித்துவத்தையும், தன்மைகளையும் பாதுகாப்பதற்கு சில கட்டுப்பாடுகளையும் கடமைகளையும் உருவாக்க வேண்டியுள்ளான். இதற்காக அவன் சில சட்டதிட்டங்களையும், நிறுவனங்களையும் உருவாக்கிக் கொள்கிறான். சமூக ஒழுங்கை கடைப்பிடிக்கின்றான். இதுவே சமூகக் கட்டுப்பாடாக நிலைபெறலாயிற்று.

பெர்ரினாண்ற்ரோனிஸ் எனும் அறிஞரின் கூற்றுப்படி, சமூக நியமங்கள் மக்களை வழிநடத்துவதுடன், கட்டுப்பாட்டுக் காரணியாகவும் செயல்படுகிறது.

சமூக நியமங்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்படுகின்றன. அவை முறையே ஒழுங்குமுறையுடன் தொடர்புடையவை, சட்டத்துடன் தொடர்புடையவை, நெறிமுறைகளுடன் தொடர்புடையவை.

எல்லாவகையான சமூக வழக்கங்களும், பாரம்பரியங்களும், சமூக நியமங்களின் அடிப்படையாக அமைய முடியாது என்கிறார் ரோனிஸ். நவீன சமூகத்தில், புதிய சூழல்களை சந்திப்பதற்காகப் பல சட்டங்கள் இயற்றப்படுகின்றன. பல்வேறு சந்தர்ப்பங்களில் சட்டங்களும், வழக்கங்களும் பாரம்பரியங்களும் ஒத்துப்போவதில்லை. பொது மக்கட் கருத்து வெளிப்படையாக அமைகிறது. நாட்டுப்பற்றைப் பிரதிபலிப்பதாகவும், முறைப்படுத்துவதாகவும், பொதுமக்கள் கருத்து ஒரு நாட்டில் விளங்குகிறது. பொது மக்கள் கருத்து பொதுப் பிரச்சினைகள் சிலவற்றுடன் தொடர்புடையதாய் விளங்குகிறது. சமூக அல்லது பொது வாழ்வின் கட்டுப்பாட்டுக் காரணியாக இக் கருத்து செயற்படுகிறது.

நல்கொற்பார்சன் எனும் சமூகச் சிந்தனையாளரின் கருத்துப்படி, சமூக ஊடாட்டத்தை நெறிப்படுத்தும் முறைகளையே சமூகக்கட்டுப்பாடு என்கிறோம். சமூகச்செயற்பாட்டு நடவடிக்கைகளின்போது, ஆளுமை, பண்பாடு, சமூக அமைப்பு போன்றவையெல்லாம் சீராகச் செயற்பட்டு ஏற்றத்தாழ்வற்ற நிலையை ஏற்படுத்துகின்றன. சமூக மற்றும் பண்பாட்டு இயக்கத்தை நிலை நிறுத்துவதே சமூகக்கட்டுப்பாட்டின் நோக்கமாகும்.

வேறுசில வழிகள் மூலமாகவும் சமூகக் கட்டுப்பாட்டை ஒரு சமூகம் உருவாக்கக்கூடும். சமூக அமைப்பிலும், பண்பாட்டிலும் உள்ள சில கூறுகளை எதிர்ப்பதன் மூலமாகவும், ஒதுங்கி வாழ்வதன் மூலமும் சமூகம் கட்டுப்பாட்டினை சில சந்தர்ப்பங்களில் ஏற்படுத்தக்கூடும் என்பார் பார்சன்.

சமூகமே சில வகையான நடத்தைகளை ஆதரிக்கிறது. எனவேதான் அந்தமாதிரியான நடத்தை கொண்ட மனிதர்கள் ஆதரிக்கப்படுவதையும், அதற்கு மாறாக செயல்படுபவர்கள் தண்டிக்கப்படுவதையும் காண்கிறோம்.

அமெரிக்க சமூகவியலின் தூண்களாகக் கருதப்படும் எட்வாட். ஏ.றாஸ், சி.எச்.கூலி, வில்லியம் கிரஹாம்ஸம்னர் ஆகியோர் சமூகக் கட்டுப்பாடு தொடர்பாக பகுப்பாய்வு செய்துள்ளனர். சமூகக் கட்டுப்பாடு எனும் நடவடிக்கை, சமூகக் கட்டுப்பாட்டின் விளைவுகள், சமூகக் கட்டுப்பாட்டினை நிலைநிறுத்தும் முறைகள் போன்றவை பற்றியதான கருத்துக்களைக் கூறியுள்ளனர்.

சமூகக் கட்டுப்பாட்டைப்பற்றிக் கூறும்போது நாஸ் தெரிவிப்பது என்னவென்றால், தனி மனிதர்கள் மீதும் சமூகத்தின் மீதும் ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்று நினைக்கும் சிலரின் மேல் நோக்கிய நகர்வுதான் சமூகக் கட்டுப்பாடு என்று கூறப்படுகிறது. நாஸ் அறிமுகப்படுத்திய அதீதமான சமூகக்கட்டுப்பாடு எனும் கருதுகோளின் படி யுக்தியும் தந்திர எண்ணங்களும் கொண்டோரால் கருத்து வெளியிடும் போதும், பயமுறுத்தல் போன்ற நடவடிக்கைகளாலும் சமூக உறுப்பினர்களை ஆட்டுவிக்கின்றார் என்பார்.

ஒரு தனி மனிதனின் ஆளுமை குழுவின் நிர்ப்பந்தத்திற்கும் அதன் தாக்கத்திற்கும் உட்பட்டதே என்று கூறுகிறார் சி. எச்.கூலி, இந்த ஆளுமைத் தன்மையே தனிமனிதனின் வரலாற்றையும் அவனின் நடத்தையையும் அறிந்துகொள்ள உதவுகின்றது. குறிப்பாக கூலியின் நிலைக் கண்ணாடி-தான் எனும் கருதுகோளும் உணர்வுகளின் சமூகத்தோற்றம் பற்றிய அவரது கருத்துகளும் பெரும் வரவேற்பைப்பெற்றதுடன் சமூகமயமாதல் எனும் நடவடிக்கையைப் பிறர் ஆழ்ந்த ஆய்வுகள் செய்யவும் ஏதுவானது. தனிமனிதனுக்கும் குழுவுக்கும் இடையேயான ஊடாட்டத்தைத் தெளிவாகப் படிக்கவும் கூலியின் கருத்துகள் பெரிதும் உதவின.

வில்லியம் கிரஹாம் ஸம்னரின்

(22 ஆம் பக்கம் பார்க்க..)




**கடந்த 20.05.2005 அன்று இயற்கை எய்திய நாட்டுப்பற்றாளர் செம்பியன் செல்வன் என்ற புனைபெயரைக் கொண்ட ஆறுமுகம் இராஜகோபால் அவர்களின் 'காண்டீபம்' எனும் சிறுகதையினை அவரது 'சர்ப்பவியூகம்' எனும் சிறுகதைத்தொகுப்பிலிருந்து எடுத்து இங்கு பிரசுரிக்கிறோம்.**




அவர்கள் இருவரும் வேகமாக நடந்தார்கள். பொழுது புலர்வதற்கு முன்னர் புறப்பட்ட நடை. நடை அவர்களுக்குப் பழகியதொன்று. காட்டு வழிகளிலும்... வெம்மையான கட்டாந்தரைகளிலும்... இரவிலும் பகலிலும்... மழையிலும்... குளிரிலும்... சேற்று நிலங்களிலும் பாரச்சுமைகளுடன் நீண்ட பயணம் கொண்டு பாசறைகளில் வளர்ந்தவர்கள்.

நகரம் விழிப்படைவதற்கு முன் தங்கள் இருப்பிடத்தை அடைந்துவிடவேண்டும் என்ற துடிப்பு. இவர்களின் வரவுக்காக நண்பர்கள் காத்திருப்பார்கள். இவர்கள் கொண்டு செல்லும் தகவலைக் கொண்டுதான் அவர்களின் அடுத்த நடவடிக்கை அமையவேண்டும். அவர்களின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் ஏற்படும் பின்னடைவுகள் அவர்கள் முயற்சிகளைக் காததூரம் பின்னிழுத்துச் சென்றுவிடும் என்பதனைப் பெரிதும் நன்குணர்ந்தவர்கள்... இதனாற்றான் இந்தியன் ஆமியும், தமிழ்த் தேசிய இராணுவமும் தங்களைச் சல்லடை போட்டுச் சலித்துக்கொண்டிருக்கும் வேளையில் யாழ்ப்பாண நகருக்குள் போய் விட்டுத் திரும்பிக்கொண்டிருக்கிறார்கள். ஏதோ மரம் தறிக்க, தச்சு வேலைக்குப் போகிறவர்கள் போல கையிலே உரப்பை.

நகரம் மெல்ல மெல்ல விழித்துக்கொண்டிருந்தது. தேநீர்க்கடை மண்ணெய் அடுப்புகள் மெல்லிய இரைச்சலைப் பரப்பிக்கொண்டிருக்க, சீர்காழி கோவிந்தராஜன் பழனிமுருகனைப் பக்திப் பரவசமாக பாடிக்கொண்டிருக்க... அவர்கள் மறைந்து மறைந்து விரைவாக நடந்துகொண்டிருந்தனர். சிலர் அவர்களுடன் இணையாக நடக்க... பயணம் சுகமாயிற்று.

அவர்களை இந்திய இராணுவ 'ட்றக்' ஒன்று கடந்துபோனது. அவர்கள் நடையில் மாற்றமில்லை. சில மீற்றர் தூரம் சென்ற ட்றக் நின்றது. அப்போதும் அவர்கள் நடையில் மாற்றமில்லை. ட்றக் அவர்களை உற்றுப்பார்த்தது. 'சலோ!' என்று புறப்பட்டது.

பிரதான நாற்சந்திகளிலும், ஒழுங்கை முடக்குகளிலும், குச்சொழுங்கை வளைவுகளிலும் தமிழ் தேசிய இராணுவம் நின்று-அதே வழியால் செல்லும் இந்திய இராணுவத்தினருக்குச் 'சல்யூட்' அடித்துத் தாங்கள் யார் என்பதனையும் நாங்கள் 'அலேட்'டாக நிற்கிறோம் என்பதனையும், அதேவேளையில் உங்கள் பாதுகாப்பில்தான் இப்படி எங்களால் நிற்க முடிகிறது என்றும் காட்டிக் கொண்டார்கள்... இதனைப் பெருமிதத்துடன் ஏற்றுக்கொண்ட சீக்கிய கூர்க்காப் படையணி தங்களுக்குள் கேலியாக ஏதோ பேசிச்சிரித்துப் போவது யாழ்ப்பாணத் தமிழ் சமூகத்தின் முகத்தில் அவமானச் சேற்றை வீசியது போல் இருக்கிறது.

இதனைக் காணக்காண இவர்களுக்கு ஆத்திரம் அளவு கடந்தது. "மச்சான்! இவன்களைப் பாத்தியேடா... அவன்களுக்கு வால் பிடித்துக்கொண்டு?... அவங்கட மணிக்கட்டில என்னடா புதிசாக்கட்டியிருக்கிறாங்கள்... பெண்கள் தலையில கட்டிற சிவப்பு... மஞ்சள்... பச்சை நிற றிபன்களை கட்டியிருக்கிறாங்கள்...?" என்றான் காண்டீபன்.

'ஒருவேளை கூட்டத்தில உவங்கள் தொலைந்துபோனாக் கண்டு பிடிக்கவாக்கும்...' என்றான் நண்பன். இவனுக்கு எப்பவும் இடக்குப் பேச்சுத்தான். வேளை கெட்டவேளையெல்லாம் எல்லாரையும் சிரிக்கப் பண்ணுவான். இதனால் சீரியஸான காண்டீபனுக்கே இவனைப் பிடிக்கும். இதனால் பலசமயம் அவனை 'நீ ஒரு நல்ல மூதேசியடா!?' என்று அன்போடு கூப்பிட்டிருக்கிறான். ஆபத்தான வேளையிலும் சிரிப்பாகச் சிந்திப்பது என்பது சுத்தமான ஆத்மாக்களால் தான் முடியும்.

"உனக்கு எப்பவும் பகிடிதான்..., உன்ரபகிடியே எங்களைக் காட்டிக் கொடுக்கப்போகுது..." என்றான் காண்டீபன்.

"அது றிபன் இல்லை மச்சான்! அவங்கட இராணுவ கிறேட்டைக் காட்டிற நிறங்களாம். சிவப்பு ஒரு கிறேட், மஞ்சள் இன்னொரு கிறேட், பச்சையும் அப்படித்தான்.."

"மச்சான்...! எனக்கு வாற கோபத்துக்கு இவங்களுக்கு ஒரு பாடம் படிப்பிக்கவேணும் போல இருக்கு... கைவேற கடிக்குது..." என்றான் காண்டீபன்.

நண்பன் பதறியபடி அவன்கையைப் பற்றிக்கொண்டான். அவனுக்கு காண்டீபனைப் பற்றி நன்றாகத் தெரியும்... உயிருக்கு எப்பனும் பயமில்லை. எப்பவும் எதிரிகளில நாலைந்து பேரையாவது தொலைக்க வேணும்... திடீரென்று இந்திய இராணுவ முகாமுக்கு அருகில் விழக்கூடியதாக வெடிவைப்பான். சில சமயம் அவன் வெடிக்கு சில இராணுவம் பலியாவதுமுண்டு... அவன் அந்த இடத்தைவிட்டு மாயமாக மறைந்துவிடுவான்... ஒருசில மணி நேரங்களுக்கு அந்த ஏரியா அல்லோலகல்லோலப்படும். இராணுவம் ஏமாந்து திரும்ப அவர்களை அவனது "வாக்கிடாக்கி" திரும்ப அழைக்கும்.. இராணுவம் அவமானத்தால் பற்களைக்கடிக்கும். எல்லாம் மக்கள் மேல்கொண்ட நம்பிக்கை தான்... எங்கள் பக்கம்தான் மக்கள். எங்களை ஒருபோதும் மக்கள் காட்டிக்கொடுக்கமாட்டார்கள்... இந்திய கப்டன் ஒருமுறை வாக்கிடாக்கியில் காண்டீபனின் இடத்தை அறிந்து முற்றுகையிட்டான். அவன் சரியாக "ஸ்பொட்"பண்ணிவிட்டான் அந்த வீட்டுவாசல் வரை வந்துவிட்டான். ஆனால் அந்த வீட்டில் எல்லாரும் ஹாலில் இருந்து ரி.வி பார்ப்பது தெரிய அவன் உள்ளே வராமல் போய்விட... படம் பார்த்துக்கொண்டிருந்த காண்டீபன் இடி இடியெனச் சிரித்தது இவனுக்கு ஞாபகத்தில் வந்தது.

"மச்சான்! உனக்கு நல்லாத் தெரியும். உன்னைத் தேடித்தான் இவங்கள் அலையிறாங்கள் எண்டு... நீ இப்ப உன்னை இனம்காட்ட முற்படாத... எங்களுக்காக நண்பர்கள் காத்திருப்பார்கள்... முதலில வெளிக்கிட்ட வேலையை முடிப்பம்."

இன்னொரு ஜீப் இவர்களைக் கடந்துபோனது.

அவனது ஆத்திரம் அளவு கடந்து போயிற்று.

"இந்த அஞ்சாம் படைக் கூலிகளால்தான் இந்திய இராணுவமும் இங்க இந்த ஆட்டம் போடுது... சிங்களவரை எதிர்க்க வெளியாட்களை அழைத்து வந்த இவங்களும் இவங்கட அரசியலும், இலங்கை அரசியல் வரலாறு என்பது எப்பனும் தெரியாத மூடனுகள்...

நாலைஞ்சு இளைஞர்கள் எதிரே சைக்கிளில் இவர்களைத் தாண்டிப் போக, ஒருவனின் தலை மட்டும் சந்தேகத்துடன் அடிக்கடி திரும்பிப் பார்த்தது. பெடலை அவசரம் அவசரமாய் மிதிப்பதும் தெரிந்தது.

"மச்சான்!... அதில போறவனை எனக்கு நன்றாக அடையாளம் தெரியுது. அவன் ஒரு சமூக விரோதி கையில ஆயுதமில்லாததால ஓடுறான்.. ஆட்களைக் கட்டாயம் கூட்டிவருவான்... நாங்கள் இப்ப முன்னால போகக்கூடாது... பின்னால போவம்... அந்தப் பழைய கோயிலுக்குள்ள நுழைஞ்சிட்டா பிறகு எங்களை ஒருத்தரும் பிடிக்கமுடியாது. வா ஓடி வா..." என்றபடி கோயிலை நோக்கி ஓட, நண்பனும் பின் தொடர்ந்தான். உள்ளே அந்த இடிந்த மொட்டைக் கோபுரம் செடி கொடிகள் பற்றிப் படர தெருவைப்பார்த்துக்கொண்டிருந்தது.

"மச்சான் இது நல்ல இடம் வா" இருவரும் அதில் ஏறி மறைந்து கொள்ள, விழிகளிலே தெரு பளீரெனத் தெரிந்தது.

**செம்பியன் செல்வன்**

யாரோ'தப தப' வென வீதியில் ஓடி வருகிறார்கள். எல்லாக் கையிலும் ஆயுதங்கள்...

"இதால ரெண்டுபேர்... போனவங்களா... கையில 'போறா பை' உரச்சாக்கோடு...?"

வழியில் அகப்பட்டவர்களையெல்லாம் பதட்டத்துடன் விசாரிக்கிறார்கள். அவர்கள் என்ன சொன்னார்கள் என்று தெரியவில்லை.

ஆயுதம் தாங்கியவர்கள் அங்குமிங்கும் ஓடியலைகிறார்கள்.

ஜீப் ஒன்று முன்னும் பின்னுமாக... வீதி ஒழுங்கை ... குச்சொழுங்கை என அலை பாய்கிறது. இந்தப் பதட்டத்தில் தெருவே வெறிச்சிட்டு விடுகிறது. தார்வீதியில் பூட்ஸ் கால்களின் 'தட தட'சப்தம்...

இவர்களுக்கு நிலைமை புரிகிறது. இவர்கள் தயாராகிறார்கள். போறா பையிலிருந்து ஆயுதம் வெளியே வருகிறது. இவர்கள் தக்க வேளைக்காகக் காத்திருக்கிறார்கள்.

ஒரு மணித்தியாலத்திற்குமேல். வெறும் வீதியை அலசிய வீரர்கள் ஓய்ந்துபோக... மக்கள் நடமாட்டம் மீண்டும் ஆரம்பிக்கிறது.

"டேய் இங்க வாங்கடா... கோயிலுக்கு போய்ப்பார்த்தனீங்களாடா?"

"இல்லை"

"பின்ன என்னத்தைத் தேடினியள்" என்று ஊத்தைப்பேச்சுடன் ஒருவன் நுழைய, அவனைத் தொடர்ந்து ஒரு கூட்டமே பின் வந்தது.

"படீர்! என்று காண்டீபனின் துப்பாக்கி வெடித்தது. ஒருஆள் சரிவது தெரிய, கவர் எடுக்கவும் தெரியாமல்போராட கை ஏவாமலும் கூட்டம் சிதறிஓட, இவர்களும் கீழே குதித்து ஓடத் தொடங்கினர்.

யார்? ஆட்கள் எங்கே ஓடுகிறார்கள். என்று தெரியாத நிலை.

இவர்கள் ஓடத் தொடங்கினார்கள். இவர்களை ஒருவரும் கவனிக்கவில்லையா? அந்தச் சந்தியால் திரும்பிவிட்டால் தப்புவதற்குள் எத்தனையோ வழிகள்... இவர்கள் வேகமாகத் திரும்ப எத்தனிக்கையில் துப்பாக்கி ஒன்று எங்கோ வெடித்தது.

காண்டீபனின் ஆடுதசையில் குண்டு ஒன்று பாய்ந்தது. "மச்சான் காலில வெடிபட்டிட்டுது.. இந்தா துப்பாக்கி பத்திரமாகக் கொண்டோடு... என்னைப்பற்றிக் கவலைப் படாத..."

"மச்சான் உந்த விசர்க்கதையைவிடு... முடிந்த மட்டில போராடுவோம்... முடியாட்டிப் பிறகு பார்ப்பம்..."

துப்பாக்கி ஓசைகளால் அந்தப் பிராந்தியமே சற்று நேரம் கிடு கிடுத்தது.

காண்டீபனின் காலிலிருந்து இரத்தம் கொட்டிக்கொண்டிருந்தது. அவன் தனது கைலேஞ்சியால் அழுத்தமாகக் கட்டியபோதிலும் பகற்பொழுது ஆனதால் இரத்தப் பெருக்கு அதிகமாக இருக்கவும் சுட்டுக்கொண்டே நகர்கிறார்கள்.

சற்றுத் தூரத்தே அந்தக் கல்லூரியின் கட்டடங்களும் திறந்திருந்த வெளிக்கதவும் கண்ணில் பட முகத்தில் நம்பிக்கைப் பூக்கள் மலருகின்றன.

"மச்சான்... இனிப்பயமில்லை... என்ர பள்ளிக்கூடம் மச்சான்... என்ர பிரெண்ட்ஸ் இப்பவும் படித்துக் கொணடிருக்கிறாங்கள்" என்று கூறிய காண்டீபன் வலிதெரியாதவனாய் கல்லூரி வளவுக்குள் புகுந்து கேற்றில் இருந்த பூட்டை அழுத்துகிறான். அவர்களைப் பார்த்துவிட்டு சில மாணவர்கள் ஓடிவருகிறார்கள்.

அலுவலக வாசலில் நிழலாட அதிபர் நிமிர்ந்து பார்த்தார். வாசலில் பஞ்சாட்சரம் மாஸ்ரர் நின்றுகொண்டிருந்தார்.

"வாங்கமாஸ்ரர் என்ன விசயம்?"

உள்ளே புகுந்த மாஸ்டர் நின்ற நிலையிலேயே "என்ரபிள்ளையை எல்லே..." என்று தடுமாறத் தொடங்கினார்.

"முதலில இருந்து பேசுங்க"

கதிரையில் அமர்ந்த மாஸ்டரை அதிபர் உற்றுப்பார்த்தார். அவர் வாய் பேசாமல்... உதடுகள் துடிக்க... கண்களிலிருந்து நீர் வழிய... அதிபர் திடுக்கிட்டுப்போய் 'மாஸ்டர்' என்றார்.

"என்ன நடந்தது? ஏன் அழுகிறியள்?"

"என்ர பிள்ளையை... இந்த அறுவான்கள் வந்து பிடிச்சுக்கொண்டு போயிட்டாங்கள்... பிள்ளையை என்ன செய்யிறாங்களோ... மனிசிக்காரி புள்ளையைக் கொண்டுவா... எண்டு வீட்டில ஒரே புலம்பல்.

"ச்சா... ச்சா... எந்த மகனைப் பிடிச்சுக்கொண்டுபோனவங்கள்..."

"இங்க ஆண்டுபத்துப் படிக்கிற மூத்தவனைத்தான்..."அதிபர் திடுக்கிட்டார்.

இந்தக் கல்லூரி மாணவன் என்றால் அதிபர் என்ற முறையில் பல கேள்விகள் இந்திய இராணுவத்திடமிருந்து வரும். மாணவனின் பெற்றோர் என்ற முறையில் ஆசிரியர்களிடம் இருந்து ஆதரவு கோரி வற்புறுத்தல்கள் வரும். அத்துடன் இந்திய இராணுவத்துக்கோ இந்தக் கல்லூரி என்றால் வேப்பங்காயாகத்தான் பல ஆண்டுகளாக இருந்து வருகிறது.

"அவனையா பிடிச்சுக்கொண்டு போனவங்கள்... நல்ல அமைதியான பொடியனல்லே..."

பஞ்சாட்சரத்தாரின் உதடுகளில் அந்தத் துயரத்திலும் தத்துவம் வெடித்தது.

"இந்தக் காலத்தில ஆர் தான் அமைதியா இருக்கிறம். சின்னவையள், பெரியவையள் என்ற வேறுபாடில்லாமல் எல்லாரும் தானே குமுறிக்கொண்டிருக்கிறம்"

அதிபர் அவரைக் கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தார்.

"மாஸ்டர்... என்ன நடந்தது என்று சொல்லுங்கோவன்..."

நேற்று ஆரோ என்னமோ சொன்னாங்களெண்டு நடுராத்திரியில வீட்டை வந்து பிடிச்சாங்கள். பொடியனைப் பிடிச்சு என்னென்னமோவெல்லாம் கேட்டாங்கள்... ஒரு பிடியும் அவங்களுக்குக் கிடைக்கேல்ல... ஆனா அவன்ரை புத்தகத்துக்குள்ள இருந்த கடிதம்தான்..." பஞ்சாட்சர ஆசிரியர் முடிக்கவில்லை.

"அதில என்ன இருந்தது?"

"நான் ஒரு ஓஎல் பாஸ்பண்ணினாப்பிறகு இயக்கத்துக்குப் போய்விடுவன்" என்று ஒரு நண்பனுக்கு கடிதம் எழுதி வைச்சிருக்கிறான் அவன். கடிதம் எழுதிய நண்பனின் பெயரும் ஒரு இயக்கப்பொடியனின் பெயரும் ஒண்டாயிருக்க, அவங்கள் அவனை அடிச்சு உதைச்சுக்கொண்டு போயிருக்கிறாங்கள்

"அந்த இயக்கப் பொடியன்ர பெயர் என்ன?"

"காண்டீபன்"

"எட! அவனும் எங்கட கல்லூரி மாணவன் தான். எங்கட கல்லூரிப் பொடியளும் அவனில உசிர், இப்ப நான் என்ன செய்யவேணும்?"

"எங்கட கல்லூரி மாணவன்... ஒழுங்காகப் பாடசாலைக்கு வந்து போற பிள்ளை அவனைப் பிடிச்சிருக்கிறது தவறு என்றுசொல்லி..." அதிபர் யோசித்தார்.

"வந்து நீங்கள் ஒருக்கா ரவுண் கொமாண்டனோட கதைச்சுப்பார்த்தா"

ஆர் கல்கத்தோடயே... அவன் சரியான கள்ளன் டிக்சிற்றை விட மோசமான கள்ளன்... அவனிட்டை வாயைக் குடுத்திட்டுத் தப்பேலாது..."

"இல்ல மகனை விடாட்டியும்... அவனுக்கு ஏதும் அடிக்காமல், சித்திர வதை பண்ணாமல் இருந்தால்போதும் நீங்க சொன்னால்..."

"இப்ப மகனை எங்க வைச்சிருக்கிறாங்களாம்... மருதனா மடம்... பலாலி.... காங்கேசன்துறை... யாழ்ப்பாணம் எங்கையாம்?"

"அதுதான் தெரியாது சேர்... அதையும் அறிஞ்சு சொன்னா நல்லது" அவரது வார்த்தைகள் உடைந்து விம்மலுடன் வெளிவந்தன.

☞

"சரி" என்று கூறிக்கொண்டிருக்கும்போதே கல்லூரி வளவில் சரமாரியாக துப்பாக்கி வெடிச்சத்தங்கள் கேட்கத் தொடங்கின. மாணவர்களின் "ஐயோ" என்ற அலறலும் அழுகைச் சத்தங்களும் யார் யாரோ ஓடுவதும் சுடுவதுமாக...

கல்லூரி வளவு கலங்கியது. அமளிதுமளிப்பட்டது.

மாஸ்டர்மாரைச் சுட்டுப்போட்டாங்கள்... தெருவோர வகுப்பறையெங்கும் இரத்தமயம்... சுடுபட்டவர்களை ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோக ஏற்றியவர்களும் நல்ல அடி,உதை. திடீரென அதிபரின் அறை-அலுவலகத்துள் ஆயுதங்களுடன் சிகப்பு, பச்சை, மஞ்சள் பட்டை கட்டிவர்கள் நுழைந்தார்கள்.

"எல்லாரும் வெளியிலபோய் வரிசையாக நில்லுங்கடா... எங்கையடா அதிபர்... அந்தவே... மகனுக்கு பாடம் படிபிச்சா எல்லாம் சரியாவரும்"

அவன் அதிபரைத்தேட அவர் பாய்ந்துசென்று வெளியே ஏற்கனவே நடுங்கியவாறு உச்சிவெயிலில் வரிசையாக அமர்ந்திருந்த ஆசிரியர் கூட்டத்தில் கலந்துகொள்கிறார். உப அதிபர் காலால் உதையப்பட்டு வெளியே வந்துவிழுகிறார்.

''உங்கள் எல்லோரையும் சுடப்போறம். நீங்கள் உண்மையைச் சொல்லாட்டி எங்களுக்கும் வேற வழியில்லை. ஓடி வந்தவங்கள் எங்க? ஆர் வந்தது? எங்கை ஒளிச்சுவைச்சிருக்கிறியள்?..."

வகுப்பறையிலிருந்த அசிரியர்களும் அலுவலகத்தில் இருந்தவர்களும் பதில் தெரியாது விழித்தனர். அவர்களது ஆத்திரம் அளவுகடந்தது. கெட்டவார்த்தைகள் கல்லூரி வளாகத்தில் போதனா மொழியாக. எல்லாரும் உறைந்துபோக...

பச்சை றிபன் கட்டிய கறுவல் முன்னும் பின்னும் அலைபாய்ந்தான்.

"சொல்லுங்கடா... எங்க அவங்கள்..." உங்களுக்கு அவங்கள் மட்டும்தான் போராளிகளாகத் தெரியிறாங்க... எங்களை அப்படித் தெரியேல்ல... எங்களைச் சுட்டுட்டு வாறவங்களுக்கு அடைக்கலம் கொடுக்கிறியள்... எங்களுக்கு ஒரு அடைக் கலமும் இல்லை... இன்னும் சில விநாடியிலே சொல்லாட்டி காத்தி யோளி மக்களே... நீங்கள் எல்லாரும் சவம்தான்...

வானத்தில் ஒரு வெடி எழுந்தது. எல்லார் வயிறும் கலங்கியது. மனங்கள் கனத்துப்போய் இறுகின.

வகுப்பறையில் இருந்து மாணவர்கள் உச்சிவெயிலில் ஆசிரியர்கள் வறுபடுவதைப்பார்த்து பயத்தால் விழிக்க, ஏனைய வகுப்பறைகளிலிருந்து உயர்வகுப்பு மாணவர்களும் வரிசை வரிசையாகக் கொலைகளத்துக்கு அழைத்துவரப் படுவது போல கொண்டுவரப்படுகின்றனர். தொலைந்தோம் என்று அவர்கள் எண்ணியபோது.

பிரதேச 'காம்ப்' அதிகாரி ராவ் இராணுவ நடையில் வருகிறார். அவரின் காம்ப் கல்லூரியிலிருந்து நூறு அடி தூரத்தில் இருந்தும் அவர் வர நீண்டநேரம் எடுக்கிறது. எல்லாம்தான் அனுப்பியவர்கள் சொன்ன வேலையை முடித்தபின் நல்லவர் போல வரவேண்டும் என்பதாக வருகிறார்.

ஆசிரியர்கள் சண்முகலிங்கம், தவமணிதாசன், பிரபு ஆகியவர்கள் துப்பாக்கி ரவைகளுக்கு இலக்காகி சண்முகலிங்கம் அந்த இடத்திலேயே மரணித்துப்போக, மற்றையவர்கள் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்படுகிறார்கள்.

பெற்றோர், ஆசிரிய, மாணவர் குழாம் கொதித்துப்போய்.. விசாரணை வேண்டும். ஆறுதலுக்கல்ல, மீண்டும் ஒரு முறை இவ்வாறு நிகழாதிருக்க. சர்வதேசங்கள் எங்கள் நிலையைப் புரிந்துகொள்ள...

ஆசிரியர் சங்கக்கூட்டம் கனல் தெறிக்க நடந்துகொண்டிருந்தது. ஆசிரியர் கழகத் தலைவர் நேரில் கல்கத்தைச் சந்தித்து எதிர்ப்பதில் உறுதியாக நிற்கிறார்.

"இது அநீதி... அக்கிரமம்... பாடசாலை நேரத்தில் வகுப்பறையில் புகுந்து... மாணவர்கள் முன்னிலையில் ஆசிரியர்களைச் சுட்டுக் கொல்வது கிட்லரின் கொடுமையை விடக் கொடுமை... நாம் எல்லோரும் ரவுண் கொமாண்டன்ட் கல்கத்தை சந்தித்து எங்கள் எதிர்ப்பைக் காட்ட வேண்டும்"

பஞ்சாட்சரம் தனது மகன்பற்றிப் பேச ஆசிரிய கழகத்தலைவருடன் உதவிசெய்யவேண்டும். விருப்பமானவர்கள் கலந்துகொள்ளலாம். இது கூட்ட முடிவாயிற்று.

மாலை ஐந்துமணி

"யெஸ்... கம். கம்"

நகரக் கமாண்டன்ரன் கல்கத் ஆரவாரமாக வரவேற்கிறார். இவர்களுக்கு அந்த ஆரவாரம் அபத்தமாகப்படுகிறது. இன்று, எனது பிறந்தநாள்..." தேவையில்லாத விபரம் தரப்படுகிறது. இவர்கள் இது என்ன 'ஜரணி' என்று குமைகிறார்கள்.

"யெஸ் நீங்கள் சொல்லுங்கள்..." ஒன்றும் தெரியாத மாதிரி அந்த இராணுவ அதிகாரி கேட்கிறான்"

"பாடசாலைநேரத்தில் கல்லூரி வளாகத்தில் புகுந்து ஆசிரியர்களைச் சுட்டுவீழ்த்தியிருக்கிறார்கள். அதில் இருவர் நிலைமை கடுமையாக உள்ளது. ஒருவர் மரணித்துவிட்டார்..."

"அப்படியா?!..." கேள்வியில் போலியான வியப்பு.

"கல்லூரிக்கு போதிய பாதுகாப்பு வழங்கவேண்டும்... மாணவர்களுக்கு... ஆசிரியர்களுக்கு..."

''உங்களுக்கு கல்லூரி மாணவர்களும், ஆசிரியர்களும் புலி என்று கூறுகிறார்களே?"

பஞ்சாட்சரத்தாருக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வருகிறது.

''அப்பிடியிருந்தால் வந்தவையள் உயிரோடு திரும்பியிருக்க மாட்டார்களே... எங்களிலும் நாங்கள் ஆசிரியரை இழந்திருக்க மாட்டோம்..."

"ஓ!அங்கிரியெங்மான்... இந்த உணர்ச்சி ஆவேசம் தான் மக்களைத் தூண்டிவிடுகிறது. நாங்கள் வந்தது சமாதானத்துக்கு... நீங்கள் மக்களின்ரை உணர்ச்சிகளைத் தூண்டி விடுகிறீர்கள்..." மெல்லியகோபம்.

"யார் சுட்டது என்று சொன்னீர்கள்?"

''கையில் பச்சை, சிவப்பு, மஞ்சள் நிறம் கட்டிய ஆயுதம் தாங்கிய இளைஞர்கள்.."

"யார் அவர்கள்?"

"தெரியாது... ஆனால் ஆயுதம் தாங்கியவர்கள்..."

"ஆயுதம் தாங்கிய புலிகளாக இருக்கலாம் அல்லவா?"

''அவர்கள் எங்களைத் தாக்கவேண்டிய அவசியமில்லை. அதேவேளை அவர்கள் மக்களைக் காப்பாற்ற ஆயுதம் தாங்கியவர்கள் அவர்கள் இத்தகைய அநீதிகளை விளைத்ததாகக் கேள்விப்படவும் இல்லை."

பஞ்சாட்சரத்தார் கூறுகிறார். கல்கத் அவரையே உன்னிப்பாக நோக்குகிறார்.

"வந்தது புலிகளல்ல. ஆனால் ஆயுதம் தாங்கியவர்கள். அப்படியானால் ஐபிகேஎவ் ஆ வந்தது?"

''அவர்கள் அந்த நேரம் வரவில்லை என்பதுதான் பிரச்சினை"

"ராவ் அங்கு நின்றதாக நான் அறிகிறேன்."

"எல்லாம் முடிந்ததன் பின்தான் வந்தவர்"

"அப்ப யார் வந்ததாக நினைக்கிறீர்கள்?"

"தேசிய இராணுவமாக இருக்கலாம்..." ஆசிரியர் கழகத்தலைவர் கூறுகிறார்.

"முதலில் தெரியாது என்கிறீர்கள் இப்ப ரீ.என்.ஏ என்கிறீர்கள். இது எப்படி...?" முகம் சுளித்தது.

"இது ஊகம்தான் ஐபிகேஎவ் வந்ததன் பின்பும் அந்த அநியாயக்காரர் இருந்தது தெரியும்..."- தலைவர் குறுக்கிடுகிறார்.

"ஓ!... அனதர் அங்கிரிமான்... அவர்கள் ஐபிகேஎவ்வுடன் துணைக்கு வந்தவர்கள் என்று தான் பிரதேசப்பொறுப்பாளர் ராவ் கூறுகிறார்"

"சரி அப்படியே ஒரு வாதத்திற்கு எடுத்துக்கொண்டாலும் அவர்கள் நடந்து கொண்ட முறை வித்தியாசமானது. கல்லூரி வகுப்பறை வராந்தா இரத்தவெள்ளத்தில் நனைய யார் காரணம்"

"அந்த இரத்தம் புலிகளின்ர எண்டுதான் ராவ் கூறுகிறார்... சுடுபட்டு வந்த புலிகள் சிந்திய இரத்தமாக ஏன் இருக்கக்கூடாது..."

"அப்படியானால் அந்த இரத்தம் ஆசிரியர்கள் சிந்தியதல்ல என்கிறீர்களா?

''கூல் டவுன்...காம்..காம்... இப்போது நீங்கள் சமர்ப்பிக்கும் கோரிக்கை என்ன? உங்களுக்குத் தெரியுமா உங்கள் கல்லூரி வளவில் பொறுக்கிய 'எம்ரிகப்ஸ்' எதுவும் ரீ.என்.ஏ இனது அல்ல. அவர்களிடம் ஏகே.47ஏ கிடையாது. நாம் வழங்கவில்லை. ஆதலால் ஆசிரியர்களைச் சுட்ட துப்பாக்கிகள் புலிகளினதாக ஏன் இருக்கக்கூடாது..."

விவாதம் வேறுவழிகளில் சென்றுகொண்டிருந்தது. வழங்கப்பட்ட தேநீரை பஞ்சாட்சரத்தாரும் ஆசிரியர் கழகத் தலைவரும் நாகரிகமாக மறுத்துவிடுவதை கல்கத்தின் கண்கள் அவதானிக்கின்றன. மெல்லியசீற்றம் அவனுள் எழுகின்றது.

"இந்தப் புலிகள் நகரத்திற்கிடையில் உங்களைக் கேடயமாக வைத்துக்கொண்டு போராடுகிறார்கள். அதற்கு நீங்களும் உடந்தை, அவங்களுக்கு பாதுகாப்பு அளிக்கிறீர்கள்... இழப்புக்கள் ஏற்பட்டவுடன் அவற்றை எங்கட்கு எதிராகத் திருப்ப முனைகிறீர்கள்..."

எல்லோரும் உள்ளம் கொதிக்கக் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். கல்கத் சீற்றத்துடன் கூறுகின்றான்.

'முடியுமானால் உங்கட புலிகளை வெளியால வந்து போரிடச் சொல்லுங்கள்... பாதுகாப்புக்கு அவங்களிட்டயே போங்க... இங்க ஏன் வந்தனீங்கள்... அவங்கள நேருக்நேர் வரச்சொல்லுங்கள்... நகரவீடுகளில்... மக்களிடையே பதுங்கிக்கொண்டு வீரமா பேசுகிறீர்கள்... இதைப் போய் புலிகளிடம் கூறுங்கள்..."

அவர் சீற்றம் எல்லாரையுமே மௌனிக்கவைக்கிறது... எல்லாமே நன்கு புரிகிறது... காலை புலர்வதுபோல மயக்கங்கள்... தயக்கங்கள் எல்லாம் கலைகின்றன.... சர்வதேச அரசியல் புரிபடத் தொடங்குகிறது. அதிபர் மெதுவாகக் கூறுகிறார்.

"இனியாவது இப்படி நடக்காமல் பாதுகாத்துத் தரும்படி கூறத்தான் வந்தம்... நல்லது... விடைபெறுகிறோம்"

"என்ன மாஸ்ரர் உங்கட மகனைப் பற்றிப்பேசுவமா?... அதுக்காக வந்திட்டு... என்று மெல்லக் கேட்கிறார்..." கழகத் தலைவர்.

. "வேண்டாம்... போகலாம்... வாங்க... பொடியன் இனி போராளியாகத்தான் வருவான்... இவங்களை அகற்ற என்ர பிள்ளை மட்டுமல்ல... ஏராளமான பேர் சேருவாங்கள்... இவங்கட எண்ணம் எல்லாம் வெட்டவெளிச்சமாய் விட்டதே... புலியளை வெளியவர சொல்லுறாங்கள்... கட்டாயம் அது வெளியவரும் அதில என்மகனும் கட்டாயமாக இருப்பான்..." அவரின் மனம் உறுதி கொள்கிறது.

## "என் வாழ்வுத்தடத்தில்"

ஓலமிட்டுக் கொண்டது- என்
மனக்குதிரை மௌனத்தீயின்
அனல்... என் உடலெங்கும் படர்ந்தது.

உண்மையில் வாழ்வுத்தடத்தில்
பொய் முகங்கள்... விகாரத்தோற்றம்
வாழ்வுமேடை என் வாழ்வுமேடை

தழும்பிக் கொண்டது என்னுள்
பயத்தின் ரேகை விரிந்தது
மனிதப்புன்னகையில் அதர்மத்தின் விஷம்
நான் பார்க்கும் மனிதருள் தெரிந்தது.

வாழ்வு ஒரு கதை எனலாம் - எம்
சமுதாயச் சாக்கடையில்... கை குலுக்கல்கள்
போலி வேஷத்தின்... வியாபிப்புக்கள்

ஏழ்மையின் இதயங்களை
வதைக்கும்... நரகத்தின் எச்சங்கள்
இலக்கின்... குறிகள் எம் வாழ்வின்
வலிகள்... தொடர்கதையானது.

வீதியோரமாய் என் விழிகள் பார்த்தன
அதிர்ந்தது... இதயக்கூடு ஒரு முறை
என் விழிகள் சிவந்து கொண்டன.

சுவர் ஒட்டியை கண்டு மனம்
கொதித்தது... ஏழை ஜீவன்கள்
கண்களில் இருந்து குருதி முகமெங்கும்
ஆதிக்க முகங்கள் சிரித்து நிற்கும்
சுவர் ஒட்டியே அது....

சு. அமரேசன்

## சுமைகள்

மழைபெய்யாத போது
கையிலிருக்கிற
குடை

ஆதாயமேதுமில்லை
என்றான பின்னரும்
ஒட்டியிருக்கிற
உறவு

தேவைப்படாத வேளையில்
தேடிவந்து
காத்திருக்கிற
நட்பு

வெறுப்பேயுமிழும்
புறச் சூழலில்
வலுவிழந்து
செயல் மறுக்கும்
உடலும்
பிரிய மறுக்கிற
உயிரும்

நியாயம் இதுவென
நெஞ்சறிந்த பின்னரும்
சிறுமையில்
அழுந்தச் சொல்லும்
சுயநல நினைப்பு...

ந.சத்தியபாலன்

## அவள்...!

நேற்று வரை
அகலத் துறக்க
மறுத்த இதயம்...
இப்போது மட்டும் - ஏன்
லப்... டப் சத்தத்துடன்
திறக்கிறது...?

ஓ... எனையறியாமலே
பார்வை வாசலுக்குள்
அவள் பாதம்
பதித்துவிட்டாள்.

புகழன்

# வீடு

நாம் எவ்வளவுதான் திறமை சாலிகளாய் இருந்தபோதும் எம்முடைய வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்கள், தோல்விகள் என்பவற்றை தாங்குகின்ற மனப்பக்குவத்தை இழந்து தவிக்கின்றோம். இவ்விடயம் குறித்து நாம் ஒருதீர்க்கமான முடிவை எடுக்கும் மனப் பக்குவத்தை எம்முள்ளத்தில் வளர்க்க முயற்சிக்க வேண்டும்.

நாம் வாழும் வாழ்க்கை என்பது வாழ்வதற்கே தவிர அதில் ஏற்படும் இழப்புக்களைக் கண்டு தைரிய மற்று நிர்க்கதியற்று கிடப்பதற்கல்ல என்பதைஒவ்வொரு ஆணும் பெண்ணும் சிந்திக்கவேண்டும். நாம் எம் வாழ்வில் ஏற்படும் துன்பங்களைத் தாங்கி உளத்துணிவோடு வாழ்வோமெனின் எம்மை வாட்டிய துன்பங்களே எம் உயிர்வாழ்விற்கான உறுதியான தூண்களாகி விடுகின்றன. இக்கூற்றை எவரும் சிந்திப்பதில்லை. அடுத்த வர் துன்பம் கண்டு ஆறுதல் கூறும் நாம் எம் வாழ்வில் அவற்றைக் கடைப்பிடிக்க மறுக்கின்றோம். ஏன் இப்படி நாம் நடக்க வேண்டும். ஊருக்கு சொல்லும் உபதேசத்தை எமக்கும் உபயோகிக்கலாம் தானே.

'மலையே வந்தாலும் தலையே சும' எண்ட மனப்பக்குவம் குறிப்பாக மங்கையரான எமக்கு இருக்கவேண்டும். நாம் மண் குடிசையில் வாழ்ந்தபோதும் எம் மனமது மகிமையோடு இருக்குமாயின் நாம் வாழும் குடில் கூட கோபுரமாகின்றது.

இப்பூமியில் மனிதனாகப் பிறந்த யாருக்குத்தான் துன்ப துயரங்கள் இல்லை. எம் வாழ்வில் துன்பங்களைப் பற்றியே எம் எண்ணங்கள் இருக்குமாயின் எம் வாழ்வு நரகமாகிவிடும். வாழ்வை நரகமாக்குவதும் சொர்க்கமாக்குவதும் எம் கைகளில்தான் உள்ளது.

எம் மனமானது சோகத்தில் மூழ்கி இருக்கும்போது அதனை வேறு வழியில் திசை திருப்ப வேண்டும். அப்படிச் செய்தால்தான் நாம் நிம்மதியாய் வாழமுடியும்.

சிலர் இருக்கின்றனர் தினமும் தம் பிரச்சினை பற்றியே கதைப்பார்கள் அதனை எப்படித் தீர்ப்பது என்பதில் முயற்சியெடுப்பதில்லை. என்னதான் பிரச்சினைகள் எம் வாழ்வை வாட்டியபோதும் அதனை எதிர்த்துப் போராடி வாழ வேண்டும். நாம் வாழும் வாழ்க்கை என்பது இன்பம் துன்பம் நிறைந்தது என்பதை அறிந்தும் அதனை தம் வாழ்க்கையில் ஏற்று நடக்க சிலர் தவறி விடுகின்றனர்.

நாம் சுகமான வாழ்வை வேண்டி அலைகின்றோமே தவிர அதனை எப்படி அமைப்பது என்பதை மறந்து விடுகின்றோம். ஒருவர் தனக்கு என்ன தேவையோ அதனை அவர் தான் முயற்சி செய்து பெற வேண்டும். எமக்கு ஒன்றுமில்லை ஒன்றுமில்லையென்று கலக்கத்தை விட்டு முயற்சித்து அடைய வேண்டும்.

அல்லலுற்ற எம் மனதை ஆற்றல் படுத்த பலர் வரலாம். ஆனால் மனம் என்பது எம்மிடத்தில் அல்லவா இருக்கிறது. பிறருடைய ஆற்றலை நம்மனதுதான் ஏற்க வேண்டும். அடுத்தவருடைய மனதை எமக்கு மாற்றித்தர முடியாது. இக்கருத்துக்களை சிலர் காதில் கேட்பதோடும் வாயால் கதைப்பதோடும் தான் இருக்கின்றனர். வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவதில்லை.

எம் மன நோட்டங்களை இச்சமூகத்தோடும் கொஞ்சம் விட்டு உலாவிப் பார்க்க வேண்டும். அப்போதுதான் எம்வாழ்வில் புதிய திருப்புமுனையோடு நல்லதொரு அத்தியாயம் பிறக்கும்.



## மனதைத் தூய்மையாக்குங்கள்

எம் மனம் இருக்கின்றதே அது ஒரு குப்பைத் தொட்டிபோன்றது. அத்தொட்டியை அப்படியே தூய்மையாக்காமல் விட்டோமெனின் அது முழுமையாகப் பழுதடைந்து விடும். ஒவ்வொரு நாளும் எம் சுற்றுப்புறச் சூழலைச் சுத்தம் செய்யும் நாம் எம் மனதை தூய்மைப்படுத்த மறக்கின்றோம். உடலில் எவ்வளவு அக்கறை கொண்டு தூய்மைப்படுத்தி அலங்கரிக்கின்றோம் ஆனால் எம் உள் மனதை கறை பிடிக்க விடுகின்றோம்.

உள்ளக்கறைகள் களையப்பட்டால்தான் எம் புறத் தோற்றம் அழகாய் இருக்கும். இந்த விடயத்தில் இன்றைய வீடுகளில் வாழும் ஆண் பெண்கள் இருவரும் கவனமற்று நடக்கின்றனர். எம்முடைய செய்கைகளின் விளைவே எம்வாழ்வில் கிடைக்கும் நிம்மதி. ஒரு வழியில் அலைச்சல் இருந்தால் அடுத்து என்ன வழியென்று நாம் அறிந்து அப்பாதைவழி சென்று நாம் போகு மடத்தை அடைய வேண்டும். பாதை பிழையென்றால் நாம் பயணம் செய்யாமல் இருக்கலாமா? அது போன்றே எம் வாழ்க்கைப் பயணம். வண்டியில் ஏறிவிட்டோம் பாதையைக் கண்டுபிடிப்பது நம் பொறுப்பு. வாகனத்தின் பொறுப்பல்ல. இதனை நாம் நன்றாக உணரவேண்டும்.

**சு.சிவாஜினி**

'நன்றி' சொல்லும் பழக்கம் நம்மில் பலருக்கு தெரிந்திருப்பதேயில்லை. தெரிந்திருந்தாலும் அதை உரிய சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதில்லை. எதையாவது பெற்றுக்கொண்டு பதிலுக்கு நன்றி சொன்னால் அவர்கள் நம்மை என்ன நினைப்பார்கள் என்று தப்பாக நினைக்கிறார்கள். ஆனால் இப்படியும் சிலர் இருக்கிறார்கள் இதற்கெல்லாம் நன்றி சொல்லி என்னை தள்ளி வைத்துவிடாதே என்று சொல்வார்கள் அது அவர்களின் பெருந்தன்மையாக இருக்கலாம். ஒருவர் மூலம் ஒரு உதவியை பெற்றுவிட்டு நன்றி சொல்லாமல் விட்டுவிட்டால் அவர்களைப் போல் கீழான உள்ளங்கொண்டவர்கள் வேறு யாராகவும் இருக்க முடியாது.பெற்றோராக இருந்தாலும் சரி பிள்ளைகளாக இருந்தாலும் சரி சின்னச் சின்ன பரிசுகளை பரிமாறிக் கொள்ளும் போதும் உதவிகள் பெற்றுக்கொள்ளும்போதும் ஒருவரை ஒருவர் பாராட்டிக்கொள்ளும்போதும் நன்றி சொல்லப் பழக வேண்டும்.

வீட்டிலிருந்து நன்றி சொல்லும் பழக்கம் வந்தால்தான் ஒரு அலுவலகங்களில், பாடசாலைகளில் நாம் பழகும் பல்வேறு மக்கள் சமுதாயத்தோடு ஒன்றித்து வாழ முடியும். அட இவன் இவ்வளவு பெரிய உதவியை என்னிடம் பெற்றுவிட்டு ஒரு நன்றி கூடச் சொல்லாமல் போகின்றானே என்று ஒருவர் வருந்தக்கூடாது. நன்றியை உடனே சொல்ல வேண்டும். ஒரு சம்பவம் நடந்து ஒருவாரம் கடந்து நன்றி சொன்னால் அது வீண். நன்றி சொல்வதன் மூலம் மற்றவர்களை மகிழ்விக்கவும் முடியும். உதாரணமாக உங்கள் அலுவலக மேலதிகாரி ஒரு சிடு சிடு பேர்வழி. ஆனால் அவசரமாக உங்களுக்கு கொஞ்சப்பணம் தேவைப்படுகிறது. தயங்காமல் கடிதம் மூலம் கேட்கின்றீர்கள் அவரும் சிறிது யோசித்து பின் அனுமதிக்கின்றார். தலை தப்பியது தப்பிரான் புண்ணியம் என்று ஓடி வந்து விடாதீர்கள். உங்கள் அவசர நிலையை கருத்தில் கொண்டு உங்களுக்கு கடன் உதவியை செய்ய அனுமதி தந்த அந்த மேலதிகாரிக்கு ஏன் நீங்கள் நன்றி சொல்லக்கூடாது. அவர் நிச்சயமாக சந்தோசப்படுவார். அதற்காகக் கடன்பெறமட்டும்தான் நன்றி சொல்லவேண்டும் என்று இல்லை. உங்கள் வேலைகளில் சில தவறுகள் இருப்பதை அவர் சுட்டிக்காட்டலாம். அதனால் இவர் என்னில் பிழை கண்டு பிடிக்கின்றாரே என்று ஆதங் கப்படாதீர்கள். மாறாக இதை நீங்கள் கண்டு பிடித்ததால் ஒரு பெரிய மோசடி ஏற்பட இருந்ததை தடுத்து விட்டீர்கள். ஐயா, இதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கின்றேன் என்று சொல்லுங்கள். அதுவே போதும். இன்றுவரை எப்படியோ இருந்து விட்டீர்கள் இனியாவது சொல்லப் பழகுங்கள்.



## நன்றி சொல்வோம்..!

**க.உமா**

வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

வீடு,
வெள்ளிநாதம், ஈழநாதம்,
யாழ்சாலை, கிளிநொச்சி.

## வெங்காயப் பிட்டு




தேவையான பொருட்கள்:-

| | |
|---|---|
| அரிசிமா | - 1டம்ளர் |
| உழுத்தம்மா(வறுத்தது) | -1/2டம்ளர் |
| சிறிய வெங்காயம் | -100 கிராம் |
| தேங்காய்ப்பால் | -1 1/2 டம்ளர் (முற்பால்) |
| சீனி | -2 1/2 மேசைக் கரண்டி |
| உப்பு | -அளவாக |

செய்முறை:-

வெங்காயத்தை சுத்தம் செய்து வட்டமாக வெட்டவும்.
அரிசிமாவுடன் 1/4 டம்ளர் உழுத்தம்மாவைக் கலந்து உப்பும் சேர்த்து கொதிநீர் அளவாகச் சேர்த்துப் பிட்டாகக் குழைத்து அவித்துக் கொள்ளவும்.
தேங்காய்ப்பாலில் சிறிதளவு உப்பும் சேர்த்து, வெட்டிய வெங்காயத்தை இட்டுக் கொதிக்க வைக்கவும்.
வெங்காயம் வெந்ததும் சீனியைச் சேர்த்துக் கொள்ளவும்.
சீனி கரைந்து பால் தடித்ததும், அவிந்த பிட்டை உதிர்த்தி பாலுக்குள் இட்டுக் கிளறவும்.
மிகுதி 1/2 டம்ளர் உழுத்தம்மாவைப், பிட்டைக் கிளறும்போது தூவி இட்டுச் சேர்த்துக் கொள்ளவும்.
கலவை ஒன்று சேர்ந்ததும் இறக்கி சிறிது நேரம் இறுக்கமாக மூடி வைக்கவும்.
பின் ருசித்துப்பாருங்கள்.

## பயணக் குறிப்புக்கள்

★பணத்தை ஒரே பை அல்லது பர்ஸில் மொத்தமாக வைக்காமல் 34 இடங்களில் பிரித்து வைப்பது நலம்.

★பயணத்தின் போது தேவையின்றி விலை உயர்ந்த நகைகளை அணிய வேண்டாம்.

★உங்கள் விசிட்டிங் காட் போன்றவற்றை வைத்துக்கொள்வது சமயத்தில் உதவும்.

★விருந்தினராக யார் வீட்டில் சென்று தங்கினாலும் அவர்களுக்கு சில பரிசுகளை வாங்கிச்செல்லவும்.

★வீட்டுப் பெண்மணியுடன் வீட்டு வேலைகளைப் பகிர்ந்துகொள்ளவும்.

★காய்ச்சிய தண்ணீர் அல்லது நல்ல கடைகளில் கிடைக்கும் மினரல் வாட்டர் அல்லது இளநீரைப் பருகவும்.





குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

குமரகுரு பரிசுத்திட்டம்— 50

பெயர்:.......................................................
முகவரி:.......................................................
.......................................................

குறிப்பு:
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.




# பறக்கும் பாம்பு

பறக்கும் பாம்பு மரப்பாம்பு பிரிவைச் சேர்ந்ததுதான். இதைப் பாரடைஸ் பாம்பு என்று சொல்வார்கள். உண்மையில் இது பறக்காது. காற்றிலே மிதந்து செல்லும். இது 1.2 மீற்றர் நீளம் வரை வளரக்கூடியது. இதன் உடல் நிறம் கண்ணைக் கவரக்கூடியது. இதன் தாயகம் மலேஷியா. தவிர நம் நாட்டிலும் இந்த இனம் உள்ளது.

இதன் தலைப்பகுதியில் மின்னும் வண்ணப் பொட்டுகளும் கரிய நிற செதில்களும் அதன் நடுவே பச்சை நிறப் புள்ளிகளும் உடல் எங்கும் பச்சை நிறக் கோடுகளும் காணப்படும். கருமையான உடலில் மஞ்சள் அல்லது வெண்ணிறப் புள்ளிகளும் சிவப்புக் கோடுகளும் உடைய ஒருவகையும் உள்ளது.

இது ஒரு மரத்திலிருந்து இன்னொரு மரத்திற்கு எவ்வளவு தூரமிருந்தாலும் தாவி விடும். அவ்வாறு தாவும்போது உடலை மிகத் தட்டையாக்கிக்கொள்கிறது. அப்போது இதன் உடலின் உட்புறம் குழிவுடையது போலாகிறது. அதாவது நாம் காகிதத்தில் ரொக்கெட் செய்து எறிவோமே அதேபோல்தான். இதனால் இதன் உடல் பரப்பு அதிகமாகி காற்றில் மிதந்து செல்வதற்கு வசதியாகிவிடுகிறது.

தாவிப் பாய்ந்து செல்வதில் இதற்குத்



தனித்திறமை உள்ளது. அதிக தூரத்திலுள்ள ஒரு கிளைக்குத் தாவும் முன் தன் உடலை ஸ்பிரிங் போல் சுருட்டிக் கொள்ளும். பின்னர் அந்த வில் சுருளை அவிழ்த்துக்கொள்ள வில்லிலிருந்து அம்பு பாய்வது போல எதிர்க்கிளைக்கு தாவிவிடும்.

முப்பது மீற்றர் உயரத்திலிருந்து தரையில் குதிக்கும்போது தனது உடலின் இரு புறங்களையும் கீழ் நோக்கி வளைத்துக் கொள்வதால் வயிற்றுப் பாகம் குழி விழுந்தால் போலாகி விடுகிறது- அதாவது பரசூட் நீளமாக இருந்தால் எப்படி இருக்குமோ, அப்படியாகி விடுகிறது. இதனால் பரசூட் தரையிறங்குவது போல் இதுவும் இறங்குகிறது. தரையைத் தொட்டவுடன் இதன் உடல் மீண்டும் பழைய நிலையை அடைந்து விடுவதால் குதித்த உடனேயே ஓடி மறைந்து விடுகிறது.

இதன் உணவு பல்லிகள், சுண்டெலிகள் முதலியன. இதற்கு நச்சுப் பற்களுண்டு. ஆனால் இந்த நச்சு தீங்கிழைப்பதில்லை. இது ஒரு தடவையில் ஆறு முதல் பத்து முட்டைகள் வரை இடும்.

## தவளை

தவளை ஒன்று வந்தது
தத்தி தத்திச் சென்றது
தண்ணீர் தொட்டி கண்டது
தாவி அதிலே குதித்து!
நீரை கண்ட மகிழ்ச்சியில்
நீந்தி நீந்தி மகிழ்ந்தது
சின்னத் தம்பி வந்தானே
சிரமப் பட்டு பிடித்தானே!
தூரப் போ என்றானே
தூக்கி வெளியே போட்டானே!
கவலை கொண்ட தவளையும்
கணக் பொழுதில் மறைந்ததே!

## உலக நாடுகளின் தேசியப்பறவைகள்

| | |
|---|---|
| இலங்கை | ~ காட்டுக்கோழி |
| டென்மார்க் | ~வானம்பாடி |
| பர்மா | ~பெண்மயில் |
| கனடா | ~வாத்து |
| கொலம்பியா | ~பருந்து |
| அமெரிக்கா | ~கழுகு |
| ஜேர்மனி | ~வெள்ளைக்கொக்கு |

நாகேஸ்வரி,
இரணைமடு,
கிளிநொச்சி.

## சொற்சிலம்பம் - 89

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| த | ப் | வ | ம் | ன் | னை | ம் |
| டு | கு | நீ | பா | ந் | மி | பு |
| லி | லா | தி | கோ | னி | ணி | ய |
| ம் | அ | பி | ரி | டோ | சீ | ர |
| செ | ட் | தா | ஷ் | ர் | ரி | னை |
| ரா | ப | யா | சா | ஸ் | ரு | செ |
| டி | ல் | மோ | ன் | கி | த் | அ |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் - 87 இன் விடைகள்

01. பாரதியார்.

02. திருகோணமலை.

## சொற்சிலம்பம் - 87 இன் பரிசுக்குரியவர்

சி.சித்ரா,
5 ஆம் வட்டாரம்,
தங்கபுரம்
குமுழமுனை.

## சொற்சிலம்பம் - 87 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. செ.அகல்யா, கோணாவளை, வசாவிளான்.
02. ஆ.அபிராஜ், உதயநகர் மேற்கு, கிளிநொச்சி.
03. கி.தனுஸ்காந், தவசிக்குளம், வவுனியா.
04. க.அகல்யா, பெரியமதவடி, அளவெட்டி.
05. ப.நாகேஸ்வரி, திருவையாறு, கிளிநொச்சி.
06. ஸ்ரீ.சேர்தா, டன்சியா, 7 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
07. A.நிரோசி, ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
08. மனோ-கிஷாலினி, ஒட்டுசுட்டான் வீதி, புதுக்குடியிருப்பு.

01. காட்டு விலங்கினங்களில் ஒன்று?
01) ......................................

02. அண்மையில் காலமான எழுத்தாளரின் பெயர்?
01) ......................................

சொற்சிலம்பம்-89
ஈழநாதம்.
யாழ்சாலை.
கிளிநொச்சி.

பெயர் :- ......................................
முகவரி :- ......................................
......................................
......................................

# ஓட்டப்பந்தயம்...


பகுதி-07




# இயற்கை மற்றும் சமூக; ஒன்றிணைவுக்கான சிந்திப்புகள்



மனிதனின் நிலைத்திருப்புக்கான சூழலை உறுதிசெய்வது தொடர்பில் கட்டுப்பாடற்ற மனித நடவடிக்கைகள் காரணமாக ஏற்படும் தவறுகள் சூழலுக்கு ஏற்படுத்திய பாதிப்புகளே சூழலியல் தாக்கங்களாகக் கருதப்படுகின்றன.



சூழலைப்பற்றி நாம் பேசும் போதே சுனாமி பற்றிய எண்ணங்கள் நினைவிற்கு வருவது தவிர்க்கமுடியாததுதான். சில மணித்துளிகளில் நிகழ்ந்த அதிக உயிரிழப்பு பொருளிழப்பு ஏற்பட்ட இவ்வியற்கைச்சீற்றம் மனித



உயிரினத்தையே அதிகம் தாக்கிக் கொண்டிருக்கின்றது. உயிரின சூழலிலுள்ள பல்வேறு உயிரினங்களிற்கு ஏற்பட்ட தாக்கம் மிக மிக சொற்பமானவையே. சூழல் மாறுதல்களை கிரகிக்கும் உணர்வும் முன்னேற்பாட்டு முடிவெடுப்பும் கொண்ட இயற்கையோடு இணைந்த வாழ்க்கை வாழும் உயிரினங்கள் தப்பிப்பிழைப்பதென்பது மனிதனுக்கும் சூழலுக்குமான உறவை ஒருதரம் கேள்விக் குறியாக்கியுள்ளது.

சூழலைக்கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்துள்ளதாக இறுமாப்புக கொண்ட எமது அறிவியல் உலகம் மீளவும் தலைகளை சரித்து விட்டது. இக்கொடுமையான அனுபவத்தில் கடற்கரையோரம் உறுதியோடு நிலைத்துள்ள பல மரங்கள் மீளவும் நம்பிக்கையை தளிராக்கியுள்ளன.

சூழலின் மீது அக்கறை கொண்டுழைக்கும் மனிதப் பிரதிநிதிகளிற்காக வலுச்சேர்க்கும் உலக சுற்றுச்சூழல் விழிப்புணர்வு வாரம் யூன் 5இல் ஒரு எழுச்சியை எங்கள் மனங்களிற்கு தரக்கூடும். இம்முறை இந்நாளில் பசுமை நகரங்கள் என்ற கருப்பொருளை கொண்டிருக்கிறது. நாகரிக உலகில் செயற்கை மீது கட்டியெழுப்பப்பட்ட நகரங்கள் பல்வேறு சூழலியல் உலகங்களும் பிரச்சினைகளால் நரகங்களாக மாறியுள்ளன.

உலகின் அதிக செறிவான மக்கள் மட்டுப்படுத்தப்பட்ட இட அளவுக்குள் குடியிருக்கும்மையங்களாக நகரங்கள் இருந்து வருகின்றன. குடிநீரின் சுத்தமின்மை, தரமானவடிகாலின்மை, போதிய கழிவகற்றல்இன்மை, கட்டடக்காடுகளினால் நிரப்பப்பட்ட நகரில் காற்றுக்கூட பெறமுடியாது. தொடர் மாடிக்குடியிருப்புக்கள், விளையாடவோ நடக்கவோ கூட ஒரு இடம்கிடைக்காத மூடிய அறைகளின் வாழ்வில் பசுமையான ஒரு நகரச் சூழல் என்ற எதிர்பார்ப்பு சற்று அதிகமானதாக இருக்கக் கூடும்.

உயிர்வாழ்வினச்சூழலின் மீது தற்சார்பற்ற முறையில் அல்லது நிலைத்திருப்புக்கு அவ்வாறல்லாது இயற்கை சூழலின் மீது அகழ்வினை மேற்கொள்ளும்போது சூழல் பிரச்சினைகள் தோற்றம்பெறுவது அவ்வாறு நாம் கடந்தகாலங்களில் ஓசோன் படைமீதான தாக்கம், உலகம் வெப்பமயமாதல், அமிலமழை, அமில நீர்ப்பிரச்சினைகள், உயிர்ப் பல்லினத்தன்மை பாதிப்புறுதல், காடழிப்பும், அயனமண்டலக் காடழிப்பும், வெள்ளம், வரட்சி, சுனாமி, இரசாயனக்கழிவுகளைக் கடலில் கொட்டுதல், கடல் வாழ் உயிரினங்களின் அழிப்பு, கரையோரத்தின்னல், கடல் மட்டங்கள் உயர்தல்,காபனீரொட்சைட்டின் தொடர் அதிகரிப்பு, அணுஉலைக்கழிவுகளும் ஆராட்சிகளும் என ஒருதொகைப் பிரச்சினைகளைத்தோற்றுவிக்கக் காரணமாக இருந்துள்ளோம்.

இதுமட்டுமா சூழல் பிரச்சினை அண்மைய நாட்களில் நகரங்களின் துரித வளர்ச்சியும், அது காரணமாக எழுந்துள்ள சவால்களும், உலக கரிசனைக் குரியதாக்கப்படவேண்டிய அவசியம் காரணமாக இவ்வாண்டு சூழல் நாள் கொண்டாடப்படவுள்ளது.

உலகெங்குமுள்ள நாடுகளில் கடந்த 50 ஆண்டுகளுக்குள் நன்மண் எனப்படும் மேல் மண்ணில் 25சதவீதம் கழிவாக்கப்பட்டு கடலுக்குள் சென்றுவிட்டது என்றும், காட்டுவள பசுமைப்போர்வையில் மூன்றிலொரு பங்கு அழிக்கப்பட்டுவிட்டது என்றும் கடந்த முப்பது ஆண்டுகளில் மூன்றிலொருபங்கு நிலவளமும் இல்லாமல் போய்விட்டதனையும் ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன.

வருடம் ஒன்றிக்கு 6 சதவீதமான அளவில் நன் னீரின் இயற்கைச்சூழல் அமைப்பும் 4சதவீத அளவில் கடல்வளச் சூழலியல் அமைப்பும் சிதைவடைந்து வருகின்றன. ஆனால் எமது பகுதியிலே சூழலியலில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களைச் சில தகவல்கள் மூலம் எம்மையும் எமது பிரச்சினையின் தாற்பரியத்தையும் சிந்திக்க வைத்துள்ளன.

வடக்குகிழக்கு பகுதிகளில் நடந்த போரின் காரணமாக ஏழு இலட்சம் அதாவது 10000 ஹெக்டேயா அளவு தென்னைகள் அழிவடைந்துள்ளன. 15000 பனை மரங்கள் வெட்டப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன என ஒரு ஆய்வுத்தகவல் வெளியாகி உள்ளது. அது மட்டுமல்ல சூழலியல் தாக்கத்தின் மற்றோர் நிலைப்பாட்டை சுட்டக்கூடியதாக 25 சதவீத வைத்தியசாலைகளும் 500 பாடசாலைகளிலிருந்த 15000 வகுப்பறைக்கட்டடங்களும் அழிக்கபபட்டுள்ளன. 2 மில்லியன் அளவு மிதிவெடிகள் எமது பகுதிகளில் இடம்பிடித்துள்ளன.

இது பற்றிய தகவல்களை ஆர்வத்துடன் வாசிப்பதுடன் எமது சூழலுக்கான அர்ப்பணிப்பு நிறைவுபெற்றுவிடுகின்றது.

சூழல் தொடர்பான விழிப்புணர்வைக்கொண்டுவருவதிலும் சமூகப் பங்கேற்பை உள்ளீர்ப்பதிலும் கடைப்பிடிக்கக்கூடிய சில வழிமுறைகளை நாம் பின்வருமாறு ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம்.

i. நியாய பூர்வமாக்கல்.
ii. ஏற்றுக்கொள்ளும்தன்மை.
iii. நடைமுறைப்படுத்தல்.
iv. பொது அபிப்பிராயத்தை உருவாக்கல்.

இப்படியான முறை மீது நாம் கொண்டுள்ள நம்பிக்கை என்பது மற்றோரை மாற்றுவதற்கான இயற்கை விழிப்புணர்வுச் செயற்பாட்டைக்கொண்டு வருவதற்கேயானதாகும். இயற்கை சார்ந்த முகாமை முறைக்கூடாக சமூக காடாக்கம், காடுவளர்ப்பு, விவசாயம், நகரபசுமையாக்கம் என்பன நிலைப்படுத்தப்படக்கூடும். அவ்வாறான

**அ.கேதீஸ்வரன்**

சிந்திப்பின் எண்ணப்பாடானது இயற்கை மூலதனத்தை பற்றிய எண்ணக் கருவிலிருந்து இயற்கைப் பாதுகாப்பு பாதுகாப்புப் பகுதிகளைக் கவனிக்கத் தூண்டுகின்றது. பொருளாதார மூலதனத்திலிருந்து அவசரகால தனி உரிமை பயிரிடலையும் சமூகக் கலாசாரத்திலிருந்து நகரக் காடாக்கம், நகரப்பசுமைபோன்ற கருத்துக்களையும் உயிரூட்டியுள்ளது. இயற்கை மற்றும் சமூக ஒன்றிணைப்புத் தொடர்பான சிந்தனைதளமானது.

1. உள்ளூர் சார்ந்த ஒன்றிணைக்கப்பட்ட அணுகுமுறைகளைப் பயன்படுத்தல்.
2. இயற்கைக்கு நெருக்கமானதாக இருத்தல்.
3. மக்களுக்கு நெருக்கமானதாக இருத்தல்.

ஆகிய மூன்று அம்சங்களைச சார்ந்து செயற்படுவதாக அமைந்துள்ளதாக இருக்குமாயின் அதுவே நிலைபேறடைய சமூக விழிப்புணர்வை சூழலியல் பேணலில் கொண்டுவர முடியுமென பிரேரித்துள்ளது. இவ்வகையில் சூழலில் விழிப்புணர்வை எடுத்துவரும் சிந்திப்பும் சிந்தனையும் எமது பகுதிகளில் மிகவும் அருகியே காணப்படுகின்றன.

அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கிழக்குப் பல்கலைக்கழகமும், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டமும், பொருண்மிய மதியுரையகமும் இணைந்து நடாத்திய சூழலியல் சார்பான சர்வதேச மாநாடு இது தொடர்பில் ஒருசிறு பாய்ச்சலாகும்.

அதுவும்கூட அறிவியலாளருடன் மட்டுப்பட்டதாக இருந்தது. அதனைவிடஎமது பிரதேசத்தில் கிராமிய மட்டத்தில் தமிழா புனர்வாழ்வுக் கழகம் சூழலியல் தொடர்பாக எடுத்து வரும் முயற்சிகள் சிறிது நிம்மதியைத் தருகின்றன. வீதியோர மர நடுகை, கிராமியமட்ட சூழலியல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பொலித்தீன் பாவனைக்கு எதிரான முயற்சிகள் போன்றன குறிப்பிடத்தக்கன.

பசுமை உருவாக்கத்தில் வனவள பாதுகாப்புப் பகுதியின் மரநடுகைத் திட்டங்கள் சிறு நம்பிக்கையை அமுலாக்க ரீதியாக வழங்கியுள்ளன. இத்துடன் சில பண்ணை சார் அமைப்பிலான முயற்சிகளும் குறிப்பிடத்தக்கதாகும். கிராமிய மட்டத்தில் அச்சமூகங்களுக்கு இடையில் சூழலுக்கான பற்றுதல் என்பது சரியான ஒரு வெளிப்படுத்தலுக்கு உயர அவர்கள் விழிப்புணர்வூட்டப்படல் வேண்டும். அதனை செய்வதற்காக நமது வளங்களை இவ்வாண்டு சூழலியல் தின உறுதியாக நாம் சில சிந்தனை மாற்றத்தை தூண்ட உதவியாய் இருப்பின் அது காத்திர மானதாகவே அமையும்.

*



---

(06 ஆம் பக்கத்தொடர்ச்சி)

2002 பெப்ரவரி 22இன் பின் தளர்த்தப்பட்டிருந்த பல்வேறு நடை முறைகள் மீளஇறுகத்தொடங்கிவிட்டன. சோதனைச்சாவடிகளில் இராணுவப் புலனாய்வுத்துறையினரின் பிரசன்னமும் நடவடிக்கைகளும் தீவிரமாகியுள்ளன. அவர்களது தகவல் சேகரிப்பு நடவடிக்கைகள் மிரட்டுதல், அச்சுறுத்தல் விடுத்தல், என்பதாக உருவெடுத்துள்ளன. வீதிரோந்துகள், சோதனைகள், சுற்றிவளைப்புகள் பெருகிவிட்டன. இப்போது பிரகடனப்படுத்தாத பொருளாதாரத்தடையும் வந்துவிட்டது. துப்பாக்கிகளுக்குத் தும்மல் நோய்வர வேண்டியதுதான் மீதமாகவுள்ளது. (சிறுரக ஆயுதங்கள் இரகசியமாகவும் மறைமுகமாகவும் உயிர்குடிக்கும் நிழல்யுத்தம் இதற்குப் புறம்பானது) சிலவேளைகளில் இரணைமடுப் பகுதி மீதான ஒரு படை நடவடிக்கையுடன் இந்த நோய் ஆரம்பமாகலாம் என்பதான எதிர்வு கூறல்களும் செய்யப்படுகின்றன.

இந்தவரிசையிலேயே ஊடகவியலாளர் சிவராமின் படுகொலையையும், சுயாதீன ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய சந்தித்த விபத்தையும் நோக்குதல் வேண்டும். யுத்தமொன்று மீண்டும் மு[illegible]னடுக்கப்படுமானால் மிக வலுவான சேதத்தை அதற்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஏற்படுத்தக்கூடிய ஊடகவியலாளர்களாக சிவராமும் தேசப்பிரியவும் இருந்திருப்பார்கள். எனவே அவர்களை அகற்றிவிடுவதற்கான முன்முயற்சிகளே சிவராமின் படுகொலையும், தேசப்பிரியவின் விபத்துமாகும்.

அதாவது சிங்களதேசம் தமிழர் மீது மீண்டுமொரு யுத்தத்தைத் திணிப்பதற்கான தெளிவான முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்பதில் ஐயமில்லை. அதற்கான முற் தயாரிப்புகளில் வெகுவேகமாக அதனது ஒவ்வொரு அங்கமும் இறங்கிவிட்டன. இதற்கான முன்களத்தை தயாரிக்கும் அல்லது துப்புரவுசெய்யும் பணியில் சிங்களத்தின் ஊடகங்கள் உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் தீவிரமாக இறங்கிவிட்டுள்ளன. சிவராம் தனது கடைசிக் கட்டுரைகளில் ஒன்றில் தெளிவுபடுத்திய **CNN Efect** ஐ யுத்தத்துக்கான நியாயப்படுத்தலுக்காக ஏற்படுத்துவதில் அவை முனைப்பாகவுள்ளன.

வாகரை, மூதூர் கிழக்குப் பகுதிகள் சந்திக்கும் பொருளாதாரத்தடை என்பது இந்த ஒட்டுமொத்த வேலைத்திட்டத்தின் ஒரு சிறு பகுதிமட்டுமே. எனவே சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதியின் மீள் கட்டுமானத்தை பொருளாதாரத்தடை பாதிக்கிறது என்ற எமது கூப்பாடுகள் சிங்களத் தரப்பிடம் எடுபடப்போவதில்லை.

ஆனால், தமிழர் தரப்பு ஊடகக்கட்டமைப்பு சிங்களத்தின் இந்த கபட நாடகத்தை அம்பலமாக்குவதில் தீவிரமாக இறங்கினால் ஏதாவது பலன்கள் தற்காலிகமாகவேனும் கிட்டக்கூடும்.

*

# எங்கட வளர்ச்சிக்கு என்ன தடை..?

உலா 36



ஏ9–ஏரம்பு

'வணக்கம் எல்லாருக்கும் ! நல்ல சுகமாய் நீங்கள் எல்லாரும் இருப்பியள் எண்ட என்ரை வேண்டுதல், எப்பையும் உங்களுக்கு ஆதரவாயிருக்கும். ஆனால் பாருங்கோ இஞ்சால வந்து உவ்வளவு காலம் ஆயிட்டிதே! என்னமாதிரி உள்ளூர் நிலைமையள் இருக்கெண்டு அறியிறதுக்காக குணத்தாரின்ரை கடை ரெலிபோனுக்கு முந்தநாள் எடுத்துப்பார்த்தன். அந்த மனுசன் நான் வெளியில எண்டிறதை நம்ப மறுத்திட்டிது. 'யோவ் ஏர்! என்ரை கடையில சோடா குடிக்காமல் 5 ரூபாய் குறையவெண்டு இளநீர் குடிக்கிற நீரோ லட்சங்கள் செலவழிச்சு வெளிநாடு போகப்போறீர்! இஞ்சை நாங்க ஒண்டும் காதில பூ வைச்சுக்கொண்டிருக்கேல்லை. ஏதோ பொக்குளிப்பான் போட்டு, வீட்டுக்குள்ளை அமத்தீட்டிது போல. அதுதான் வெளியில ஆளைக் காணக்கிடைக்கேல்லை. எல்லாம் என்ரை கடையில சோடா குடிக்க நப்பிப்பட்டு, குடிக்க வாறவங்களையும் விதண்டாவாதம் கதைச்சு மறிச்ச பாவம், பழியள் தான், அம்மாள் வியாதியாக வந்திருக்கு !', எண்டு மனுசன் ஒரு கணக்குக்கு இழுத்துக்கொண்டு போச்சிது. உதுதான் நல்லதுக்குக் காலமில்லை எண்டிறது. நான் ஆரின்ரை நன்மைக்காய் சொல்லிறனான் ? அப்பிடியே சொல்லிறதைச் செய்யிறனான் ? ஆ... நீங்களே சொல்லுங்கோ பார்ப்பம்! இஞ்சை ஒவ்வொரு நாடும் எப்பிடியெல்லாம் முன்னேறியிருக்கிது! எங்கட நிலையை ஒப்பிட்டுப்பார்க்க வயித்தைப்பத்தியெல்லே எரியிது. போர், சுனாமி எல்லாம் எங்களை முடக்கினது வேறவிசயம். ஆனால் ஐரோப்பாக்காரன் பார்க்காத அழிவையே நாங்கள் கண்டிட்டம்! கிழங்கு அவிச்ச கஞ்சியில(?) காய்ஞ்ச பாணைத் தொட்டுச் சாப்பிட்டுக்கொண்டு மூண்டு நேரமும் மூச்சு விட்ட நாடுகள்தான் இண்டைக்கு நாங்கள் பிரமிச்சுப் பார்க்கிற இந்த நாடுகளெல்லாம்! வெறுமன பெருமூச்சு விட்டுக்கொண்டு காலத்தையும், நேரத்தையும் காரணம் காட்டிக்கொண்டு இருக்கப்போறோமோ நாங்கள் ?

மருமகன் பொடியன் சொன்ன விசயம் ஒண்டு. பொடியன் இஞ்சால வரேக்கிள்ளை 16 வயசு. கனகாலமாய் இந்தோனேசியா, மலேசியா, பாங்கொக் எண்டு அலைஞ்சுதான் கடைசியில பயணம் சரிவந்ததாம். அப்பிடி ஒருமாதிரி இஞ்சால வந்து வேலை செய்து வந்த காசை அடைப்போமெண்டு பார்த்தால், 18 வயசு ஆகாததால வேலை செய்ய அனுமதி இருக்கேலை. 12 வருசம் கட்டாயம் கல்வி கற்றிருக்கோணும் எண்ட சட்டத்தால, ஊரிலை படிச்சது போக மிச்சக்காலத்துக்குப் படிக்க வேண்டின கட்டாயமாம். அரசாங்கத்தின்ரை சமூக உதவிப்பணத்தில படிச்ச நேரம், வருசத்துக்கு உடுப்பு வேண்ட காசு குடுபட்டதாம். பொடியன் பார்த்திருக்கிது, அங்கை கூடக் காசு குடுத்து வாங்கிற நேரத்துக்கு, இன்னும் வரேலாமல் பாங்கொக்கில நிற்கிற தெரிஞ்ச பொடியங்களுக்கு அதில ஒரு பகுதியை மட்டும் அனுப்பினால் நல்ல மலிவாய் கன உடுப்பு எடுக்கலாம், மிச்சக்காசை வீட்டை அனுப்பலாம் எண்ட யோசனையில தனக்குப் பொறுப்பாயிருந்த ஒரு ரீச்சரிட்டை கேட்டிருக்கிது (18 வயசு ஆகாத ஆக்களுக்குப் பதிலாய் வேறொரு பொறுப்பான ஆள்தான் காசு அனுப்பிறதுக்கு கையெழுத்து வைக்கோணும்- பாதுகாவலர் மாதிரி). அதுக்கு அந்த ரீச்சர் 'எங்கட காசை எடுத்து அடுத்த நாட்டுப் பொருட்களை வாங்கிறதுக்காக இந்த அரசாங்கம் ஒண்டும் உங்களுக்கு காசு தரேல்லை. உது இஞ்சையே செலவழிக்கோணும்', எண்டு கண்டிப்பாய் சொல்லிச்சிதாம். இந்தளவுக்கும் அந்த மனிசி பிறந்தநாள், கிறிஸ்மஸ் எண்டு எல்லாத்துக்கும் பரிசுகள் வேண்டிக்கொண்டு வந்து, படிக்கிறதை ஊக்குவிப்பாவாம். இன்னுமொரு விசயம் அண்டைக்கு அவதானிச்சனான் : என்னதான் வசதியளோட வாழ்ந்தாலும் காசுக்கும், பொருட்களுக்கும் இவங்கள் குடுக்கிற மரியாதை தான் அது. கடைவழியில சில்லறை இருந்தாலும், நாங்கள் குடுக்கிறதுக்கு சரியாய் கௌரவம் பார்ப்போம். இஞ்சை பெரீய கோட்சூட் போட்டுக் கொண்டிருந்தாலும், பேர்ஸ் முழுக்கத் துருவிப்பார்த்து சில்லறை குடுப்பினம், கடைக்காரரும் அலுத்துக்கொள்றேல்லை. அண்டைக்கொருத்தர் கடையடியில காசு குடுக்கிற நேரம் விழுந்த 2 சதக் குத்தி உருண்டு கொண்டு போய் ஒரு மூலையில செருகுப்பட்டுக் கிடந்திச்சிது. அந்தாள் ஒரு கூச்சமும் இல்லாமல் மினைக்கெட்டு எடுத்துக்கொண்டு போய்ச்சிது. 2 சதம் தானேயெண்டு அங்கை நிண்ட ஒருத்தரும் சிரிக்கேல்லை. இந்தளவுக்கும் முதல்நாள் என்ரை பொக்கற்றுக்கிள்ளை இருந்து கீழ விழுந்த 1 யூரோ குத்தியை எடுக்கிறதுக்கு, பார்க்கிற ஆக்கள் என்ன நினைப்பினம் எண்ட யோசனையில கௌரவம்(?) பார்த்து நான் அதிலையே விட்டிட்டு வந்திட்டன். வீட்டை வந்து 2 நாளா பேய் வயித்தெரிச்சல்! என்ன இருந்தாலும் 1 யூரோ எங்கட காசுக்கு 128 ரூபா எல்லே! அப்பிடி எங்கட வெற்றுக்கௌரவ பகட்டு நினைப்புகள் தான், எங்கட வளர்ச்சி அடையாத நிலைக்கு முக்கியமான காரணம். எங்களை நாங்கள் மாத்திக்கொள்ளிறதால லாபம் எங்களுக்கும், எங்கட சந்ததியளுக்கும் எண்டால், அதைப் புரிஞ்சு கொண்டு மாற்றதுக்கு ஏன் பின்னடிக்கோணும்! என்ன இருந்தாலும் நாங்கள் இன்னும் தான் சிங்கள நாட்டில இருந்து கழிவுப்பேப்பரை இறக்குமதி செய்யிறோம் எண்டிறதை மறக்கக் கூடாது.

சரி நாங்கள் நாட்டைப்பற்றிப் பார்ப்பம். நான் முதலே சொன்ன மாதிரி சின்னச்சின்னனாய் இருந்த நூற்றுக்கணக்கான ராச்சியங்களை 1871 இல பிஸ்மார்க் (Otto von Bismark) எண்ட தலைமை அமைச்சர் தான் ஒண்டு சேர்த்து, பலமான நாடொண்டைக்கட்டியெழுப்பினவர். பிற்காலத்தில இவற்றை பெயரைக் கொண்ட யுத்தக்கப்பல்களும் இருந்தன. 1871 இக்கு முன்னால ஒஸ்திரியா, போலந்து நாடுகளின்ரை பிரதேசங்களை உள்ளடக்கி ரஷ்யா வரைக்கும் பிரஸ்யா எண்ட மன்னராட்சி அப்பப்ப இருந்து வந்தாலும், அது ஒரு தேசியமாக கட்டியெழுப்பப்பட்டது 1871 இல பிஸ்மார்க்காலதான். வேலை செய்யிற காலத்தில கொஞ்சம் காசைக் கழிச்சு, வேலை இல்லாத காலத்தில உதவிக்கொடுப்பனவாய் வழங்கிற கொடுப்பனவு உட்பட தொழிலாளர்களுக்கான காப்புறுதித்திட்டங்களை அறிமுகப்படுத்தினவரும் இவர்தான்!

1933 இல ஹிட்லர் பதவியைக் கைப்பற்றினதில இருந்து ஆரிய இனத்தை மேம்படுத்தின பாசிசம் முன்வைக்கப்பட்டதோட, யூதர், ஜிப்சிகள், சிகொய்னர் உட்பட யேர்மனியர் அல்லாத சகலரும் 60 லட்சத்துக்குக் குறையாமல் படுகொலை செய்யப்பட்டிச்சினம். வரலாறு கண்ட மிகமோசமான இந்த மோசமான படுகொலைக்கு ஆதாரமாய் ஹிட்லரால எழுதப்பட்ட 'மைன் கம்ப்.'.ப்' நூல் 'ஆரிய பாசிசவாதத்தை' முன்வைச்சது. இதையொட்டித்தான் 1956 இல அநாகரிக தர்மபால எண்ட சிங்கள எழுத்தாளரால 'விகாரையில் புரட்சி' (Revolt in the temple) எண்ட நூலும் எழுதப்பட்டிது. தர்மபாலவினால் சிங்களவர் ஆரிய மைந்தர்களாக சித்தரிக்கப்பட்டது கவனத்துக்குரிய தொண்டு. ஆ... அப்பிடியே 2ஆம் உலகயுத்தம் 1945இல முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட நேரம் கிழக்கு யேர்மனியை சோவியத்தும், மேற்குப் பகுதியை பிரித்தானியா, பிரான்ஸ், அமெரிக்கா ஆகியவற்றின்ரை கூட்டுப் படையளும் ஆக்கிரமிச்சுக்கொண்டது. யேர்மனி தோற்கடிக்கப்படும் வரைக்கும் ஒற்றுமையாய் சேர்ந்து அடிபட்ட நாடுகள், யுத்தம் முடிவுக்கு வந்தாப்பிறகு சோவியத் தலைமையிலான சோசலிச நாடுகளுக்கும், அமெரிக்கா தலைமையிலான முதலாளித்துவ நாடுகளுக்கும் இடையில பனிப்போர் புகையத் தொடங்கிட்டிது. இந்தப் புகைச்சலால இரண்டு தரப்புகளுக்கிடையில நாடு மேற்கு/கிழக்கு யேர்மனி எண்டு துண்டாடப்பட்டிச்சிது. கிழக்கு யேர்மனிக்கு நடுவில இருந்த பேர்ளினும் துண்டாடபட்டது மட்டுமில்லாமல், 1961இல நடுவில பேர்ளின் சுவரும் கட்டப்பட்டது. எத்தினையோ வேதனையான வரலாற்றுக் கட்டங்களைத் தாண்டி 1990ஆம் ஆண்டு இந்தச்சுவர் கிளர்ந்தெழுந்த மக்கள் புரட்சியில உடைக்கப்பட்டு, இரண்டு யேர்மனியளும் இணைஞ்சு கொண்டன. ஒருதாய் வயித்துப்பிள்ளையளை ஆரோ அறுவாங்கள் பிரிச்சு வைக்கப்பார்க்கிற நிலைமையை எங்கட இனமும் முகங்குடுக்கிறதால, எனக்குத் தனிப்பட்ட ரீதியிலையும் பேர்ளினைப் போய்ப் பார்க்கோணும் எண்டு உங்கை இருக்கேக்கிளையே ஆசை பாருங்கோ!

பொருளாதாரம் எண்டு பார்க்கப்போனால் இரும்புத்தாதுப்பொருள் உட்பட உலோக மூலப்பொருட்கள் இருந்தாலும், பெருமளவில பலமானதொரு உற்பத்திப்பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பியிருக்கிறது தான் இவங்கட பலமாயிருக்கிது. 2ஆம் உலகயுத்தம்முடிஞ்சகையோட நாட்டைக் கட்டியெழுப் பிறதுக்காகக் கிடைச்ச காசைக் கொண்டு பத்தே வருசத்தில பழைய நிலைமைக்கு மீண்டதோட மட்டுமில்லாமல், கடன் காசையும் திருப்பிக் கொடுத்திட்டினம். அந்த அசாதாரண உழைப்பைப் பார்த்திட்டு கடன் குடுத்த நாடுகள் அந்த முதலைத் திரும்ப ஒருக்கால் கடனாய் குடுத்து எடுத்திருக்கினம். கன நதியளும் நாட்டுக்கு இடையில அங்காலையும், இங்காலையும் ஓடித்திரியிறதால நீர்வழிப்பாதை மட்டுமில்லாமல் குளிர்ச்சியான வடிவும் பாருங்கோ! உலகம் பூராவும் யேர்மனியத்தயாரிப்பு எண்டால் தனியொரு கௌரவம். யேர்மனியின்ரை தொழில்நுட்பம் பற்றி எங்கட தலைவர் பாராட்டிச்சொன்னதாவும் புத்தகங்களில வாசிச்ச ஞாபகம். அவர் சொன்னால் எப்பிடியும் அதில ஏதோ நல்ல விசயம் இருக்கோணும் தானே, எண்டிட்டு கொஞ்சம் இந்த நாட்டின்ரை தொழில்நுட்பம் பற்றி அறிவோம் எண்டு வெளிக்கிட்டன். ஆனால் ஒண்டு பாருங்கோ லாம்புக்குச் சிமிலி மாத்திறது, புதுத்திரி போடிறதுகளோடை என்ன தொழில்நுட்ப அறிவு(?) அடங்கிடும். இருந்தும் அவா விடேல்லை. அங்கையொரு பெரீய்ய கார்த் தொழிற்சாலையைப் பார்க்கிறதுக்கு ஒருமாதிரி அலுவல் குடுத்திட்டன். எங்கட தமிழ்ப்பொடியங்கள் கனபேர் அங்கை வேலை செய்யிறாங்கள். அவையளைக் கொண்டு ஒழுங்குகள் செய்து நேரம் எடுத்திட்டன். ஆ. . உந்த நேர ஒதுக்கல் (appointment) பற்றியும் கட்டாயம் நான் சொல்லியே ஆகணும். சாதாரணமாவே ஐரோப்பியக்காரர் நேரத்துக்கு மதிப்புக் குடுத்தாலும், யேர்மன்காரர் அவையளை விடவெண்டவங்கள். சொன்ன நேரத்தை போறவரும், காத்திருக்கிறவரும் கட்டாயமாய் கடைப்பிடிக்கிறாங்கள். எல்லாரும் நேரத்துக்கு மதிப்புக் குடுக்கிறதால நேரம் வீணாய்ப்போறதுக்கு வாய்ப்பில்லாமல், சகலருக்கும் பிரயோசனம் கிட்டிது. ஆராவது நாங்கள் தமிழர் நேரத்தை மதிக்கிறோம் எண்ட புராணங்களோடை எனக்கு முன்னால வெளிக்கிட்டிடாங்கோ ! ஏற்கெனவே உதைப் பற்றி நாங்கள் கதைச்சனாங்கள். நாங்கள் மணிக்கூடு கட்டிறது சும்மா ஸ்ரைலுக்கெல்லோ! ஆனால் அவங்களுக்கு நேரத்தை மதிக்காத ஆக்களைக் கண்ணிலையும் காட்டப்படாது. அதால ஏன் சோலி எண்டிட்டு வேளைக்கே வெளிக்கிட்டன்.


சந்திப்பை ஒழுங்குசெய்த பொடியங்கள் சொன்னாங்கள், 'அப்பு! வெளியாக்கள் வந்து பார்க்கிறதுக்கெண்டு எல்லாத் தொழிற்சாலையளும் வருசத்தில ஒருநாளை ஒதுக்கிறவங்கள். அப்படிச் செய்யிறதால அந்தந்த தொழில் நிறுவனங்களைப் பற்றி பொதுசனத்துக்கு வடிவாய்த் தெரிய வாறதால நம்பிக்கை ஏற்படிறதுக்கும் வாய்ப்பிருக்கு. இது தங்கட தயாரிப்புகள், சேவைகள் பற்றி வாடிக்கையாளருக்குச் செய்யிற ஒரு வகை விளம்பரமும் கூட! படிச்சு முடியிற வயசில இருக்கிற ஆக்கள் சில நேரம் பிடிச்சால் அங்கையே வேலை செய்ய இணைஞ்சு கொள்ளிறதும் உண்டு. இதுக்காகவே 8,9ஆம் வகுப்புகளில எல்லாரும் தங்களுக்குப் பிடிச்ச தொழில் சம்பந்தமாய் அறிஞ்சு கொள்ளக்கூடிய மாதிரி தொழிற்சாலையள், அலுவலகங்கள் பள்ளிக்கூடங்களோட இணைஞ்சு 3 கிழமைக்கு வசதி ஏற்படுத்திக் கொடுக்கும்'. 'நல்ல விசயங்கள் தான் தம்பியவை. எங்கட நாட்டிலையும் ஒரு காலத்திலை "உப்பிடிச் செய்தால் பிள்ளையளுக்கு தங்கட தொழிலைத் தேர்ந்தெடுக்க வசதியாய் இருக்கும்'. 'ஏன் அப்பு ஒருகாலத்திலை எண்டு இழுக்கிறீங்கள் ? ஒரு பேக்கரியோ, ஆஸ்பத்திரியோ, ஊடகங்களோ இப்பையே செய்யிறதுக்கு என்ன முட்டுக்கட்டை இருக்கப்போகுது ? அந்தந்தத் தொழிலில ஈடுபாடு இருக்கிற பொருத்தமான ஆளணியைத் திரட்டிக் கொள்ளிறதுக்கு, 3 கிழமை இப்பிடி ஒதுக்கிக் கொடுத்தால் என்னவாம்'. அவர் சொன்னதிலையும் நியாயம் இருக்கத்தான் செய்யிது. ஆனாலும், சிலதுகளைத் திருத்த முயற்சிக்கிற நேரத்துக்கு, எருமை மாட்டைக் குளிக்க வார்த்தால் பிரயோசனமாய் இருக்கும் பாருங்கோ! திருந்திறதுக்குத் தயாராய் இல்லாததுகள், தாங்கள் விடிற பிழையளையும் ஒத்துக் கொள்ளமாட்டிதுகள்.

சரி அதுகளை விட்டிட்டு கார்த்தொழிற்சாலைக்கு வாங்கோ ! பென்ஸ் கார் செய்யிற கொம்பனி இது. தேவையான பாகங்கள் நாட்டின்ரை வெவ்வேறு நகரங்களிலை இருந்தும் இஞ்சை வருகிது. அதுகளை பெல்ற்றில எடுத்தெடுத்து இணைச்சு 7 நிமிசத்துக்கொரு காரை தயார்நிலையில வெளியால விட்டுக் கொண்டிருக்கினம். ஒரு குழுவுக்கு 8 மணித்தியாலக் கணக்கில மாறி மாறி வெவ்வேற குழுக்கள் 24 மணித்தியாலமும் வேலை செய்து கொண்டிருக்கினம்.

(20ஆம் பக்கம் பார்க்க)

# இருபதாம் நூற்றாண்டு உலக இலக்கியம்

## இலக்கியப்பகிர்வு



ஈழத்து சிறுகதை உலகில் சாந்தன் அவர்களுக்கு சிறப்பான இடம் உண்டு என்பது இங்கு குறிப்பிட்டுத்தான் வாசகர்கள் அறியவேண்டிய விடயம் அல்ல.

அவர் மிகநுட்பமான ஒரு படைப்பாளி. கே.எஸ்.சிவகுமாரன் அவர்கள் சாந்தன் அவர்களின் இருபதாம் நூற்றாண்டு உலக இலக்கிய நூலில் குறிப்பிட்டது போல மொழியின் சிறப்புக்களை அறிந்துவைத்து தக்க இடத்தில் தக்க சொல்லைப் பயன்படுத்தி தனது வெளிப்பாட்டுத் திறனை கொண்டுவருபவன்.

பல சிறுகதைத் தொகுப்புக்களையும் குறுநாவல்களையும் அவர் எழுதியுள்ளார். அவை நூல்களாகவும் வந்துள்ளன.

சிறுகதைகளைப் படைக்கும் ஆர்வம் உள்ளவர்கள் எப்படி தமிழ் நாட்டு சிறுகதையாளர்களைத் தேடித் தேடி படிக்கின்றார்களோ அதற்கு மேலாக சாந்தன் அவர்களின் சிறு கதைகளை வாசிக்கவேண்டும். ஏனெனில் சிறுகதைகளின் சிறப்பான பண்புகளை எங்கள் மண்ணுக்கே உரித்தான குணாம்சத்துடன் அவர் வெளிப்படுத்துகின்றார்.

சிறுகதைகளில் சிறப்புப்பெற்ற அவர் தற்போது எழுதியுள்ள நூல் இருபதாம் நூற்றாண்டு உலக இலக்கியம்-படைப்பு-படைப்பாளர் பற்றிய குறிப்புகள்.

சாந்தன் ஒரு நேர்த்தியான சிறப்பான வாசிப்பாளர் என்பது எங்கள் எல்லோருக்கும் தெரியும். அவரை பெரும்பாலும் பழைய புத்தகக்கடைகளிலே சந்திக்கலாம். பெறுமதிமிக்க பல புத்தகங்களை அவர் அங்கு தேடிக்கொண்டு இருப்பார்.

அவ்வாறு சாந்தன் அவர்கள் தான் படித்த அல்லது தான் அறிந்து கொண்ட படைப்பாளிகளை அவர்களது சிறப்புகளை எங்கள் முன் கொண்டுவருகின்றார்.

அவரது இந்த நூலில் குறிப்பிட்ட படைப்பாளிகளில் குறிப்பிட்ட சிலரைத்தான் நாம் அறிந்திருந்தோம். ஆனால் இந்தப் புத்தகத்தைப் படிக்கும்போது நாம் உதிரிகளாக அறிந்து வைத்திருந்த பல விடயங்கள் ஒரு ஒழுங்குக்கு வருகின்றன.

அதாவது எமக்குப் பல புதிய வாசல்களை திறக்கின்றன. தமிழ் மொழிபெயர்ப்பில் நான் பார்த்து கவனிக்கத் தவறிய பல நூல்களின் பெறுமதியை உணரக்கூடியதாக உள்ளது.

என்னுடைய அனுபவம் ஒன்றினை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறேன். நான் சிறுவனாக இருந்த காலத்தில் அதாவது கல்கியில் பொன்னியின் செல்வன் அரு-இராமநாதனின் குண்டுமல்லிகை போன்ற நாவல்களை வாசித்த காலம் என்று நினைக்கின்றேன்.

எனது உறவினர் ஒருவர் இரண்டு புத்தகங்களை வாங்கிவந்தார். ஒன்று அகிலன் எழுதிய நாவல் பெயர் ஞாபகம் இல்லை. மற்றது கடல் முத்து என்ற மொழிபெயர்ப்பு நாவல்.

அகிலனின் நாவலை நான் அப்போது வாசித்ததாக ஞாபகம். கடல் முத்தை தொட்டுக்கூட பார்த்ததாக ஞாபகம் இல்லை.

அந்தக் கடல்முத்து தொடர்பாக சாந்தன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“ஸ்ரீன்பெக் (அமெரிக்க இலக்கியவாதி) நிறைய எழுதினாலும் தரத்தையும் பேணிக்கொண்ட ஒருவர். 62இல் நோபல் பரிசுபெற்றார். அவருடைய ஏனைய படைப்புகளுள் முத்து என்ற குறுநாவல் அற்புதமானது. கடல்முத்து என்ற பெயரில் இது தமிழிலும் பின்னர் வெளியாயிற்று. ஏழை மீனவன் ஒருவனுக்கு கிடைக்கின்ற பெறுமதி வாய்ந்த முத்தொன்றினால் அவன் படுகின்ற அல்லல்கள், அதன் பயனாய் அவன் இருந்தவற்றையும் கடைசியில் அந்த முத்தையுங்கூட இழக்கவேண்டி வருகின்ற நிலை. இவற்றை அந்தக் குறுநாவல் கூறிற்று. ஆனால் இதனூடாகத் தெரிகிற அர்த்தங்கள் வேறு. முத்துகூட குறியீட்டுப்படைப்புத்தான்.”

சமகாலத்தில் எங்கள் இலக்கிய




முயற்சிகள் தளர் நடையில் குறை உயிரில் உள்ளதாகப்பேசப்படுகின்றது.

ஓரளவு வீச்சுடன் காணப்பட்ட கவிதைகள் கூட சோர்ந்துவிட்டன. புதிய படைப்பாளிகளைக் காண வில்லை.

நல்ல சிறுகதை, நாவல்கள் கூட மிக மிக அருந்தலாகிப் போய் விட்டன. எழுதப்படும் சிறுகதைகள் கூட எந்தவிதமான சிறப்போ கலை நேர்த்தியோ இல்லாமல் அவியாத சாம்பாராக உள்ளதாகச்சொல்லப்படுகின்றது.

பரந்த வாசிப்பும் அதன் ஊடாகப் பெறப்படும் தலைசிறந்த உலக இலக்கிய அனுபவங்களும் இல்லாத சூழலுமே இதற்குக் காரணம் என்று

**இணுவையூர்**
**சிதம்பரதிருச்செந்திநாதன்**

கருதப்படுகின்றது.

உண்மையில் எங்கள் படைப்பாளர்கள் சாந்தன் போன்றவர்கள் எம் மத்தியில் உள்ளதை நினைத்து பெருமைப்படவேண்டும். பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

தரமான உலக இலக்கியம் எத்தகைய சூழ்நிலையில் என்ன மாதிரி பிறக்கின்றது என்பதை இந்த நூலின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.

“கவிதைகள் ஒரு நாட்டை உருவாக்கிவிட முடியாதுதான். ஆனால் மக்களின் மனதில் தாயகம் பற்றிய ஒரு விம்பத்தை அவற்றால் உருவாக்கிவிட முடியும்”என பலஸ்தீனக் கவிஞர் மற்முட் தர்வீஷ் குறிப்பிட்டதை சாந்தன் குறிப்பிடுகின்றார்.

பல்வேறு நாடுகளின் சுதந்திரப் போராட்டங்களில் இந்தப் படைப்பாளிகள் எவ்வாறு நடந்து கொண்டார்கள், எத்தகைய படைப்புக்களைச் செய்தார்கள் என்றெல்லாம் சாந்தன் குறிப்பிடுகின்றார்.

குறிப்பாக கென்ய நாட்டவரான 'ங்குகி வாதியங்கோ' தொடர்பாக சாந்தன் சொல்லும் குறிப்புகள் சிறப்பானவை.

“பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பிற்கெதிரான கென்ய சுதந்திரப்போராட்டம் மாவ்மாவ் இயக்கத்தினால், ஜோமோ கென்யாட்டா தலைமையில் நடத்தப்பட்டது. ஜோமோ என்றால் 'எரியீட்டி' என்று அர்த்தம். சர்வதேச புகழ் பெற்றவரான சமகால கென்ய நாவலாசிரியர் ங்குகிவா தியங்கோ, அந்த சுதந்திரப் போராட்ட காலத்திலே இளைஞராக இருந்தவர். போராட்டத்தின் பங்காளியாகவும், சாட்சியாகவும் விளங்கிய ங்குகி, தம்முடையமக்கள் அனுபவித்த கஷ்டங்கள் அனைத்தையும் தாமும் அனுபவித்தார். ஜேம்ஸ் ங்குகி என்ற தம்முடைய முந்திய பெயரை அது ஏகாதிபத்தியத்தின் அடையாளம் எனக்கருதி, மாற்றி, கென்ய முறைப்படி அவருடைய கிகியு மரபுக்கேற்ப, ங்குகிவா தியங்கோ என அதாவது தியங் கோவின் மகன் ங்குகிஎன அமைத்துக் கொண்டார்.

அவரின் கதைகளில், கென்யமக்களின் இனக்குழு வாழ்வும் மந்திர மாயங்களும், காடும் இடம் பெறுகிற அதே வேளையில் அம்மக்களின் போராட்டங்களும், அவற்றின் பயனாய் அவர்கள் வென்றெடுத்த- அவர்கள் 'உஹுரு' என்றழைக்கின்ற- விடுதலையும் அதன் பின் எதிர் கொள்ள நேர்ந்த புதிய நிலைமைகளும் செவ்வனே இடம் பெற்றுள்ளன. 1963 இல் கென்யா சுதந்திரம் பெற்றபோது ஏற்பட்ட புதிய சூழல்களை வைத்து 66 இல் ங்குகி எழுதிய ஒரு கோதுமை மணி என்கின்ற நாவல், கென்ய விடுதலையைப் பற்றிய ஒரு செம் மை சான்ற இலக்கியமாகக் கொள்ளப் படுகின்றது.

சுதந்திரம் வந்ததும் எல்லார்க்கும் எல்லாம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு எப்படி ஏமாற்ற மாகிவிடுகிறது என்பது இந்நாவல் காட்டுகின்ற யதார்த்தம். அழாதே குழந்தாய் என்ற ங்குகியின் முதலாவது நாவல், அவருடைய படைப்புக்களிலே சிறந்ததாகக் கொள்ளப்படுவது. இரண்டு சிறுவர்களின் எதிர்காலக் கனவுகள் யாவும் எவ்வாறு ஏகாதிபத்திய கொடுமைகளினால் கொடூரமாகச் சிதறடிக்கப்படுகின்றன என்பதை அது கூறிற்று.

ஏகாதி பத்தியக் கொடுமைகளை எதிர்த்த அதே வீறுடனும் வேகத்துடனும் ங்குகி, சுதந்திரத்தின் பின் தலை தூக்கிய ஊழல்களையும் அநீதிகளையும் எதிர்க்க ஆரம்பித்தார். இரத்த இதழ்கள் என்ற அவரது நாவல் மற்றும் நான் விரும்பும்போது மண முடிப்பேன் என்ற நாடகம் போன்றவை அதிகார வர்க்கத்துக்கெதிரான குரலாய் அமைந்தன. இப்படியான எழுத்துக்கள்- செயற்பாடுகளினால் ங்குகி சிறைவாசம் அனுபவிக்க நேரிட்டது. சிறையில் மல கூடக் கடதாசியில் அவர் எழுதிய சிலுவையில் சாத்தான் என்ற நாவல் சமகால கென்யாவைப் பற்றிய தீவிர விமர்சனமாய் அமைந்தது. எவ்வித விசாரணையுமின்றி நீண்ட காலம் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த ங்குகியை விடுதலை செய்யுமாறு உலகெங்குமிருந்து குரல்கள் ஒலித்தன. ங்குகி விடுதலை செய்யப்பட்டார். எனினும் சிறையிலிருந்த காலத்தில் அவர் பட்ட துன்பங்களை தடுப்புக்காவல் என்ற நூல் நன்கு எடுத்துக்காட்டியது.

# மறைந்தும் மறவாத கலைஞன்

சிறந்த நாடக நடிகரான வதிரியைச்சேர்ந்த திரு எம்.பி. அண்ணாசாமி அவர்கள் இறந்து இன்றோடு இருபத்தாறு வருடங்கள் ஆகின்றன. அன்னாரின் கலைச்சேவையை மீண்டும் ஒருமுறை நினைவுகூர நாம் கடமைப்பட்டுள்ளோம்.

அமரர் அவர்கள் 20.08.1912 ஆம் ஆண்டு வதிரியில் உள்ள இசைஞானம் கொண்ட ஒரு குடும்பத்திலே பிறந்தார். இவரது தந்தையார் நாதஸ்வர வித்துவானும், மரபு வழி நாடக ஆசிரியருமான பெரியண்ணா என அழைக்கப்படும் அமரர் மூ.பெரியபொடி அண்ணாவியார் ஆவர். தனது மகனும் இந்நாட்டில் ஒரு பெரிய நாதஸ்வர வித்துவானாக வரவேண்டுமென விரும்பி அக்காலத்தில் யாழ் நகரில் மிகப் புகழ்பெற்ற நாதஸ்வர வித்துவான் அண்ணாசாமி அவர்களுடைய பெயரையே அவருடைய மகனுக்கும் சூட்டினார்.

எமது மக்களிடையே சைவம் தழைத்தோங்க பெரிதும் உழைத்த தேவரையாளி இந்துக் கல்லூரி ஸ்தாபகர் அமரர் கா.சூரன் ஆசாரியார் அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி சைவ நெறியில் பலரும் போற்றும் வகையில் இப்புவியில் வாழ்ந்து காட்டியவர் அமரர் அண்ணாசாமி.


கலாவினோதன்
எம்.பி.அண்ணாசாமி ஆசிரியர்

அமரர் அண்ணாசாமி அவர்கள் இளமையிலே தேவார திருவாசகங்களை நல்ல பண்ணுடனும், உருக்கமான இசையுடனும் பாடும் பணியாகக் கொண்டவர். தனது சிறு வயதினில் தேவரையாளி சைவ வித்தியா சாலைக்கு அமரர் உயர் திரு. வி.கல்யாணசுந்தர முதலியார் வருகைதந்தபோது அவர் முன்னிலையில் பண்ணிசைத்தமையைப் புகழ்ந்து ஆசி கூறினார்.

இவர் ஒரு பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராகவும், ஒரு தலைசிறந்த ஆசிரியராகவும், சங்கீத மேதையாகவும், ஒப்பற்ற ஒப்பனையாளராகவும், இன்னும் பலதரப்பட்ட மக்களாலும் வியந்து போற்றப்பட்டு வரும் நாடக நடிகராகவும், தமது சமூகத்தில் வானொலி புகழ் பாடகராகவும், உதைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் ஆகியவற்றில் சிறந்த வீரனாகவும் திகழ்ந்தவர். இரண்டாவது மகாயுத்தத்தின் போது பலாலி முகாமில் இருந்த மேலைநாட்டு இராணுவத்தினரோடு வதிரி டையமன்ட் விளையாட்டுக்கழகத்தின் சார்பில் முன்னணி வீரராக விளையாடியது குறிப்பிடத்தக்கது.

சிறந்த நாடக நடிகரான இவர் தமது காலத்தில் ஆயிரக் கணக்கான நாடகங்களில் நடித்து புகழ்பெற்ற சாதனைக்குரியவர். தனது எட்டாவது வயதில் நாடகங்களில் நடிக்க ஆரம்பித்தார். இவர் நடித்த நாடகங்களில் “அரிச்சந்திரா”, “பவளக்கொடி”, “அல்லி அர்ச்சுனா”, “சாரங்கதரர்”, “காளிதாஸ்”, “சத்தியவான் சாவித்திரி”, “வள்ளி திருமணம்” ஆகியவை அன்னாருக்கு பெரும் புகழை கொடுத்தன. இவரின் நடிப்பாற்றலைப் புகழ்ந்து திரு.கே.பி.ஹரன் (முன்னாள் வீரகேசரி, ஈழநாடு ஆசிரியர்) தலைமையில் கரவெட்டியில் எடுக்கப்பெற்ற விழா ஒன்றின்போது கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் கலா “வினோதன்” என்னும் பட்டத்தினை வழங்கி கௌரவித்தார். இன்று பலராலும் புகழப்பட்டு வரும் நடிகைமணி, கலாநிதி, வி.வி.வைரமுத்து அவரது ஆரம்ப காலத்தில் அண்ணாசாமி அவர்களுடன் பெண் பாத்திரமேற்று நடித்தது குறிப்பிடத்தக்கது. மற்றும் இவரின் சக நடிகர்களாக சேர்ந்து நடித்தவர்களில் திருவாளர்கள் ச.தம்பியையா (அல்வாய்), மார்க்கண்டு (வசாவிளான்), நற்குணம் (கரவெட்டி) கவிஞர் ஐயாத்துரை (அரியாலை), இரத்தினம் (அரியாலை), செல்வம் (அரியாலை) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

தமது சமூகத்தாரை இழிவு செய்தோரை பாட்டுக்கள் மூலமும், ஓவியம் மூலமும் கிண்டல் செய்ததுமன்றி வடமராட்சி சமூக சேவாசங்க செயலாளராகவும் வதிரி தமிழ் மன்றத் தலைவராகவும் சேவை புரிந்து மேடைப் பேச்சுக்கள் மூலமும் தானே இயற்றிய பாட்டுக்கள் மூலமும் தம்மவரிடையே சிந்திக்கும் உணர்ச்சியை எழுச்சி பெறச்செய்து தீண்டாமைக்கு சாவு மணி அடித்த சமூகப் புரட்சியாளரும் ஆவார். அமரர் சி.தர்மகுலசிங்கம் (ஜெயம்) அவர்கள் இறந்தபோது அவர்களைப்பற்றி தானே இயற்றி தானே பாடிவரும் “எங்கள் அருந்தலைவர் தர்மகுலசிங்கம் மறைந்தாரே எங்கு சென்று தேடினும் அவர் போல் தங்கம் கிடைக்காதே” என்ற பாடலும், “எட்டினில் கோவிலில் என்பார், தம்பி கிட்ட வந்து கள்ளை வாரென்பார்” என்ற பாடலும் மிகப் பிரசித்தி பெற்றவை. இத்தனை சிறப்பும் ஒருங்கே கைவரப் பெற்றவர் கலாவினோதன் அண்ணாசாமி ஆசிரியர் அன்றி வேறு யாரும் இல்லை. இலங்கையின் பல பாகங்களிலும் பல மேடைகள் ஏறி பார்ப்பவரை பரவசமடையச் செய்து எதிர்ந்து மேடை தாங்கியோரை வியர்த்து, வெட்க வைத்து வெற்றி விருதுகள் பல பெற்ற கற்றவர் மதிக்கும் கலைஞர் அமரர் கலாவினோதன் எம்.பி. அண்ணாசாமி.

*எஸ்.கே.இராசேந்திரன்.*

# உடற்தகைமைகளுக்கூடாக உளத்தகைமை


"ஆரோக்கியமான உடலில் தான் ஆரோக்கியமான உள்ளம் குடியிருக்க முடியும்" பிரபல உளவியலறிஞர் கூற்று. இயந்திரமயப்பட்ட இன்றைய நாட்களில் பொருளாதார இலக்கு நோக்கியே ஒவ்வொரு மனித இயக்கமும் நிகழ்கிறது. தொழில்களும் உடலியக்கம் சம்பந்தப்பட்டு இருப்பதைவிடவும் தொழில்நுட்பத்திறனுடன் கூடிய இயந்திரமயப்பட்டதாகவே அதிகம் காணப்படுகிறது. அத்துடன் அறிவு நிலைப்பட்ட திறன் சார்ந்த தொழில்களாகவும் காணப்படுகிறது.மாணவப் பருவத்தினரைப் பொறுத்தவரை பாடசாலைக் கல்வி, ரியூசன் கல்வி, இரவில் பிரத்தியேக வகுப்புக்களுக்கென அவர்களது நாட்கள் நகர்கின்றன.

பொதுவாகக் காணப்படும் இப்போக்குக்காரணமாக உடலை ஆரோக்கியமாகவோ திடமாகவோ பேணமுடியாத நிலையேற்படுகிறது. உடல் தளர்தல், பருத்தல், நோய்கள் ஏற்படல், சோம்பல், மனச்சோர்வு போன்ற பக்க உடல் உள நிலைகள் ஏற்பட ஆரம்பிக்கின்றன. வைத்தியச் செலவுகள் அதிகரிப்பதுடன் வினைத்திறனற்ற செயற்பாடுகளும் திருப்தியற்ற மன நிலையும் உருவாகின்றன.

விஞ்ஞான தொழில்நுட்பத் திறன் வளர்ச்சி, நாகரிக மாற்றங்கள் என்பன மேற்குமயப்பட்ட சிந்தனைப்போக்கு பழக்கவழக்கங்களிற்கூடாக நோக்கப்படுமொன்றாகவும் மாறிவிட்ட நம்மவரின் வாழ்வியக்கம் உடலையும் மனத்தையும் பற்றி சிந்திப்பதென்பது அரிதாகிவிட்ட சூழ்நிலை காணப்படுகின்றது.


இவ்வடிப்படையில் நோக்குமிடத்து எமது பிரதேசங்களில் உடல் வலுவூட்டல் நிலையங்கள் பொழுது போக்குமையங்கள் அமைக்கப்படவேண்டிய தேவையுள்ளது. இயந்திரமயப்பட்ட வாழ்வோட்டத்தில் கிடைக்கின்ற ஒரு சிலமணி நேரத்தில் உடல் வலுவூட்டல் நிலையங்களில் பல்வேறு உபகரணத் தொகுதிகள் மூலம் உடலின் ஒவ்வொரு பகுதிக்குமுரிய வலுவூட்டல் பயிற்சிகளை மேற்கொள்ளமுடிகிறது.

கிளிநொச்சி நகரில் இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தினூடாக கேணல் சங்கர் உடல் வலுவூட்டல் நிலையம் இயங்கி வருகிறது. இதில் பெரும்பாலும் அனைத்து வலுவூட்டல் உபகரணத் தொகுதிகளும் காணப்படுகிறது. மாணவர்கள், உத்தியோகஸ்தர்கள், இளைஞர்கள், விளையாட்டுவீரர்கள் எனப் பலரும் இதனைப் பயன்படுத்துகின்றனர்.



கேணல் சங்கர் உடல் வலுவூட்டல் நிலையத்தில் பயிற்சியிலீடுபட்டுக்கொண்டிருந்த சிலரைச் சந்தித்து பயிற்சியின் நோக்கம் பற்றி உரையாடியபோது,

உயர்தர மாணவர் ஒருவர்-"நான் வாழ்க்கைக்காலம் முழுவதும் வைத்தியசாலை போகக்கூடாது என நினைக்கிறேன். மேலும் படிக்கும்போது சோம்பலின்மையையும் புத்துணர்ச்சியையும் பெறுகின்றேன்" என்றார்.



இரு கால்களும் விழுப்புண் அடைந்த போராளி ஒருவர் "நான் 6மாத காலமாக ஈடுபடுகின்றேன். உடல் மிகுந்த கட்டுக்கோப்பாகவும், உறுதியாகவும் மாறி வருகிறது. இதனால் எனது பணிகளை சுறுசுறுப்பாக செய்ய முடிகிறது" என்றார்.

நகைத் தொழில் செய்யும் இளைஞர் ஒருவர் "நான் வேலை முடிந்து வந்து பயிற்சியிலீடுபடுகிறேன். எனது தொழில் நுணுக்கமானது உடல் தொழிற்பாடு குறைவாகக் காணப்படுவதால் உடல்பருத்து கட்டிழந்து போவதை உணர்ந்த பின்புதான் இப் பயிற்சியிலீடுபடுகிறேன்" என்றார்.

உங்கள் வயது இளைஞர்கள் இந்நிலையத்தில் ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப்படுகின்றனரே எனக் கேட்டபோது "எனது வயதையொத்த இளைஞர்களிற்கு நிறையபொழுதுபோக்குகள் இருக்கும். அவர்களில் சிலர் சிலவேளைகளில் தீய பழக்கங்களிற்கு ஆட்பட்டுப்போவதுடன் நிறையப் பணத்தையும் செலவழித்து உடலையும் கெடுத்து வருகின்றனர்"

இவருடைய கருத்து தொடர்பாக கேணல் சங்கர் உடல் வலுவூட்டல் நிலையப்பயிற்சி ஆசிரியர் திரு தேவராசா அவர்களை வினவியபோது "அது உண்மைதான் இளைஞர்கள் புற ஆடம்பரத்திற்காகவும் அழகுபடுத்தலிற்காகவும் அதிக நேரத்தையும் பணத்தையும் செலவு செய்கின்ற அதேவேளை உடலையும் கெடுத்து வருகின்றனர். இவ்வாறான பயிற்சியிலீடுபடுவதன் மூலம் அவர்களது உடல் ஆரோக்கியமும் கட்டுக்கோப்பும் அடைவதுடன் மனமும் புத்துணர்ச்சி அடைகிறது. இதனால் இளையவர்கள் தங்கள் உடல் மீது அதிக கரிசனை காட்டத்தொடங்குவர். இதனால் தீயபழக்கங்கள், சமூகச் சீர்கேடான விடயங்களில் ஈடுபடுத்தி உடலையும் மனதையும் கெடுக்காது தமது திறன்களை உரிய வகையில் வளப்படுத்துகின்றனர்" என்றார்.

மூத்த வீரர் ஒருவருடன் கதைத்தபோது இப்பயிற்சிகள் ஒவ்வொரு விளையாட்டு வீரர்களிற்கும், வீராங்கனைகளிற்கும் அவசியமானதொன்றாகும். ஒவ்வொரு விளையாட்டிற்கும் முக்கியமான அடிப்படைத்திறன்கள் தேவையாக அமைகிறது. அதாவது,

01.வேகம் Speed
02.சக்தி-வலு Streanth
03.தாங்குமியல்பு Endurance
04.நெகிழ்ச்சித்தன்மை Flexibility
05.உடற் சமநிலை Bodybalance

மேற்படி ஒவ்வொரு திறன்களினையும் விருத்தி செய்வதற்கான ஒவ்வொரு உபகரணத்தொகுதிகளை இவ்வலுவூட்டல் நிலையங்களினூடாக பயன்படுத்த முடிகின்றது. மேலும் மேற்படி 05 திறன்கள் மூலம் ஒருவரது உடற்தகைமை வளர்ச்சியடைகிறது.

இளையோர் தங்கள் உடலின் தோற்றம், தசைகள், உயரம், நிறை போன்றவற்றில் அதிககவனம் செலுத்துவர். அவர்கள் உடற் தகைமையை விருத்தி செய்வதன் மூலம் அதிக அனுகூலங்களைப் பெறுகின்றனர். அதாவது,

★குறைந்த பிரயாசத்துடனும், உயர்வினைத்திறனுடனும் உடலியக்க ஆற்றலை பயனுறுதியாக்க, தேவையானவாறு செயற்பட தசைத் தொகுதியை வளர்த்தல்.

★மூட்டுக்களில் நெகிழும் தன்மை அதிகரித்தல்.

★விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ள உடனடியாக செயற்படும் ஆற்றலை விருத்தி செய்தல்.

★தேவையற்ற தசைவளர்ச்சியை தவிர்த்து சீரான உடற் தோற்றத்தை ஏற்படுத்தல்.

★கொழுப்பு இழையங்கள் படிவுற்று உடல்பருப்பதைத் தவிர்த்தல்.

★குருதி வழங்கல் வினைத்திறனுடன் நடைபெறுவதால், சருமம் பளபளப்பாகவும் உடல் ஆரோக்கியமாகவும் காணப்படும்.

★உடலின் ஆரோக்கியம் உளத்தின் அல்லது மனதின் ஆரோக்கியம் என்பது ஒன்றிலொன்று தங்கியிருப்பதென்பதை இன்று யாவரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

இளையவர்களின் தேவைகள் உளப்பருவத்திற்கேற்ப நிறைவு செய்யப்படுகின்றபோது அவர்கள் நெறிதவறி தீயபழக்கங்களில் ஈடுபடுதல் சமூகச் சீர்கேடுகளில் ஈடுபடுதல் போன்ற எதிர்வகை செயற்பாடுகளில் ஈடுபடுவதை விடுத்து நேர் வகையான சிந்தனைப்போக்கில் தமது பார்வைகளை செலுத்த முற்படுகின்றனர். அதற்கு கல்விச்சாலைகள், அறிவுக்கூடங்கள் சார்ந்த அறிவுசார் நடவடிக்கைகளுடனும் கலை, இலக்கியம், அரங்கு சார்ந்த பண்பாடு சார் செயற்பாடுகளுடனும் சமாந்தரமாக மைதானங்களும், உடல் வலுவூட்டல் கூடங்களும்,பொழுதுபோக்கு மையங்களும் பூரண ஆரோக்கியகரமான மனிதனை உருவாக்குவதில் பங்கெடுக்கின்றன என்பதை யாவரும் மனங்கொள்ளவேண்டும்.

**ப.ஜோயல் பியசீலன்**



# எனக்கு விருப்பமில்லை

இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் பதவிக்கு ஆசைப்படவில்லை என்று அதிரடி வீரரும், துவக்க வீரருமான வீரேந்திர சேவாக் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியின் நட்சத்திர வீரரான வீரேந்திர சேவாக் சமீப காலங்களில் தனது அதிரடி ஆட்டத்தால், பவுண்டரி, சிக்சர் என்று விளாசி கிரிக்கெட் ரசிகர்களின் மனதில் மங்கா இடம் பிடித்தவர். கடந்த வருடம் இந்திய கிரிக்கெட் அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டது. அப்போது பாகிஸ்தானிற்கு எதிராக இந்தியா 4 டெஸ்ட் மற்றும் 5 ஒரு நாள் போட்டிகளில் பங்கு கொண்டது. நீண்ட கால இடைவெளிக்குப் பிறகு நடந்த இந்தத் தொடரில் இந்திய அணி டெஸ்ட் மற்றும் ஒரு நாள் தொடரைக் கைப்பற்றியது.

அந்தத் தொடரில், வீரேந்திர சேவாக், ராகுல்டிராவிட் மற்றும் டெண்டுல்கர் ஆகியோர் ஆபாரமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர்.

பாகிஸ்தானிற்கு எதிராக முல்தானில் நடந்த முதலாவது டெஸ்ட் போட்டியில் வீரேந்திர சேவாக் 309 ஓட்டங்களைக் குவித்து சாதனை படைத்தார்.

இதன் மூலம் 300 ஓட்டங்களை டெஸ்ட் போட்டியில் கடந்த முதல் இந்திய வீரர் என்ற பெருமையையும் சேவாக் பெற்றது குறிப்பிடத்தக்கது.

சமீபத்தில் பாகிஸ்தான் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் ஆடியது. அதிரடி வீரர் சேவாக், முன்னதாக நடந்த டெஸ்ட் போட்டிகளில் சிறப்பாக ஆடி ஓட்டங்களை குவித்தார்.

இந்தத் தொடர் முடிந்து பாகிஸ்தான் அணி நாடு திரும்பியதும், பாகிஸ்தான் அணியின் தென்னாபிரிக்க பயிற்சியாளரான பாப் ஊல்மர் எழுதிய கட்டுரையில் சேவாக்கின் ஆட்டத்தை வெகுவாகப் புகழ்ந்து எழுதினார்.

அதில் சேவாக்கின் ஆட்டம், புகழ்பெற்ற அவுஸ்திரேலிய வீரரான டொனால்ட் பிரட்மேனை நினைவுபடுத்துவதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

மேலும், சேவாக் ஷாட் அடிப்பதற்காகப் பந்துகளை தேர்ந்தெடுக்கும் விதம் மற்றும் அவரது டைமிங் ஆகியவை மிக கச்சிதமாக இருப்பதாகவும், சிறந்த கிரிக்கெட் வீரருக்கான அனைத்து தகுதிகளும், அவருக்கு இருப்பதாக பாராட்டியிருந்தார் ஊல்மர்.

பாகிஸ்தானிற்கெதிரான ஒரு நாள் தொடரில் 4ஆவது போட்டியில் கப்டன் கங்குலி மெதுவாக பந்து வீசிய குற்றச்சாட்டிற்கு ஆளானதால் ஐ.சி.சி அவருக்கு 6 ஒருநாள் போட்டிகளில் விளையாடத் தடை விதித்தது.

எனவே 5ஆவது போட்டி மற்றும் 6ஆவது போட்டியில் கப்டன் கங்குலி கலந்துகொள்ளவில்லை. அவருக்குப் பதிலாக ராகுல் ராவிட் தலைமை தாங்கினார். இதற்கிடையே அதிரடி வீரரான வீரேந்திரசேவாக் இந்திய அணியின் கப்டன் பதவிக்கு ஆசைப்படுவதாக பரவலாகப் பேசப்பட்டது.

இந்திய அணியின் புதிய பயிற்சியாளராகப் பொறுப்பேற்ற கிரேக் சப்பல், சில தினங்களுக்கு முன்பு "கப்டன் பதவிக்கு ஆசைப்படக்கூடாது இதனால் துடுப்பாட்டம் திறமை பாதிக்கப்படும் என்று சேவாக்கிற்கு எச்சரிக்கை விடுத்திருந்தார்.


அணியின் தொடக்க வீரரான வீரேந்திர சேவாக் நேற்று மும்பையில் அளித்த பேட்டியில் இது குறித்து கூறியபோது, இந்திய அணியின் கப்டன் பதவி மீது எனக்கு ஆசை எதுவும் கிடையாது. கங்குலி டிராவிட் மற்றும் டெண்டுல்கர் ஆகிய மூத்த வீரர்கள் உள்ளனர். எனவே நான் தொடர்ந்து துடுப்பாட்டத்தில் கவனம் செலுத்துவேன்" என்றார் அவர்.

செஞ்சிலுவைச்சர்வதேச குழுவானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள நபரைத் தமது கிளிநொச்சி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறது.

பெயர்:திருமதி.தேவேந்திரகுமார்நந்தகுமாரி,
இறுதியாக வசித்த இடம்: வவுனியா.

றசெல் பேண்ஹாட்.
உப பேராயத் தலைவர்.
ஐ.சி.ஆர்.சி - கிளிநொச்சி.

(6209)




சென்றவாரம் இரசாயன உரப்பாவனையில் எமது மண்ணுக்கும், நீருக்கும் பொதுவாக சூழலுக்கும் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பான சில குறிப்புகளைப்பார்த்தோம்.

சூழலைப்பாதிக்காத சூழல் மாசடைவதைக்குறைக்கக் கூடிய ஒருமுறையாக சேதனப்பண்ணையாக்கம் விவசாய நிபுணர்

## எங்கள் பொருண்மிய வளம்

சிதம்பரதிரு

களால் சுட்டிக்காட்டப்படுகின்றது.

சூழவுள்ள இயற்கை வளங்களை மாத்திரம் பயன்படுத்தி விவசாய நிலத்தின் வளத்தை அதிகரிக்கச் செய்து அதன் ஊடாக உற்பத்தியை மேம்பாடு அடையச் செய்ய முடியும்.

இதன் காரணமாக சூழலுக்கு கேடு விளைவிக்கும் இரசாயனஉரங்கள், களைகொல்லிகள், பீடை நாசினிகள்



என்பவற்றின் பாவனை இயலுமான வரை ஒதுக்கப்படுகின்றது. அதற்குப்பதிலாகசேதனப்பொருடகளை மண்ணுக்கு இடுவதன் மூலம் மண்ணுக்கு வளம் சேர்க்கப்படுகின்றது. அதாவது இயற்கையாகக் கிடைக்கும் இயற்கைப்பசளை, குப்பைகள் இயற்கைக்கழிவுகளான சாணம் போன்றன மண்ணுக்குள் சேர்க்கப்படுவதால் மண்வளம் பெறுவதன் ஊடாக நீரைச் சேமித்து வைக்கும் ஆற்றலும் மண்ணுக்கு உண்டாகின்றது.

சேதனப்பண்ணையாக்கம் மேற்கொள்வதற்கு விவசாய நிலத்தின் மிகச்சிறிய ஒரு பகுதியே போதுமாகும். கூட்டுப்பசளை, பச்சைப்பசளை, கலப்புப்பயிர்ச்செய்கை, சுழற்சிமுறைப்பயிர்ச்செய்கை, மூடுபடை, விலங்குகளை விவசாய நிலங்களில் மேயவிடல், தாவரச்சாறுகள் போன்றவற்றின் ஊடாக விவசாயநிலம் வளமாக்கப்படுகின்றது.

வளமாக்கலுடன் இயற்கையான களைக்கட்டுப்பாட்டுக்கும் பீடைக்கட்டுப்பாட்டுக்கும் இந்தச் சேதனப்பண்ணையாக்கச் செயற்பாடு உதவுகின்றது.

இவை ஒரு சில அறிமுகக் குறிப்புகளே. உங்கள் பகுதி விவசாய போதனாசிரியர்களுடன் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதன் ஊடாக எங்கள்/உங்கள் மண்ணை பாதுகாக்க முனைவோமாக.

# கமுகுச் செய்கையில் நிகர இலாபம் பெறும் விவசாயி

முல்லை மாவட்டத்திலே விசுவமடுப்பகுதியில் கமுகுச் செய்கையில் ஈடுபட்டு நிகர இலாபத்தைப் பெறும் விவசாயி திரு.மகாலிங்கம் அவர்களைச் சந்தித்து உரையாடியபோது அவர் கூறுகையில்,

சாவகச்சேரியில் உள்ள மந்துவில் கிராமத்தைச் சேர்ந்தனான். எனது பெயர் மகாலிங்கம். எனக்கு ஆரம்பத்தில் விவசாயம் சம்பந்தமான அனுபவம் கிடையாது. நான் க.பொ.த.சாதாரணதரப்பரீட்சை எடுத்துவிட்டு இருந்தேன். அந்தக் கால கட்டத்தில எனக்கு கமநல சேவைத் திணைக்களத்தில் 1965 ஆம் ஆண்டு முற்பகுதியில் காவலாளி வேலை கிடைத்தது. அங்கே சேவையாற்றும்போதுதான் அறிந்தேன். விசுவமடு என்ற இடத்தில் காணி வழங்கவுள்ளதாக; அதற்கு விண்ணப்பம் செய்தேன். அதன் மூலம் கிடைத்ததுதான் இந்தக் காணி. என்னோடு சேர்ந்து 30 வாலிபர்கள் விசுவமடுவுக்கு வந்து சேர்ந்தோம். எல்லோரும் காடுகள் வெட்டி, கட்டைபிடுங்கி துப்புரவு செய்தோம்.

இக்காணிகளில் முதன் முதல் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டது என்றால் மிளகாய்ச் செய்கைதான். இந்தக்காலத்தில செத்தலுக்கு நல்ல கிராக்கி இருந்தது. இதனால் சகல விசுவமடு விவசாயிகளும் இதையே பயிரிட்டனர். வேறுசில உப உணவுப் பயிர்களும் பயிரிட்டோம்.

அரசியல் சூழ்நிலை மாற்றத்தால் செத்தல் மிளகாய்க்கு வீழ்ச்சி ஏற்பட்டது. இந்தியாவில இருந்து மிளகாயை அரசாங்கம் இறக்குமதியும் செய்தது. விவசாயச் செய்கையில் ஈடுபடமுடியாத நிலை ஏற்பட்டதால உப உணவுப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டேன்.

ஆனால் கமுகு மரம் என்னிடம் மூன்று மரம் மட்டுமே இருந்தது. இந்த மூன்று மரமும் நல்ல வருமானம் தரத் தொடங்கியதால் நான் யோசித்தேன் இன்னும் கமுகு நட்டால் நல்ல பயனைப்பெறலாம் என்று. இதன் பின் இந்த மூன்று மரங்களிலும் கிடைக்கிற பாக்குகளை எடுத்து மேடை போட்டு 45 நாட்களால் முளை வந்ததும் எடுத்து நட்டேன். முளை வந்தவுடன் நட்டதால அடையாளம் காண அந்தந்த இடங்களுக்கு தடி நட்டு நீர் ஊற்றி வந்தேன். புல்லுகள் செதுக்கும்போது வெட்டுப்படாமல் இருக்க இந்தத்தடிகள் உதவியாக இருந்தன.

வாழை, தென்னை போன்ற வேறு பயிர்களுக்கு முதலீடு அதிகம் தேவை. கூலி ஆட்களும் தேவை. கமுகுக்கு முதலீடு இல்லை. கூலியாட்களும் தேவையில்லை. சொந்த முயற்சியிலே இதைச்செய்யலாம்.

கமுகில் கிடைக்கிற பாக்குகளை பாத்தி போட்டு காலத்துக்கு காலம் மேடை போட்டு கொஞ்சம் கொஞ்சமாக நட்டு 3 ஏக்கரிலும் தற்போது கமுகு பயிரிட்டு விட்டேன். இப்போ வீட்டில் இருந்தபடியே பாக்குகளை வியாபாரிகள் வந்து கட்டிக் கொண்டு போகிறார்கள். நாற்றுகள் போட்டு கன்றுகளும் விற்கிறேன். இதனால் எனக்கு நிகர இலாபம் கிடைக்கிறது.

என்னுடைய கமுகு மரத்தில் பெறப்படுகின்ற பாக்குகள் நல்ல இனப்பாக்குகள் ஆகும். பெரிய பாக்குகள் நோயில்லாத கயரில்லாத பாக்குகள் எவரும் வந்து விரும்பி வாங்குவார்கள்.

பாக்கு மரத்தை நட விரும்புபவர்கள் பாக்குகள் முளை வந்தவுடன் நட்டு பராமரித்தால் குறுகிய காலத்திலே வருமானம் தரத்தொடங்கும். மேடையில் 2-3 மாதங்களுக்கு பிறகு பிடுங்கி நட்டால் நீண்ட காலத்திற்குப் பிறகே பயன் தரத் தொடங்கும். இந்த இரண்டு நாற்றுக்களின் வித்தியாசத்தை எனது அனுபவம் மூலமே கண்டறிந்தேன். முளையில் நடும் பாக்குக் கன்றின் வேர்களின் பிடி, மரத்தில் ஊக்கம் கூட இதே நேரத்தில வீரியமாக வளரும். வளர்ச்சி வேகம் கூடும். மிக விரைவில் பயன்தரத் தொடங்கிவிடும். பராமரிப்பு என்றால் களை அகற்றி தண்ணீர் இறைப்பது மட்டுமே. கமுகுச் செய்கைக்கு ஈரப்பதன் அவசியமாகும்.

வருமானம் ஒரு பாக்கு 1 ரூபாய் முதல் 5 ரூபாய் வரையும் விலை ஏற்றம் இருக்கு. சிலவேளைகளில் 1ரூபாவுக்கு வியாபாரி பாக்கை கொள்வனவு செய்வார். சிலவேளை 5ரூபாவுக்கும் கொள்வனவு செய்வார்கள். இதனால் எனக்கு அதிக இலாபம் கிடைக்கும் நட்டம் ஏற்படாது. கமுகுச்செய்கைக்கு பசளையைப்பொறுத்த மட்டில் அதிகமாகத் தேவையில்லை. மாடுகள் இருக்குமாயின் கமுகம் மரத்திலே மாடுகளை கட்டி அவிட்டால் சாணம் சலம என்பன கமுகுக்குச் சேருகின்றன. இதனால் பெரிய பாளைகள் வந்து குலை குலையாக பாக்குகள் தொங்கும். உலர் பருவ காலங்களில் நீர் இறைத்தால் போதும். அடி உரமும் போடலாம். நான் போடுவதில்லை. மாடுகளை மட்டுமே கட்டிக்கட்டி விடுவேன்.

ஒரு குறிப்பிட்ட காலத்தில் அதாவது ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் பாளை வருமாயின் சித்திரை,வைகாசி, மாதத்தில் 1பாக்கு 8ரூபா, பத்து ரூபாவுக்கும் போகும். அப்போது நல்ல இலாபம் கிடைக்கும். இடைக்காலங்களில் பொத்தி வாறது குறைவு. வந்தால் அதிஷ்டம் தான்.

உரம் என்று கமுகுக்குப் போடுவதாயின். V-1 போடலாம். நீர் வளம்தான் முக்கியம். நான்கு நாட்களுக்கு ஒரு தடவை நீர் இறைக்க வேண்டும். பரவலாக நீர் இறைத்தால் போதும் 3 வருடத்தில் பயன் தரும்.

கமுகுச் செய்கைக்கு வளமான மண்ணாக இருந்தால் வீரியமாக வளரும். வளம் குறைந்த மண்ணாயின் கூட்டெரு அல்லது மாட்டெரு போட்டால் நன்கு செழித்து வளரும். நான் வலியுறுத்திக்கூறுவது என்னெண்டால் நீர் இறைத்தல் முக்கியம் என்பதுதான். வரட்சி ஏற்படுமாயின் கமுகம் பாளை சிறுக்கத் தொடங்கி விளைவு குறையும். பிஞ்சிலேயே பாக்குகள் வாடிக்கொட்டும். இதனால் நீர் முக்கியம் என்று சொல்லுறன்.

இப்ப முல்லை மாவட்டத்தில பெரும்பாலும் கமுகுச் செய்கையில ஈடுபடுகிறார்கள். என்றைக்குமே கைவிடாத பயிர் தான் கமுகு.

தற்போது சந்தையிலே பாக்கின விலை 1kg -150/= 200/= போகுது. 1kg வில் 60 பாக்குவரும். நான் இந்த பயிர்ச்செய்கையில் 15 வருடங்களாக ஈடுபட்டு வருகின்றேன் என்றார்.

சிவகமலா

(02 பக்கத் தொடர்ச்சி)

ஒருவனிடம் மட்டும் தேங்கிக் கிடப்பதும் அறிவல்ல! தன்னை வளர்த்துக் கொண்டு, தான் சார்ந்த உலகையும் வளர்ச்சியை நோக்கி உந்தித்தள்ளும் ஊக்கவிசை அது! 'தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு, காமுறுவர் கற்றறிந்தார்' என்ற குறளும் இந்த வகையிலேயே கல்வியின் பண்பை எடுத்து விளக்குகின்றது. ஆக இருளை நியாயப்படுத்துவதல்ல அறிவியல் மாறாக இருளின் காரணங்களை அறிந்திடுவதற்கான ஒளியை நோக்கிய நகர்வே அறிவியல் ஆகும். அவ்வாறானதொரு நகர்விலே உலகின் ஒவ்வொன்றையும் பௌதீகச் சிந்தாந்தத்தின் அடிப்படையில் காண்பதே, மனித இனத்தை முன்னோக்கி நகர்த்திச்செல்லும். இங்கு பௌதீகச்சித்தாந்தம் என்று வரையறைக்குட்பட்ட 'குறித்த ஒன்று' மட்டும் பேசப்படவில்லை. நிகழ்வுகளுக்கான காரணங்களை அவற்றின் இயங்கியல் அடிப்படையில் விளங்கிக்கொள்வதற்கான, தொடர்ச்சியான தேடலே வலியுறுத்தப்படுகின்றது. ஆமாம், ஏன் இந்த வலியுறுத்தலுக்குச் செவிசாய்க்க வேண்டும்? நியாயமான கேள்விதான்!

உலகின் பழம்பெரும் நாகரிகங்கள் நான்கில் நமக்குச் சொந்தமான சிந்துவெளிசார் நாகரிகம் இற்றைக்கு 4000 ஆண்டுகளுக்கு முன்னர் ஒப்பீட்டளவில் மிகவும் மேம்பட்ட நிலையில் இருந்தது. இதேபோலவே கிரேக்க நாகரிகமும் மிகவும் சிறந்து விளங்கியது. கிரேக்க நாகரிகத்தின் அறிவியல் தேட்டத்தினால் ஐரோப்பிய நாடுகள் யாவும் இன்று பயனடைந்துள்ளன. மெசொப்பொத்தேமிய நாகரிகத்தின் வழித்தோன்றலாகிய ஈராக்கும் உலகின் ஒட்டுமொத்த நெருக்குவாரங்களுக்கு மத்தியில் கேள்விக்குள்ளாகிப் போய்விட்டாலும், அதற்கு முன்பு வளர்ச்சியடைந்தே காணப்பட்டது. காலத்தால் சற்றுப் பிந்தினாலும் சீன நாகரிகமும் இன்று வலுவானதொரு பொருளாதார, ராணுவ நிலைக்கு அதனை இட்டுச்சென்றுள்ளது. ஆனால், நைல்நதியை ஒட்டிய எகிப்தின் நிலையைப் பாருங்கள் ! அரச பரம்பரையினரின் கல்லறைக்காக அந்நாளிலேயே 2 லட்சம் தொழிலாளர்கள் 30 வருடங்களுக்கு மேலாகக் கட்டிய் பிரமிட்டுகள் உலக அதிசயமாகவேண்டுமானால் இருக்கலாம். அதனால் எகிப்தியர்களுக்கு ஆன பயன் என்ன? எகிப்தின் வரண்ட பாலைவனப் பகுதிகளில் நைல்நதிப் படுக்கைகளால் பசுமைப் புரட்சியை ஏற்படுத்துவதற்கான 'அசுவன்' அணைக்கட்டுத் திட்டத்தின் அவசியம் கடந்த நூற்றாண்டின் மத்தியிலேதான் உணரப்பட்டது. எகிப்தை விட மோசமான நிலையில் நாங்கள் உட்பட சிந்துநதி வழிநாகரிகத்தோன்றல்களாகிய சகல நாடுகளும்! மிக நீண்ட ஆன்மீகப்பாரம்பரியத்தைக் கொண்டவர்களாக எம்மை நாம் தட்டிக்கொண்டாலும், இன்றும் ஆன்மீகத்தின் பேரால் ஏமாற்றப்படுபவர்களில் முதன்மை வகிப்பவர்களும் நாமல்லவா? பல்லாயிரம் ஆண்டுகளாக நாம் பெற்றதாகச் சொல்லப்படும் ஆன்மீகத்தில் அனுபவ முதிர்ச்சி அடைந்ததற்கான எந்த அறிகுறியையும் எம்மிடம் காணமுடியாமல் இருப்பதற்காக காரணம் என்ன? குறை ஆன்மீகத்தில் அல்ல! தேடல் குறித்த தேடலில் ஏற்பட்ட தேக்க நிலையே நம்மைத் தாழ்விற்கு இட்டுச் சென்றிருக்க வேண்டும். எத்தனையோ உழைப்பாளிகளின் வியர்வையில் உருவாகிய குளங்களை எந்தவிதச் சிந்தனையுமின்றி, 'பூதங்கள் வெட்டிய குளம்' என அடித்துக்கூறிக் கொண்டு, அவற்றின் பயனை அனுபவித்து வருகிறோம். இணையத் தளம் மூலம் திருப்பதியில் இறைவனுக்கு Graphics animation மூலம் பூசை செய்து, தேங்காய் உடைத்து வழிபடும் நாம், அதே இறையை இயற்கையின் ஆத்மார்த்தமான புதிரின் இயல்பான இயங்கு சக்தியாகக் காண விழையாமல், அச்சுறுத்துவதற்கான ஒரு சக்தியாகச் சிலர் காட்ட முனைகிறார்கள். சிலர் தாம் தாம் சார்ந்த தன்னல சுபீட்சத்திற்காக இறையியலைக் கருவியாகக் கொள்கிறார்கள். எப்பொருள் யார்யார்வாய் கேட்பினும், அப்பொருளின் மெய்ப்பொருள் காண்பதற்கு விழைய வேண்டிய நாம், எப்பொருள் எவர்வாய்வழி கேட்பினும், அப்பொருளே மெய்ப்பொருள் என ஆதரிக்கத் தலைப்படுவது ஆபத்தானதல்லவா!

ஆகவேதான் அன்பானவர்களே! சர்வதேச அளவில் பௌதீக ஆண்டாகப் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் இந்த ஆண்டை விழிப்பிற்குரிய காலமாக நாம் கைக்கொள்வோம். எதுவாயினும் ஆதாரங்களற்ற அரைகுறை வியாக்கியானங்களோடு திருப்தி கண்டுவிடாமல் அறிவுத்தேடலில் ஈடுபடுவோம். வெறுமனே அறிவியலை நுகர்பவர்களாக இருந்துகொண்டு, பிற்போக்குகளை ஆதரிப்பது, உணர்வுகளை மதிக்காமல், உடலினைப் புசிப்பதைப் போன்று அநாகரிகமானது. ஆகவே ஒட்டுமொத்த நல்வாழ்விற்கு ஆதாரமாக இருக்கக்கூடிய புதிய பார்வைத்தளத்திற்கான பயணக்காலமாக இந்த ஆண்டை மனதில் இருத்துவோம். முனைப்பு, தன்னம்பிக்கை, முயற்சி என்றியங்கும் உலகில் சமூக உணர்வு என்பதையும் கலந்து எஞ்சிய 7 மாதங்களையும் எம் வளர்ச்சிக்கான ஏணிப்படிகளாக்குவோம். ஒற்றை மனிதர்கள் பலரின் முயற்சியிலே உலகம் எத்தனையோ அசாத்தியமெனக் கருதத்தகும் மாற்றங்களைக் கண்டிருக்க, ஒட்டுமொத்தமாய் நாங்கள் அனைவரும் எழுந்தால், நிச்சயம் விரைவில் நிமிரலாம் என்பது உறுதியே!

17ஆம் பக்கத்தின் தொடர்ச்சியானது 22ஆம் பக்கத்தில் உள்ளது.

# 'சமஷ்டியா தனிநாடா' நூல் ஆய்வு முறையியலில் வித்தியாசமானது

அண்மையில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் எழுகலை இலக்கியப் பேரவையால் நடாத்தப்பட்ட "சமஷ்டியா தனிநாடா"மற்றும் 'இருபதாம் நூற்றாண்டின் உலக இலக்கியம்' ஆகிய நூல்களின் அறிமுக விழாவில் விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம் அவர்கள் "சமஷ்டியா தனிநாடா" நூலிற்கு ஆற்றிய அறிமுக உரை.






நான் இந்த நூலை நான்கு தடவைகள் படித்தேன். முதலில் இந்த நூலை வடிவமைத்த அறிவமுதுக்கு முதலில் நன்றி தெரிவிக்கவேண்டும். அத்தோடு இந்த புத்தகத்தின் அட்டைப்படம், தலைப்பு என்பன கூட தனித்துவமானவை. புத்தகத்தின் உள்ளுக்குள் பேசியதை வெளியில் பேசாமல் விட்டிருக்கிறது. அட்டைப்படம் எதனையும் பேசாமல் ஒரு தனிநாட்டுக்குரிய யதார்த்தத்தை சுயநிர்ணய உரிமைக்கான தேவையை நன்றாகவே வெளிப்படுத்துகிறது.

அந்தவகையில் இந்த நூலை அறிமுகப்படுத்துகின்ற விடயத்தில் இரண்டு விடயத்தை எடுத்துக்கொள்ள விரும்புகின்றேன். அதில் ஒன்று இந்த நூல் பற்றியது. மற்றயது இந்த ஆசிரியனுடைய முறையியல் பற்றியது.

இந்த நூலின் ஆறு அத்தியாயங்களிலும் சமஷ்டிக்கு கொடுக்கின்ற முதன்மையை இலங்கையினுடைய சமஷ்டிக்கு கொடுக்கப்படுகின்ற முக்கியத்துவத்தை ஒரு சர்வதேச அரசியல் தளத்திலும் சர்வதேசப் பொருளாதாரத்திலும் முழு உலகத்தினுடைய ஆதிக்கத்தின் போக்கு நிலையிலிருந்தும் இது சித்தரிக்கின்றது. அல்லது ஒழுங்குபடுத்தியிருக்கிறது. இதனுடைய போக்கு முற்றுமுழுதாக உலகளாவிய தளத்தில் சமஷ்டி எப்படி பேசப்பட வேண்டும் என்பதை மிகத் தெளிவாக அறிவு பூர்வமாக பார்த்திருக்கின்றது.

இந்தப் பார்வைக்கூடாக தென்னிலங்கைக்கு ஒரு செய்தியை சொல்லியிருக்கின்றது. அது எந்தச் செய்தி என்றால் எப்படியான சமஷ்டியை தமிழன் விரும்புகின்றான், எப்படியான சமஷ்டி இந்த தமிழனுக்கு உரித்துடையது என்பதனை இந்த நூல் காட்டியிருக்கின்றது. ஆகவே அந்தத் தளத்திலிருந்து தென்னிலங்கை சிந்திக்க வேண்டும். ஏனென்றால் தென்னிலங்கை இப்போது சமஷ்டி பற்றி சிந்திக்கத் தொடங்கி இருக்கிறது. அதாவது இரண்டு வாரங்களுக்கு முன் சமஷ்டி பற்றி ஒரு ஆய்வரங்கை நடத்தியிருக்கிறது. தமிழ்மாறன் அதனுடைய நூல் ஒன்றை மதிப்பீடு செய்திருந்தார். அதனுடைய சாராம்சம் பெருமளவுக்கு ஒரு சமஷ்டியை அரசமயப்படுத்தப்பட்ட ஒரு நிறுவனமயப்படுத்தப்பட்ட சட்ட நுணுக்கங்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்ட ஒன் றாகவே அவர்கள் சமஷ்டியை பேசியிருந்தார்கள். ஆனால் நிச்சயமாக நான் ஒன்றை கூறுவேன். இந்த நூல் எந்த ஒரு சட்டத்திலுள்ள தன்மைக்குள்ளேயோ அல்லது யாப்பியல் வரைப்பியலுக்குள்ளோ தன்னை அடக்கிக் கொள்ளவில்லை. இந்த நூலின் சிறப்பும் தனித்துவமும் அது தான். அதைவிட இந்த நூல் உலகத்தினுடைய பரந்த சனநாயகத்தை பற்றி பேசுகிறது. ஒருவகையில் இந்த நூலை வாசிக்கின்ற ஒரு மாணவன் தனியே சமஷ்டியை மட்டுமன்றி உலகத்தை உல கத்தின் அறிவை பற்றி ஆழமான கற்கையை எல்லாம் புரிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பு இருக்கின்றது.

சமஷ்டி என்பதுக்குள் புகுந்து கொண்டு தேசியவாதம் பேசுகின்றது. உலகமயமாக்கலை பற்றி பேசுகின்றது. சனநாயகம் பற்றி எல்லாம் பேசுகின்றது நான் நினைக்கிறேன் இந்த நூலுக்குள்ள தயார்ப்படுத்தல் என்பது நூலாசிரியரின் பார்வையில் ஒரு முதன்மை அத்தியாயம். முதன்மை தனித்துவம் என்பது அவருடைய நூல்கள் எல்லாவற்றுக்குமுரிய எனது பார்வையாகும்.

இந்த நூலின் மொழி நடை என்பது அது அவருக்கே உரியது. அவருடைய நடைக்கும் மொழிக்கும் ஒரே இயல்பு இருக்கின்றது சனநாயகம் பற்றி பேசுகின்ற போது ஓரிடத்தில் குறிப்பிடுகிறார். அதாவது "காப்பிய நாயக பண்பை அதிகம் கையிலேந்தும் கீழைத்தேசத்தின் சன நாயகத்திற்கான ஆத்மா மிகவும் வீரியமற்றதாகவே உள்ளது" மிக இலகுவாக ஒரு வசனத்தில் கீழைத் தேசத்தின் சனநாயக பண்பு எப்படியிருக்கின்றது என்பதை அவர் அப்படியே அக்கு வேறு ஆணி வேறாக வெளிப் படுத்திவிட்டார்.

அடுத்து இந்த நூலின் ஆய்வு முறையியல் பற்றி இனி நான் பேசவருகிறேன். இதை தான் நான் இங்கு அதிகம் வலியுறுத்தவும் எண்ணினேன். தமிழர்களுடைய வரலாற்றிலும் சரி தமிழர்களின் சுதந்திர வரலாற்றிலும் சரி அரசியலை அரசியல் நோக்கு நிலையில் இருந்து பார்க்கக்கூடிய ஒரு தனித்துவ மிக்க முறையியலை திரு நாவுக்கரசு அவர்கள் தான் முதன் முறையாக இந்த சமூகத்திற்கு வழங்கியிருக்கிறார் அந்த வகையில் நான் பார்த்த படைப்புகளில் ஒரு ஆய்வு முறையியலுக்குள் ஒரு சமூகத்தை இழுத்து வந்ததில் ஒரு சமூகத் தினுடைய தனித்துவத்தை வெளிப்படுத்தியதில் ஒரு கருத்தியல் மரபை எங்களுடைய சமுகத் திற்கென்று அதுவும் அரசியல் சார்ந்த கருத்துக்களைக் கொண்டு ஒரு தேசியத்திற்குரிய விழிப்பை உருவாக்குவதில் நூலாசிரியரின் பார்வை, அனுகுமுறை முதன்மையானது. நான் நினைக்கிறேன் அதுதான் தமிழர்களுக்கு அடிப்படையானதும் முதன்மையானதுமாக இருக்கவேண்டியது என்று.

அடுத்த இந்த ஆய்வு முறையியலுக்குள் எல்லோரும் நினைக்கிறார்கள். அதாவது உயர் கல்வி நிறுவனங்களில் இருப்பவர்கள் எல்லாம் இவ்வாறு தான் நினைப் பார்கள் ஒன்றை பார்த்து இன்னொன்றை படைப்பதனை மட்டும் அவர்கள் தங்களுடைய தொழிலாக மட்டும் கொண்டிருப்பார்கள். இந்த உயர்கல்வி நிறுவனங்களின் ஆய்வு முறையியலை எடுத்துப் பார்த்தால் தெரியும் ஒரே விடயத்தினைத் தான் திரும்பத்திரும்ப கூறுவார்கள். ஆனால் இந்த நூலின் ஆய்வு முறையியல் வித்தியாசமானது. முதன்மையானது.

பாதை திறப்பின் பின் சமஷ்டி பற்றி பேசியவர்கள் ஆயிரம் பேர்கள் இருப்பார்கள் அவர்கள் அனைவரும் சமஷ்டியை ஒரு அரச நிறுவன கட்டுமானத்திற்குள் நின்று சமஷ்டியை பார்ப்பது. ஆனால் இந்தத் தளம் இந்த அடிப்படைதான் இலங்கையினுடைய இனப்பிரச்சினையுடைய அடிப்படையும் நாடுகளுடைய தேசிய இருப்புகளிடைய அல்லது அரசுகளின் தேசிய இருப்புகளும் அதிகமான முரண்பாடுகளை ஏற்படுத்திய காரணி என்பதை இந்த நூல் தெளிவாக வெளிப்படுத்தி இருக்கிறது.



குறிப்பாக நூலாசிரியர் மாக்சிய கண்ணோட்டத்தின் தனித்துவத்தை அதிகம் விரும்புவர் நேசிப்பர் மாக்சிய இயல்புகளுக்குட்பட்ட வகையில் அவரது போக்கு எப்போதும் இருக்கும். மாக்சிய முறையினை பெருமளவுக்கு அவர் உள்வாங்கிய ஒருவராகக் காட்டிக்கொள்வார். நான் நினைக்கிறன் ஆய்வுமுறையியலுக்கு நவீன வடிவத்தை தமிழ்ச்சார்பு நிலையிலிருந்து வெளிப்படுத்துவதில் முதன்மையானவர்.

இறுதியாக நான் ஒன்றை கூறுகிறேன். அதாவது இந்த ஜனரஞ்சகமான சமூகத்தில் அல்லது அரசியல் தளத்தில் மக்களையும் அறிவியலையும் அறிவியல் பூர்வமாக இணைத்ததில் திருநாவுக்கரசுக்கு அதிக பங்கு உண்டு ஏனென்று சொன்னால் அரசியலை வெறும் மேடைக்குரிய, நாடாளுமன்றத்திற்குரிய அல்லது அந்த யதார்த்தத்திற்குரிய சூழல் என்ற நிலைகுள் இருந்த அந்த போக்கை முற்றாக குலைத்து அரசியல் என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் உரியதாகும். ஒரு மனிதனுடைய இயல்புகளுக்குட்படுத்தப்பட்டதாகும். என்பதை முதன் முதல் தமிழ் சமூகத்திற்குள் வெளிப்படுத்திய ஒரு ஆய்வாளர் என்ற வகையில் திருநாவுக்கரசு தனித்துவமானவர்.

ஆகவே அவருடைய பார்வை தனித்து ஒரு கோணத்தோடு சமஷ்டி என்ற, தனி நாடு என்ற நோக்கு நிலையில் இல்லாமல் முழுமையத்தினுடைய தெளிவுகளையும் எங்களுக்கு புலப்படுத்தி ஒரு தொகுப்பாக ஒரு முழுமைத் தன்மையை எங்களுக்கு ஏற்படுத்தி கொள்கின்ற ஒரு இயல்பை அவர் கொண்டிருக்கின்றார். அவர் வரலாற்றுடைய படைப்புகள் ஒவ்வொன்றும் வரலாறாக மட்டும் கருதாமல் வரலாறு என்பது தனிமனிதனுடைய விருப்புகளுடைய யதார்த்தங்களோடு உருவாக்கப்படவேண்டும். என்பதை அவர் அழுத்திக் கூறுகின்ற தன்மையின் அடிப்படையில் நான் இந்த நூலின் அறிமுகத்தை இத்தோடு நிறைவுசெய்கிறேன். அந்தவகையில் இந்த நூல் ஒரு புதியவரவு ஒரு தனித்துவமான வரவுஎன்பதை கூறி முடிக்கிறேன். மேலும் இந்த நூல் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் மொழி பெயர்க்கப்பட்டால் சிறப்பாக இருக்கும் எனவும் நினைக்கிறேன்.

---

## எதிரொலி

புலிகளின் விமானத்தளம் யுத்தநிறுத்தத்துக்கு ஆபத்தை ஏற்படுத்தாது-
"பி.கு சும்மா இருக்கும்வரை"

பிலிப்பைன்ஸில் ஊடகவியலாளருக்குத் தற்காப்புப் பயிற்சி வழங்கப்படுகிறது.
"சும்மாயில்லை சூட்டுப்பயிற்சி"

இராணுவத்தினரிடம் பாஸ் பெற்றே மீன்பிடிக்கவேண்டுமென அந்தச்சட்டம் கூறுகிறது.
-யாழ்.மீனவர்கள்
"பொதுமக்கள் பாதுகாப்புச்சட்டம் (ராணுவம்)

தமிழ் ஊடகவியலாளர்களின் கொலை விசாரணைகளில் முன்னேற்றம் ஏதுமில்லை-
"ஒளிக்கத் தெரியாதவன் தலையாரிவீட்டில ஒளிஞ்சானாம்"

இலவச உலர் உணவு வழங்க மீண்டும் நடவடிக்கை.
"சனம் உழைக்க வெளிக்கிட்டாப்பிரச்சினை"

பொன்னாலை கோயிலுக்குச் செல்ல பாஸ் பெறவேண்டுமென மக்களுக்குப் படையினர் கட்டளை.
"சாமியக் கும்பிட ஆமியின் அனுமதி"



## உளவியல் நவீனம்...

### அத்தியாயம்- 10

பகுதி -49

"கோயிலின்ர பின்பக்கம் அந்தா தெரியுது. பெரிய... பெரிய.. பெரிய... கோயில் வானத்த தொடுகிற கோயில். இசையெழுப்புற கோயில். நாலு மணி ஆன உடன ஒண்டு... இரண்டு... மூண்டு....நாலு.... என்று மணி யடிக்கிற கோயில். பெரிய கோயில் அதச் சுத்தி நிறைய தடிகள் நட்டிருக்கு. அங்க ஆக்கள் போறவை...." என்றான். நீண்டதொரு அமைதியான இடைவெளி தொடர்ந்தது. பின் அவன் தொடர்ந்து பேசத் தொடங்கினான்.

"வானம் தெரியுது. அங்க.... கனக்க... கனக்க... வானம் இருக்குது. ஒரு பறவை பறக்குது. ஆகாயக் கப்பல் ஒண்டு போகுது. புகையும் போகுது"

மீண்டும் ஒரு நீண்ட இடைவெளி தொடர்ந்தது.

"சின்ன ஜன்னலுக்குப் பக்கத்தில டிப்ஸ் நிக்கிறான். வெளியில தெரியிற பெரிய உலகத்த பாக்கிறான்."

"இங்கயிருந்து பார்க்கைக்க பென்னாம் பெரிய உலகமா உங்களுக்கு தெரியுதாக்கும்" என்றேன்.

"ஓமோம்" என்றான் மென்மையாக. "பெரிசு... பென்னாம் பெரிசு"

"எல்லாமே பெரியதா மிகப் பெரியதா தெரியுதா?" என்று கேட்டேன்.

டிப்ஸ் பொம்மலாட்ட அரங்கில் இருந்து வெளியே வந்தான். பெருமூச்சொன்று அவனிடமிருந்து கிளம்பியது.

"ஆனா டிப்ஸ் அப்பிடியில்ல. கோயிலப்போல பெரிசா டிப்ஸ் இல்ல."

எல்லாமே பெரிசா இருக்கிறதால டிப்ஸ் சின்னனா தெரியுதாக்கும் என்றேன். டிப்ஸ் மீண்டும் மணல் பெட்டியினுள் ஏறிக் கொண்டான்.

"இதுக்குள்ள நான்தான் பெரிசு" என்றான். நான் இந்த மணல் குன்ற உடைக்கப் போறன்.... தட்டையாக்கப் போறன்" அப்படியே உடைத்தும் விட்டான். குன்றைப் பரவி மட்டமாக்கிவிட்டான். விரல்களை மணலுக்கூடாக அங்குமிங்கும் இழுத்தான். "தட்டையாக்கப்பட்ட குன்று.... தட்டையாக்கப்பட்ட மலை...." என்றான்.

நிமிர்ந்து என்னைப் பார்த்து புன்னகை செய்தான் "அப்பாவட சப்பாத்துகள எடுக்க சப்பாத்துக் கடைக்கு போனனாங்கள். லெக்ஸிங்ரன் வீதியாலதான் போனனாங்கள். பிறகு எழுபத்திரெண்டாவது வீதியால போனனாங்கள். மூன்றாவது தெருவில நிறைய பஸ்சுகளும் வாடகைக் கார்களும் நின்றன. தலைக்கு மேலயும் பாதைகள் இருந்தன. நாங்கள் ஒரு பஸ்ஸில போயிருக்கலாம். ஒரு வாடகைக் காரிலயும் போயிருக்கலாம் நாங்கள் நடந்து கூடப் போயிருககலாம். ஆனா அப்பிடி எதுகும் செய்யயில்ல. நாங்க எங்கட காரிலதான் போனனாங்கள்"

"நீங்கள் பல வழிகளில போயிருக்கலாம்... ஆனா... உங்கட காரிலதான் போன னீங்கள் எண்டு சொல்லுறீங்களோ?

டிப்ஸ் மிக நெருக்கமாக வரும் வரை என்னை நோக்கிச் சரிந்தான். அவனது கண்கள் மின்னிக் கொண்டிருந்தன.

"ஓம் ஆனா ஒண்ட மறந்து போகாதயுங்கோ. நாங்க அப்பாட சப்பாத்துகளை எடுத்துக்கொண்டு வந்தனாங்கள்" என்னை லேசாகக் கண்டிப்பது போல் ஒலித்தது அவன் குரல்.

"ஓம் நீங்கள் அப்பாட சப்பாத்துகளை எடுத்து வந்தனீங்கள் எண்டத நான் மறக்கக் கூடாதுதான் என்றேன் நான்.


"சப்பாத்து தைக்கிறவர் அதுகளை சரியாக்கினவர்" டிப்ஸ் சொன்னான்.

"அதுகள தைச்சவரா?"

ஓம். "சரியாக்கித் தைத்தவர்" என்ற டிப்ஸ்.

"திருத்தியும் விட்டவர்" என்றான்.

"நல்லது டிப்ஸ் என்று தொடங்கிய



நான், ... போற நேரம் வந்திட்டுது" என்று முடித்தேன்.

"ஓம். போற நேரம் வந்திட்டுது" நான் சொன்னதை ஏற்றுக் கொள்பவன் போல் சொன்னான். பின் எழுந்து நின்றான்.

"போற நேரம் ஐஞ்சு நிமிசத்துக்கு முதலே வந்திட்டுது" என்றான்.

அவன் சொன்னது சரிதான். நேரத்தைச் சொல்வதன் மூலம், அப்பாவினுடைய சப்பாத்துகளை எடுக்கப் போன கதையைச சொல்வதை இடையில் குழப்ப நான் விரும்பவில்லை.

"ஓம்... நீங்கள் சொன்னது சரிதான். அந்த நேரம் கடந்து ஐஞ்சு நிமிசம் போயிற்றுது" என்றேன் நான்.

பொம்மலாட்ட அரங்கில் இருந்து தனது கோட்டையும் தொப்பியையும் டிப்ஸ் எடுத்துக்கொண்டான். தனது தொப்பியையும் கோட்டையும் போட்டபடி வெளியே வரும் போது. "இது ஒரு வினோதமான அலுமாரி. இதின்ர கதவில ஒரு ஓட்டையும் ஒரு ஜன்னலும் இருக்குது" என்று சொல்லிக் கொண்டே வந்தான். பிறகு அறைக்கு குறுக்காக நகர்ந்து தனது பாதணிகளையும் எடுத்துக்கொண்டான்.

"இதுகள் புதுச் சப்பாத்துகள்" என்றான். கீழே அமர்ந்து கொண்டு யாருடைய உதவியுமில்லாமலே அவற்றைப் போட்டுக் கொண்டான். பாதணிகளை போட்டுக்கொள்ள




முன் தன்னுடைய கால்களை என்னை நோக்கி நீட்டிக் காட்டினான்.

"பாத்தீங்களா காலுறைகளும் புதுசுதான். ஓட்டை ஒண்டும் இல்ல. டொக்டரிட இடத்தில அம்மாவுக்கு சங்கடமாப் போயிற்றுது" என்று சொல்லிவிட்டுச் சிரித்தான். பாதணியின் நூல்களை ஒழுங்காகவும் இறுக்கமாகவும் கட்டினான்.

"எழுந்து நின்றான் கதவுக்கூடாக வெளியே செல்லும் போது, கதவடியில் நின்று அதில் தொங்கிய சிறிய அறிவிப்பை மறுவளமாக திருப்பிவிட்டான். இப்ப யாரும் குழப்பலாம். நாங்கள் போய்விட்டோம்" என்று அவன் சொல்வது கேட்டது.

### அத்தியாயம்-11

அடுத்த வியாழக்கிழமை டிப்ஸ் திரும்ப வந்தபொழுது விளையாட்டு அறைக்குள் சுறுசுறுப்பாய் நுழைந்தான். தனது கோட்டையும் தொப்பியையும் கழற்றி ஒரு கதிரைமீது போட்டான்.

"மிஸ் ஏ யின்ர அலுவலகம் பன்னிரெண்டாம் இலக்கம்" என்று அறிவிப்பது போல் சொன்னான். "இந்த அறை பதினேழாம் இலக்கம். இந்தக் கதிரையின்ர பின் பக்கத்திலயும் ஒரு இலக்கம் இருக்குது பதின் மூண்டாம் இலக்கம் பார்த்தீங்களா?" என்று சொல்லி விட்டு கதிரையைத் திருப்பி அதிலிருந்த இலக்கத்தை தட்டிக்காட்டினான்.

"ஓமோம்" என்று நான் சொன்னேன். சில சமயங்களிலே துல்லியமான விவரங்களை விடாப்பிடியாக கைக்கொள்பவனாக அவன் தோன்றினான்.

அலுமாரியை நோக்கி நடந்து சென்ற அவன் ஒரு பொம்மைக் கிராமம் ஒன்றின் சிறிய சிறிய கட்டடங்கள் அடங்கியிருந்த பெட்டியைத் தெரிவு செய்தான். தரையில் அமர்ந்து கொண்டு, சிறிய அளவுகளில் உருவாக்கப்பட்டிருந்த வீடுகள், கடைகள், தொழிற்சாலைகள், கோயில்கள் மற்றும் கட்டடங்களிலிருந்து தனக்கு விருப்பமானவற்றைத் தெரிவு செய்தான். உருவாக்கப்படும் கிராமத்தில் எங்கும் நடுவதற்கென சிறிய சிறிய மரங்களும் இருந்தன. இந்த ஆக்கப் பொருட்களிலே டிப்ஸ் ஆழ்ந்து போயிருந்தான்.

"இது ஒரு பொம்மைக் கிராமம்" என்று தொடங்கியவன் சொல்லிக்கொண்டே போனான். "இஞ்ச என்னென்ன இருக்கு தெண்டு பார்ப்போம். கோயில்கள், வீடுகள், மரங்கள் இதுகளை வைச்சு ஒரு கிராமத்த செய்யப்போறன்... இங்க இரண்டு கோயில் இருக்குது. கோயில்களில தொடங்கப்போறன். இந்த உயரமான கோயில என்ர கிராமத்தின்ர நடுவில வைக்கப்போறன். இந்தச் சின்னக் கோயில இங்க வைக்கப்போறன். பிறகு வீடுகளை தெரிஞ்செடுத்து வீதிகளில ஒழுங்கா அடுக்கப்போறன். இது ஒரு சின்னக் கிராமம். என்றபடியா வீடுகளை சுத்தி கனக்க இடம் இருக்கலாம். சின்ன நகரங்களிலயும் சின்னக் கிராமங்களிலயும் கோயில்கள் கட்டாயம் இருக்கும். இந்தக் கோயில்ல இருக்கிற மணிக்கோபுரத்த கண்டீங்களா? இது வீடுகள் நிறைஞ்ச உலகமா இருக்கப்போகுது."

தரையில் விரித்திருந்த லினோலியம் விரிப்பில் கன்னம் அழுந்தப் படுத்துக் கொண்டான். கட்டடங்களில் சிலவற்றை இங்குமங்குமாக நகர்த்தினான்.

"இந்த சின்ன நகரை நான்தான் உருவாக்கினனான். இங்க நான் வீடுகள் நிறைந்த உலகத்த செய்திருக்கிறன். அதுகள சுத்தி மரங்கள நாட்டியிருக்கிறன். வானம், மழை, மென்மையான காற்று எல்லாத்தையும் என்ர கற்பனையில காணுறன். பருவ காலங்கள என்ர கனவுகளில காணுறன். இப்ப நான் வசந்த காலத்த கூப்பிடப் போறன். மரங்களில இலைகள் துளிர்க்குது. இந்த நகரம் அழகாகவும் அமைதியாகவும் வசதியாகவும் இருக்குது. வீதிகளில ஆக்கள் நடந்து திரிகினம். அவர்கள் தூரச் செல்லச் செல்ல மரங்களும் அமைதிக்குள்ள மூழ்குதுகள். இந்த மரங்கள் வித்தியாசமானவை. வித்தியாசம் வித்தியாசமான பட்டைகள் அடிமரங்களில இருக்கின்றன."

அவன் ஒருபுறமாக உருண்டு என்னைப் பார்த்தான். "வேற வீடு ஏதும் இருக்கா எண்டு என்னக் கேளுங்கோ" என்றான்.

"வேற வீடு ஒன்றும் இல்லையா?" என்று நானும் கேட்டேன்.

"இல்லை எல்லாத்தையும் பாவிச்சுப் போட்டன். ஒண்டும் மிச்சமில்ல" தன்னுடைய கிராமத்தைச் சுற்றி மேலும் பல மரங்களை வைத்தான்.

(தொடரும்)

---

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூற்றுப்படி சமூக நடத்தை முக்கியத்துவம் பெறுகிறது. மாந்தர்வழி, சமூகநியமங்கள், நிறுவனங்கள் இவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ளாமல் சமூக நடத்தையைப் பற்றி அறிந்து கொள்ளமுடியாது. ஒரு குழுவின் பயன்மதிப்புகள் மற்றும் அதன் அமைப்பு இவற்றைப் பொறுத்தே, சமூகக் கட்டுப்பாட்டு முகா மைகள் குறிப்பிட்ட நடத்தையை ஆதரிக்குமா? இல்லையா? என் பது தெரியும்.

ஆயினும் இச்சமூகக் கட்டுப்பாடானது சமூகப் பிரச் சினைகளுக்கும் வழிசமைக்கின்றது. சமூக ஏற்றத்தாழ்வுகள், மூடப் பழக்கவழக்கங்கள் போன் றன சமூகத்தில் அமைப்பு ரீதி யான தாக்கத்தை ஏற்படுத்துவன. இந்நிலைமைகள் முரண்பாடான களங்களுக்குத் தோற்று …களாக இருக்கின்றன. எனவே பழமைவாத… …த்துகள், பண்பாட்டுப் போலிகள், நடை முறைக்குதவாத பழக்கவழக்கங்களை சமூகக்கட்டுப் பாட்டுக்குள் இறுக்கிப் பிடித்து தனிமனித வாழ்வை… போட்டு டைப்பவர்களும் நம்மிடையே இருக்கத்தான் செய்கின்றார்கள். சில சமூகங்களின் வளர்ச்சியின்மைக்குக் காரணமாகவும், முன்னேற்றத்திற்குத் தடையாகவும் இருப்பதைக் காண்கிறோம்.

அன்பு, கருணை, மானிடத் தயவு, சமூகப் பெறுமானங்களை மதித்தல், ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு, சமூகப்பொறுப்புக்கள், உரிமைகளையும், கடமைகளையும் பாதுகாத்தல் ஆகிய விழுமியங்களை உள்ளடக்கிய சமூகக்கட்டுப்பாடா னது முழுச்சமூகத்துக்கும் நன்மை பயப்பதாகும். பின்னடைவான சமூகங்களுக்கு மேம்பாட்டு வழி காட்டிகளாக சமூகக் கட்டுப்பாடு அமைந்தும் விடுகின்றதெனலாம்.


எனவே தனிமனிதனை சமூக நியமங்கள் வழி வாழ் வதற்கு சமூகம் கட்டுப்பாடுகளை விதிக்கின்றது. இவற்றிலிருந்து மனிதன் விலகும்போது சட்ட… ஒழுங்கு குலைகிறது. முரண்பா டான செயல்…ளே மிஞ்சுகின்றன. இதனைத் தவிர்த்து, சமூ… ஒழுங் கை நிலை நாட்டுவதற்கு சமூகக் கட்டுப்பாடு அவசியமாகிறது.

(17 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருசம் முழுக்க உப்பிடித்தான் ஓய்வில்லாமல் தயாரிப்பு நடக்குமோ எண்டு கேட்டன். 'கனகாசு செல வழிச்சு கொள்வனவு செய்திருக்கிற இயந்திரங்களின்ரை உச்சப்பயனைப் பெறோணும் எண்டிறதுக்காக, இயந் திரங்களுக்கு ஓய்வு கொடுத்து உற் பத்தியை முடக்காமல், ஆக்களை மாத்தி மாத்தி போட்டு அடிச்சுத்தள்ளி றாங்கள். அடிப்படைச் சம்பளம் தவிர ஒவ்வொரு குழுவின்ரை அதிகப்படியான செயல்திறனைப் பொறுத்து ஊக்குவிப்புத்தொகையும் வழங்கப் படுகிது. ஏதாவது காரணத்தால கார் விற்பனை நாட்டிலை குறைஞ்சாலும், அந்த நேரத்திலை கூட விற்பனைக் குரிய பொருத்தமான வேற பாகங்களையும் தயாரிக்கிறாங்கள். அது மட்டுமில்லாமல் ஒரிடத்தில எல்லாத் தையும் செய்யாமல் வெவ்வேற இடங்களில பரவலாக உற்பத்தி செய்யிறதால, நெருக்கடி நிலைமை யளை சுமூகமாய் சமாளிக்கக் கூடியதாயிருக்கு. தங்களுக்குத் தேவையான துறைசார் ஆளணியைப் பெற்றுக்கொள்ளிறதுக்கு வசதியாக அந்தந்த இடங்களை ஒட்டியிருக்கிற பாடசாலை, கல்லூரிகளில படிக்கிற பிள்ளையளுக்காக விசேட ஊக்குவிப் புத்திட்டங்களையும் வைச்சிருக்கினம். ISO 9000-9004 எண்டிற தராதர நிர்ணய நடைமுறையைப் பின்பற்றி பிழையளை உடனுக்குடன் நிவர்த்தி செய்யினம். இதன்படி என்ன பிழை யெண்டாலும் மழுப்புச் சொல்லி, மற்ற வனைச் சாட்டிறதுக்கான வாய்ப்புகள் முற்றாகத் தவிர்க்கப்படுகிது', எண்டு அந்தத் தம்பி விளக்கினார். அங்கை நிண்ட யேர்மன்காரரர் எல்லாருக்கும் நன்றி சொல்லிப்போட்டு, மறக்க முடி யாத அந்த அனுபவத்தோட வீட்டை வந்து கட்டிலில விழுந்தன். வார்த்தையளில குறிப்பிட முடியாத ஆயிரமாயிரம் கனவுகள் மனதில ஓடிக் கொண்டிருந்திச்சிது. ஏனெண்டு தெரியாமல் என்னை அறியாமலேயே தலாணியைக் கண்கள் ஈரமாக் கிக்கொண்டிருந்தன.

பாவலன் பதில்கள் என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதிஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

பாவலன் பதில்கள்,
வெள்ளிநாதம்,
யாழ்சாலை,கிளிநொச்சி.



# பாவலன் பதில்கள்

பாவலா!

சோமவன்சவை விமான நிலைய கருவி குற்றவாளியாக காட்டியதாம் அப்படியானால் தண்டனை...?

செ.விஜியா
கிளிநொச்சி.

ஒரு சாதாரண கருவியே 'இவன் குற்றவாளி' என சுட்டிக் காட்டியதை விடவும் அவமானகரமான தண்டனைவேறு தேவையா...?

பாவலா!

வாழ்க்கை போர் அடிக்கின்றது என்ன செய்யலாம்?

பிரியங்கா,
யாழ்ப்பாணம்.

வயலில் சென்று போரடியுங்கள் சோம்பல் சுகமாகும்.

பாவலா!

அம்மாவுக்கு நான் உயர்தரத்தில் கணிதத்துறையில் படிக்க ஆசை, அப்பாவுக்கு விஞ்ஞானத்துறையில் படிப்பிக்க ஆசை, அண்ணாவுக்கு வர்த்தகத்துறையில் படிப்பிக்க ஆசை. நல்ல காலம் அக்கா இல்லை இருந்திருந்தால் கலைத்துறையை சொல்லியிருப்பார். இந்த நிலையில் நான் என்ன செய்ய?

தயாபரன்,
ஸ்கந்தபுரம்.

சரி... உமக்கு என்னதுறையில் முன்னேற ஆசை என்று தெரிவிக்கவில்லையே... உங்களின் தகைமைத் திறமையை நீங்களே உணர்ந்து உங்களுக்கான துறையை தேர்ந்தெடுங்கள் அதுவே வெற்றிக்கு வழி.

பாவலா?

ஆக்கங்கள் எப்படிப்பட்டவையாக இருக்கவேண்டும்?

பகீரதி,
மல்லாவி.

ஆக்கபூர்வமான சிந்தனைக்கும் செயலுக்கும் வழி காட்டுபவையாக இருக்க வேண்டும் ஆக்க கர்த்தாக்களின் ஆளுமையை அடையாளம் காட்டுவதாக இருக்க வேண்டும்..

பாவலா?

பொதுக் கட்டமைப்புத் தொடர்பாக சனாதிபதியின் இறுதி முடிவு என்ற செய்திகளை அடிக்கடி கேட்டும், பார்த்தும் வெறுத்துவிட்டது. உமக்கு எப்படியுள்ளது?

கோகிலவாணி,
கிளிநொச்சி.

நான் பொதுக்கட்டமைப்பு என்ற சொல்லை மறந்தே வெகு நாளாயிற்று.

பாவலா!

கிளின்டன் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்கு வரப் போவதாகக் கூறிச் சென்றுள்ளாரே இது பற்றி என்ன நினைக்கின்றீர்?

சுபாசினி,
புளியங்குளம்.

ஜே.வி.பியினதும் ஹெல உறுமயக்காரர்களினதும் அனுமதிக்கு விண்ணப்பித்துவிட்டு போயிருக்கிறாரோ என்னமோ...! என்னடா கிளின்டனுக்கு வந்த சோதனை.

பாவலா!

எடுத்ததற்கெல்லாம் கடிந்து விழும் அதிகாரிகளுக்கு என்ன கூற விரும்புகின்றீர்?

ராணி,
வவுனியா.

அவரது அலுவலக வாசலில் 'கடிநாய் கவனம்' என்ற எச்சரிக்கையை மாட்டிவிடுவது நல்லது.

பாவலா!

கொல்லாமை போதித்த புத்தனின் வழியில் வந்தவர்கள் இரத்த ஆறு ஓடும் என்கிறார்கள் இது எதன் வெளிப்பாடு?

குமார்,
வட்டக்கச்சி.

புத்தம் சரணம் கச்சாமி என்று சொல்பவர்கள் யுத்தம் சரணம் கச்சாமி என்று கத்தத் தொடங்கி விட்டார்கள் அவ்வளவுதான்.

பாவலா!

நீதிமன்றத்தினை அவமதித்ததற்காக S.P.திஸநாயக்காவுக்கு சிறைத்தண்டனை என்றால் திருமலை விடயம் தொடர்பாக நீதிமன்றத்தினை அவமதித்த பேரினவாதிகளுக்கு என்ன தண்டனை கொடுப்பார்கள்?

தர்ஷினி,
கணேசபுரம்.

அது அரசுக்கு சார்பான தீர்ப்பு- இது அதற்கு எதிரான தீர்ப்பு... அதற்கேற்ப அதற்கு சிறைத் தண்டனையெனில் இதற்கு 'விடுதலை' தான் தண்டனையாகவும் இருக்கக்கூடும்.




"கனக்கக் கதைச்சியெண்டா உள்ளதும் இல்லாமப் போகும். ஏதோ நன்மையாக் கதைச்சு குடுத்தத வாங்கிக்கொண்டுபோ..."

"அதென்னண்டு வாங்கிறது, அரிசிக்கு அம்பத்தெட்டுருவா எந்தடத்தை நடக்குது-"

"இஞ்சே, அப்பிடிப்பாத்தா சீனி பருப்பு எல்லாம் விலைதானே"

"சரி தின்னக்கூடிய அரிசியாத்தந்தா என்ன-காச்சின உடன திண்டாச்சரி கொஞ்சம் பிந்தினா கூழாப் போகுது"

"அதுக்கென்னப்பா செய்யிற இது வெளிநாட்டால உங்களுக்கு இறக்குமதி செய்தெல்லே தருகினம்"

"ஆரய்யா இறக்கச்சொன்னா எங்களட்ட அரிசியில்லயே விவசாயியளட்ட காசக் குடுத்து வாங்கித்தரலாமே"

"உங்கட சனத்துக்கு காசு போறண்டா உதவவாற நாடுகள் என்ன மண்ணத் தின்னிறதே"

"என்ன கதையப்பா உது மண்ணைத்தின்னத்தானே வந்து நிக்கினம். பின்ன உங்களில கருணை வந்து கொணந்தவையே"

"ச்சா... உதெனக்கு உறைக்கயில்லயே சின்ன மீனப் போட்டுப் பெரிய மீன் பிடிக்கவோ எல்லாம் நடக்குது"

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –122



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –122

.................................................
.................................................
.................................................
.................................................

பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –121



சு.செல்வி,
பரந்தன்,
கிளிநொச்சி.

## பரிசுக்குரிய வரிகள்

ஐந்தறிவு ஜீவனாக இருந்தாலும்
சோதனைகள் பல வந்த போதும்
சோர்வின்றி வயல் உழுது
சோபை இழந்த நம்வாழ்வை உயர்த்திடுவோமே.

## பாராட்டுக்குரிய வரிகள்

புத்தகச்சுமையுடன் ஓடியாடி விளையாட .வேண்டியவன்
குடும்பச்சுமையை சிலுவையாய் சுமக்கிறான்
தேசத்தின் மகனே! விடிகின்ற தன்னிறைவுத் தமிழீழம்
உன்சுமையை பஞ்சாய் பறக்கவிடும்.

எஸ்.ராஜீ,
வட்டக்கச்சி.

தன் பசியைமட்டும் போக்க அல்ல
எம் பசியையும் போக்கிவிட-தம்பி இவன்
நிற்கின்றான் வயல்தனிலே- தன்மானமும்
தைரியமும் நிறைந்த தர்ம மகனாய்

சன்நிலா (ம.நிலா),
வவுனியா.

அலையுடன் சென்றார் தந்தை- அதனுடன்
முடிந்தது என் கல்வி அன்னை தங்கையை,
காக்க எழுதுகோல் துறந்து
ஏர்தனை எடுத்தேன் தளிர்க்கரம் வேக.

சி.ஜனகன்,
முள்ளியவளை.

உழவர் எம் உயிர்வாழ்வின்
உறுதுணையானவர்கள் நீங்களடா-எருதுகளே
உற்சாகமாய் உழுது முடியுங்கள் விரைவாய்
உலக மக்கள் உயிர்காப்பது எம் பொறுப்படா!

சு.சிவாஜினி,
புதுக்குடியிருப்பு.

சேற்றுக்குள்ளே கால்புதைத்து வயல் விதைக்க
வியர்வை சிந்தும் சிறுவனே!-இது புலிவீரர் மீட்ட பூமியடா
-இன்று
புதுத் தென்புடன் விரிகின்ற தேசமடா.

ரா.சுஜந்தன்,
பரவிப்பாஞ்சான்.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
கிளிநொச்சி. புதுக்குடியிருப்பு

# கவனியுங்கள்..!




கிளிநொச்சி அஞ்சல் அலுவலகம்

A-9பாதை திறப்பின்பின் கிளிநொச்சி மாறிவிட்டது என்றுதான் கூறவேண்டும்.A-9 வீதி புனரமைப்பு செய்தது போலவும் சில உள் வீதிகளுக்கு தார் பூசியது போலவும் சில அபிவிருத்திகள் இருக்க, மறுபுறம் கட்டடங்கள் மளமளவென எழுந்து நிற்க, கண்ணாடி அறைகள் ஏ.சிகள் என ஒரு புறம், கலர் கலராய் வாகனங்கள் என காட்சிகள் விரிய...

இன்னும் யுத்தகால காயங்களுடன் போரின் வடுக்களை வெளிப்படுத்தியவாறு கிளிநொச்சி நகரின் மத்தியில் மத்திய மைதானத்திற்கு சற்று முன்பாக கிளிநொச்சி பிரதம தபால்நிலைய கட்டடம் மொட்டையாக காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு மூன்றாண்டுகள் கடந்துவிட்ட நிலையில் இங்கிருக்கின்ற ஏனைய திணைக்களங்கள் ஏதோ ஒரு வகையில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. ஆனால் கிளிநொச்சி தபால் நிலையத்தினை எவரும் கண்டுகொள்வதாகத் தெரியவில்லை இதற்கான காரணம் என்னவெனில்.

தபால் நிலையங்களை நேரடியாக சிறிலங்காவின் மத்திய அரசால் நிர்வகிக்கப்படுகின்றமை தான் காரணம். இன்று வரைக்கும் கட்டடத்தினை புனரமைப்பு செய்யுமாறு விண்ணப்பித்து விண்ணப்பித்து அந்த விண்ணப்பங்களே ஒரு தொகை இருப்பதாகத் தெரியவருகின்றது. மாவட்ட அரச அதிபரும் பல வழிகளிலும் தபாலகத்தினை புனரமைக்க வேண்டுகோள்களை விடுத்து வருவதாகவும். ஆனால் இதுவரைக்கும் எவ்விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை எனவும் கூறப்படுகிறது. இங்கிருக்கின்ற அதிகாரிகள் தாங்கள் கோரிக்கைகள் விடுக்கின்ற போதெல்லாம் மத்திய அரசை சேர்ந்தவர்கள் உதவுவதாக கூறிச் சென்றாலும் எந்த நடவடிக்கைகளையும் எடுப்பதாக இல்லை. இதைவிட ஊழியர் பற்றாக்குறை என பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் இத்தபாலகம் இயங்கி வருகின்றது. இவ்வாறே பரந்தன், பூநகரி, பளை போன்ற பல்வேறு பிரதேசங்களில் உள்ள தபால் நிலையங்களின் நிலையும் காணப்படுகிறது.

மாகாண அரசுக்கு கீழ் இருக்கின்ற திணைக்களங்கள் எல்லாம் புனரமைப்புச் செய்ய முடியும் என்றால் மத்திய அரசுக்குக் கீழ் இருக்கின்ற அதாவது தபால் தொலைத் தொடர்பு அமைச்சின் கீழ் இருக்கின்ற போரினால் பாதிக்கப்பட்ட தமிழர் பகுதிகளில் உள்ள தபால் நிலையங்கள் ஏன் இன்னும் புனரமைக்கப்படவில்லை என்பது புரியாத புதிராக உள்ளது.

-தமிழ்-





வாகரைப்பிரதேசத்தின் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தடையை எதிர்த்து வாகரை மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தையும், ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்களோடு கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகள் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம்.



வவுனியா ஓமந்தை
பிள்ளையார் கோயிலில்
சிறிலங்கா இராணுவத்தினரால்
திடீரென புத்தர் சிலை ஒன்று
திணிக்கப்பட்டுள்ளது.
அண்மையில் நடந்த
வெசாக் தினத்தன்று
ஓமந்தை மகாவித்தியாலயத்திற்கு
எதிரே முகாமிட்டுள்ள சிங்கள
இராணுவத்தினரால் இங்கே
பழமையான புத்த ஆலயம்
ஒன்று இருப்பதாக சிங்கள
மொழியில் பதாகை ஒன்றையும்
எழுதி இருந்தமை
குறிப்பிடத்தக்கது.






உங்கள் இன்றைய தெரிவுக்கு...

குமரகுரு

புடவை

அழகுப்பொருள் வாணிபம்

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை
உள்ளடக்கிய திருமணம் மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுரம் சாறிகள்
பட்டுசாறிகள் பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண்
சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள் சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை, கிளிநொச்சி

KUMARAKURU
Textile & Fancy House
Yarl Road, Kilinochchi.

EXPOAIR
your friend in the skies...

எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை

ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்

கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com





(C-11725)



இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –IV

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | வைகாசி–20 | 03–06–2004 | வெள்ளிக்கிழமை | ஓசை –105



கணேசா
நகையகம்
தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம்
பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி,
வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-12120)

# தமிழர் தாயகமெங்கும் மாணவர் எழுச்சி நிகழ்வுகளில் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பங்கேற்பு



(நமது நிருபர்)

தமிழர் தாயகம் எங்கும் மாணவர் எழுச்சி நாள் உணர்வுபூர்வமாக இடம்பெற்றது. அனைத்துப் பிரதேசங்களிலும் எழுச்சி ஊர் வலங்களும், பொதுக்கூட்டங்களும் இதனையொட்டி நடைபெற்றுள்ளன.

பாண்ட் வாத்திய அணிநடையுடன் நடைபெற்ற எழுச்சிப் பேரணியிலும் கூட்டங்களிலும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களும் கல்விச்சமூகத்தினரும் எழுச்சியுடன் பங்கேற்றனர்.

**கிளிநொச்சியில்...**

நேற்றுக்காலை 10.15 மணிக்கு கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்திலிருந்து ஆரம்பமான எழுச்சிப பேரணியானது ஏ.9 பிரதான வீதிவழியாக பகல் 11-15 மணிக்குச் சந்திரன் பூங்காவினை வந்தடைந்து அங்கு கருத்துரைகளும் பரிசளிப்பு நிகழ்வுகளும் இடம் பெற்றன.


கிளி.பொது விளையாட்டு மைதான முன்றலிலிருந்து பாடசாலை மாணவர்களின் ப்ாண்ட் வாத்திய அணி யினர் முன் தொடர மேஜர் முரளி, தியாகி சிவகுமாரன் ஆகியோரின் திருவுருவப்படங்களைத் தாங்கியவாறு பாடசாலை மாணவியர்கள் அணி வகுத்துவர எழுச்சிப்பேரணி சந்திரன் பூங்காவினை. வந்த டைந்து அங்கு மாணவர் எழுச்சிக் கருத்துரைகள் இடம் பெற்றன.

கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவன் சிறீ கருணாகரன்சர்மா தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில்

(IV பக்கம் பார்க்க)

# யுத்த நிறுத்தத்தைத் தொடர்ந்து பேணுவதில் சிறில. அரசிற்கே தார்மீகப் பொறுப்புண்டு

## சுவிஸ் தூதுவருடனான சந்திப்பின்போது அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு



(கிளிநொச்சி)

***சிறிலங்கா இராணுவத்தின் நடவடிக்கைகளால் யுத்தநிறுத்த ஒப்பந்தம் மீது தமிழ்மக்கள் முழுஅளவிலான நம்பிக்கையின்மையைக் கொண்டுள்ளனர். யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து பேணுவதில் சிறிலங்கா அரசுக்குத்தான் தார்மீகப் பொறுப்பு உள்ளது என சுவிஸ்நாட்டுத் தூதுவருடனான சந்திப்பின்போது அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்துள்ளார்.***

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் சமாதானச் செயலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பின்போது ஆழிப் பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பு மற்றும் இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களைக் கையாள யுத்த நிறுத்த ஒப்பந்தம் நீடிப்பது அவசியம் என்று சுவிஸ் தூதுவர் பேனடினோ றெக்காசோனி வலியுறுத்தினாா.

கண்டியில் உதவி வழங்கும் மாநாடு குறித்து தமிழ்ச் செல்வனிடம் விளக்கிய சுவிஸ் தூதுவர், ஆழிப் பேரலை மீளமைப்புக்காக பொதுக் கட்டமைப்பை உருவாக்கு

(IV பக்கம் பார்க்க)

## ஊர்காவல் படைச்சிப்பாய் சடலமாக மீட்பு

பொலநறுவை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய முன்னாள்ஊர் காவல் படைச் சிப்பாய் ஒருவர் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.செவனப்பிட்டிய காட்டுப் பகுதியில் உருக்குலைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்ட இவர் ரங்கன கெலும்குமார என அடையாளம் காணப்பட்டுள்ளா் கடந்த சில தினங்களுக்கு முன்னா் இவர் காணாமற்போயிருந்தார்.

## –திருமலை நகரில் குவிக்கப்பட்டுள்ள படையினரை விலக்க வலியுறுத்தி–

# தாயகம் தழுவிய ரீதியில் இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்க ஏற்பாடு

(நமது நிருபர்)

புத்தர்சிலை விவகாரத்தையடுத்து திருமலை நகரப்பகுதியில் குவிக்கப் பட்டுள்ள படையினரை நேற்று மாலைக்குள் அகற்றுவதாக அமைச்சர் மைத்திரி பாலசிறிசேன தலைமையிலான குழு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றாமையைக் கண்டித்து இன்று தமிழர் தாயகமெங்கும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதற்கான அறைகூவலை தமிழத்தேசியக் கூட்டமைப்பும், திருகோணமலை மாவட்ட தமிழ்மக்கள் பேரவையும் விடுத்துள்ளன.

அமைச்சா் மட்டக்குழு புதன்கிழமை திருமலையில் மாகாண ஆளுநா் வாசஸ் தலத்தில் பாராளுமன்ற உறுப்பினா்கள் இரா.சம்பந்தன், க.துரைரட்ணசிங்கம், வ.விக்கினேஸ்வரன்ஆகியோர் தலைமையிலான திருமலை மாவட்டத் தமிழ்மக்கள் பேரவையின் பிரதிநிதிகள், இந்து மற்றும்

(IV பக்கம் பார்க்க)

# கேணல் சங்கர் மீதான தாக்குதலை லெப்.கேணல் முத்தலிப்பே நெறிப்படுத்தினார்

## –இராணுவ அதியுயர் விருது அதற்காகவே வழங்கப்பட்டது

கொழும்பு பொல்ஹென்கொடப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை சுட்டுக்கொல்லப்பட்ட இராணுவப் புலனாய்வுத்துறை கட்டளை அதிகாரியான லெப்.கேணல் ரி.என் முத்தலிப் என்பவரே கேணல் சங்கர் அவர்களின் மீதான தாக்குதல் திட்டத்திற்கான புலனாய்வுத் தகவல்களைப் பெற்று அத்தாக்குதலையும் நெறிப் படுத்தி முக்கிய பங்காற்றியிருந்தார் என்று சிங்கள ஊடகத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்காகவே இவர் இராணுவத்தின் அதியுயர் விருதுகளில் ஒன்றான "ரண விக்கிரம" பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 1987இல் வடமராட்சியில் மேற்கொள்ளப்பட்ட

(IV பக்கம் பார்க்க)

# சுவிற்சர்லாந்து பிரதிநிதிகள்–கே.பி.றெஜி; சுனாமி வேலைத்திட்டம் குறித்துக் கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக்கழக நிறைவேற்றுப்பணிப் பாளர் கே.பி.றெஜி அவர்களை சுவிற்சர்லாந்து நாட்டின் இலங்கைக்கான தூதுவர் பேனாடினோ றெக்காசோனி அவர்களும், அவருடன் கூட வருகை தந்த மார்ட்டின் ஸ்ரியுசிங்கர் அவர்களும் தமிழர் புனர்வாழ் வுக்கழக நடுவப்பணியகத்தில் சந்தித்துள்ளனர்.

நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச்சந்திப்பின்போது வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் சுனாமிப்பேரலையால் மக்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்புக்கள், வாழ்வாதார இழப்புக்கள் குறித்து விரிவாகக் கேட்டுத் தெரிந்துகொண்டனர். குறிப்பாகத் தமிழர் புனர்வாழ் வுக்கழகத்தின் சுனாமிக்குப் பின்னரான துரித புனர்வாழ்வு

(IV பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### கருத்தரங்கு
**N.E.C**

A9 வீதி கிளிநொச்சி
A/L பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குவணிகக்கல்வி கருத்தரங்கு.சனி 9.00 மணிக்கு ஆரம்பம்.
(சி.12182)

### கருத்தரங்கு
**N.E.C**

A9 வீதி கிளிநொச்சி
A/Lபரீட்சைக்கு தேற்றும் மாணவர்களுக்கு தமிழ் இறுதிக்கருத்தரங்கு.ஆசிரியர்-எஸ்.யோகேஸ்வரன் (B.A)Hons காலம்- வெள்ளி 03.06.2005 நேரம்:-காலை 9.00 மணிக்கு.
(சி.12182)

# சுதந்திரபுரம் படுகொலை நினைவுதினம்; உடையார்கட்டில் முன்னோடிக் கலந்துரையாடல்

(உடையார்கட்டு)

சுதந்திரபுரம் படுகொலை நினைவு தினத்தை முன்னிட்டு முன்னோடிக் கலந்துரையாடல் ஒன்று உடையார்கட்டுப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலர் க.விஜயகுமார் தலைமையில் உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

சுதந்திரபுரம் படுகொலைகள் நினைவு விடயமாக தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன் கருத்துரை வழங்கினார்.

இந்நிகழ்வில் படுகொலை நினைவு தினத்தை சிறப்பாகச் செய்வதற்குரிய ஒழுங்கு படுத்தல்களை முன்னெடுப்பதற்குரிய செயற்குழு ஒன்று அமைக்கப்பட்டதுடன், பல பொது அமைப்புக்களிடம் வேலைத்திட்டங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இக்கலந்துரையாடலுக்கு பல பொது அமைப்புப்பிரதிநிதிகள், பாடசாலை அதிபர்கள், கிராம அலுவலர், முல்லை மாவட்ட அரசியல் துறைதுணைப் பொறுப்பாளர் செல்வம்,முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை பொறுப்பாளர் ஈழவன், உடையார்கட்டுப்பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் புகழரசன், தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (19)

---

## கிணற்றிலிருந்து குடும்பப்பெண் சடலமாக மீட்கப்பட்டார்

(உடையார்கட்டு)

உடையார் கட்டு-சுதந்திரபுரம் கொலனி பகுதியைச் சேர்ந்த குடும்பப்பெண்ணொருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சுதந்திரபுரம் கொலனியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தாயான திருமதி அன்ரனிதாஸ் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். (19)

## நியாப், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் சமூக உணர்வூட்டாளர்களுக்கான சந்திப்பு

கடந்த காலங்களில் நியாப் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சமூக உணர்வூட்டாளர்களாகக் கடமையாற்றி இன்றுவரை வேறு கடமைகளில் இணைந்து கொள்ளாதவர்கள் எதிர்வரும் சனிக்கிழமை (04.06.2005) காலை 9.00மணிக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழக நடுவப்பணியகத்திற்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
**சமூக உணர்வூட்டல் பகுதி (நியாப்),**
**தமிழர் புனர்வாழ்வுக்கழகம்,**
**நடுவப்பணியகம்,கிளிநொச்சி.**
*(சி.12175)*

---

**வடமாகாண பனை,தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம்**

## பணிநிலை வேண்டுகை

**பணிநிலை:-** இரவுக்காவலாளி-315/16

**சம்பள அளவுத்திட்டம்:-** 31/99 சுற்று நிருபத்திற்கமைய 3250-60x10-65x10=4500/= புதியசம்பளஅதிகரிப்பு ரூ.1250/=வும்

**தகைமை:-** அ)கூட்டுறவுப்பணியாளர் 15ஆவது சம்பளத் திட்டத்திலான பதவியில் ஒருவருடத்திற்குக் குறையாத அனுபவம்.

**அல்லது**

ஆ) ஐந்தாம் வகுப்புக் கல்வித் தராதரப் பத்திரமும் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல்.

**வயதெல்லை:-** 18-45 வயது வரை இருத்தல், கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவினை வதிவிடமாகக் கொண்டிருப் போருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**பிணைப்பணம்:-** பணிப்பாளர் சபையால் தீர்மானிக்கப்படும் பிணைப் பணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

தகுதியான விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை எதிர்வரும் 14.06.2005 ஆம் திகதிக்கு முன்னதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரிலோ ''பொதுமுகாமையாளர், வடமாகாண ப.தெ.வ.அ.கூ.நி.பேரிணையம், கண்டிவீதி, கிளிநொச்சி என்றும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**வடமாகாண ப.தெ.வ.அ.கூ.நி**
**பேரிணையம்,**
**கண்டிவீதி,கிளிநொச்சி.**

(சி.12179)

---

## கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பரந்தன்

பதிவு எண் -பி.ஏ.047 திகதி:-1971.02.10

## பணிநிலை வெற்றிடம்

பதவி :- பாரவூர்தி பாதுகாவலர்

சம்பள குறியீட்டு இல :- 314/16

சம்பள அளவுத் திட்டம்:-3250-60x10-65x10-4500+3750

தகைமை :- கூட்டுறவுப் பணியாளர் 17ஆவது சம்பளம் அள வுத் திட்டத்தில் 01 வருடத்திற்குகுறையாத அனுபவம்.

அல்லது

ஐந்தாம் வகுப்புச்சித்தியுடன் நல்ல தேகாரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

வயது எல்லை :- 18-35

*சங்க எல்லைப் பரப்பிற்குட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.*

தகைமை உள்ளவர்கள் விண்ணபத்தினை தலைவர், கரைச்சி வடக்கு பல நோக்குக்கூட்டுறவுச் சங்கம், பரந்தன் எனும் முகவரிக்குத் தபாலிலோ அல்லது நேரிலோ 2005.06.13 ஆம் திகதிக்கு முன் அனுப்புதல் வேண்டும்.

*தலைவர்,*
*கரைச்சி வடக்குப் பலநோக்குக்*
*கூட்டுறவுச்சங்கம்.*
*பரந்தன்.*

*(சி.12176)*

---

## பணிநிலை வேண்டுகை

தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆளுகைக்குட்பட்ட பொருத்தமான பணி நிலைக்குப் பின்வருவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01 ஒய்வுபெற்ற நில அளவையாளர்கள்.

02 ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள்.

03 ஓய்வுபெற்ற கிராமசேவையாளர்கள்.

▲ சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
▲ ஒப்பந்த அடிப்படையிலும் பணிபுரியலாம்

பொருத்தமானவர்கள் சுயவிபரப்படிவம் மற்றும் சான்றிதழ்களுடன் 08.06.2005 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் தமிழர் புனர்வாழ்வுக் கழக நடுவப்பணியகத்தில் நேர்முகத்தேர்விற்கு சமூகமளிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்

*ஆளணிப்பகுதி,*
*தமிழர் புனர்வாழ்வுக்கழகம்,*
*நடுவப்பணியகம்,*
*கிளிநொச்சி.*

TRO

*(சி.12181)*

---

## பணிநிலை வேண்டுகை

தமிழர் புனர்வாழ்வுக்கழக ஆளுகைக்குட்பட்ட நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:-
- 30 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் பேசக்கூடிய ஆற்றல்.
- நிறுவன முகாமைத்துவம் தொடர்பான அனுபவமுள்ளவராக இருத்தல்வேண்டும்.
- நீர் சுத்திகரிப்புத் தொடர்பான தொழில்நுட்பம் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.

பொருத்தமானவர்கள் சுயவிபரப்படிவம் மற்றும் சான்றிதழ்களுடன் 08.06.2005 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் தமிழர் புனர்வாழ்வுக் கழக நடுவப்பணியகத்தில் நேர்முகத்தேர்விற்கு சமூகமளிக்குமாறு வேண்டப்படுகிறீர்கள்.

*ஆளணிப்பகுதி,*
*தமிழர் புனர்வாழ்வுக்கழகம்,*
*நடுவப்பணியகம்,*
*கிளிநொச்சி.*

TRO

*(சி.12180)*

# மாணவர் எழுச்சி நாள்

கிளிநொச்சியில்




படங்கள்:சோதி

யாழ்ப்பாணத்தில்




படங்கள்:சுஜீவன்

## தேசிய விடுதலையை மீட்டெடுக்க மாணவர்களே ஒன்று சேருங்கள்

### –மாணவர் எழுச்சி நாள் பிரகடனத்தில் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

உலகில் மாணவரது சக்தி மா பெரும் சக்தியாக பல புரட்சிகளை, விடுதலைப் போராட்டங்களை நிகழ்த்தியுள்ளது. அத்தகைய பாணியில் நிற்கும் தமிழினத்தை ஏகாதிபத்திய வாதிகளும், பேரினவாதிகளும், பிராந்திய ஆக்கிரமிப்பாளர்களும் அடிமைப் படுத்த முயலுகின்றனர். இதனை முறியடித்து தமிழன் தனியாகத் தேசிய இனமென்பதற்கேயுரிய தேசிய விடுதலையை மீட்டெடுக்க ஒன்று சேருங்கள்.

இவ்வாறு நேற்று யாழ்.குடாநாட்டில் மாணவர் எழுச்சிநாள் நிகழ்வில் வெளியிடப்பட்ட பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்களப் பேரினவாதம் தமிழ் மாணவ சக்தியை வேரோடு சாய்க்க முயன்றபோதும், அடிமைகளாகப் பயன்படுத்த முயன்றபோதும், தமிழ் மாணவர் பரம்பரை நிலையான தளத்தில் போராடும் உணர்வு பெற்றதனால் தலைநிமிர்ந்து சக்தி படைத்த இனமாக தமிழினம் பலமடைய உதவியது. காலம் காலமாகக் கல்விக் கொள்கைகளில் பாரபட்சத்தினையும், தரப்படுத்தலையும் தமிழ் மாணவர்களின் வாழ்வுரிமையிலும் சிங்களப் பேரினவாதம் பிரயோகித்தது. தமிழ் மாணவர்கள் உயர்கல்வியை இழந்ததோடு தொழில்உரிமையற்ற கூட்டமாகச் சிங்களப் பேரினவாதம் மாற்ற முயன்றது.

தமிழீழ மாணவர்களே தமிழனின் வாழ்வுரிமையை மீட்டெடுக்க வேண்டிய நாளைய தலைவர்கள் சிங்களப் பேரினவாதம் போடும் தடைகளையும், ஆக்கிரமிப்பையும் முறியடிப்பதோடு தமிழனின் உரிமையை அறிவுசார் தளத்தில் வளர்க்க முன்வாருங்கள்.

உலக அறிவியல் வேகமாகச் செல்வது போல தமிழீழ மாணவர்களாகிய நாமும் உலகத்தோடு போட்டி போடவும் எமது தனித்துவத்தைத் தக்கவைக்கவும் போராடவேண்டும். அதற்காக முயல்வதோடு எங்கள் நிலங்களை மீட்டெடுப்பதும் எங்கள் உரிமைகளை வென்றெடுப்பதும், எங்கள் பாதுகாப்பைப் பேணுவதும் மாணவர்களாகிய எங்களின் கடமை என்பதை ஏற்றுக்கொள்வதாக உறுதி கொள்வோம். (41)

## பாட்டியிடம் சுகம் விசாரிக்க வந்தோர் பட்டப்பகலில் துணிகரத் திருட்டு

பட்டப்பகலில் தனிமையாக வீட்டில் இருந்த வயோதிபப் பெண்ணிடம் சுகம் விசாரித்த இளைஞர்கள் சுமார் 40 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட நகைகள் மற்றும் பெறுமதிமிக்க வீட்டு உபகரணங்களை சன நடமாட்டம் அதிகமுள்ள இடத்தில் இருந்து திருடிச் சென்றுள்ளனர்.

பலாலி வீதி ஆறாம் ஒழுங்கை யில் உள்ள க. கசலாம்பிகை (வயது64) என்பவர் வீட்டில் நேற்று முன்தினம் நண்பகல் 2.30 மணியளவில் இத்திருட்டுச் சம்பவம் இடம் பெற்றது. வீட்டினுள் நுழைந்த இவர்கள் வயோதிப மாதுவிடம் சுகவீனம் சம்பந்தமாகக் கதைத்துவிட்டு அவரைப் பிடித்துக் கைகால்களைக் கட்டியதுடன் வாய்க்கும் பிளாஸ்ரர்போட்டு ஒட்டியுள்ளார்கள்.

பின்னர் கழுத்தில் இருந்த சங்கிலி, கையில் இருக்கும் மோதிரம் என்பவற்றை கழற்றியுள்ளார்கள். இந்நேரம் வீட்டிற்குப் பால்கொடுப் பவர் வந்து மணி அடித்தபோது வெளியால் வந்து பால் வாங்கியதுடன் குறிப்பிட்டவர்கடைக்குச் சென்றுவிட்டதாகவும் கூறி பாலை வாங்கி வீட்டினுள் வைத்துள்ளார்கள்.

இவ்வீட்டில் தங்கி பல்கலைக் கழகத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் மாலை 6.00 மணிக்குப்பின்னர் வீட்டிற்கு வந்தபோதே உண்மை நிலைமையினை அறிந்துள்ளார்கள்.

இது சம்பந்தமாக யாழ்.மாவட்ட அரசியல்துறையிலும் மற்றும் பொலிசிலும் முறையிடப்பட்டுள்ளன (41)

## ஏறாவூர் சதாம்குசேன் கிராமத்தில் குண்டுத் தாக்குதல்; வீடு சேதம்

(ஏறாவூர்)

ஏறாவூர் சதாம்குசேன் கிராமத்திலுள்ள வீடொன்றின்மீது நேற்று அதிகாலை முஸ்லிம் ஆயுதக்குழுவினால் கைக்குண்டுவீசப்பட்டுள்ளது.

அந்த நேரம் வீட்டில் எவரும் இல்லாதபோதிலும் வீட்டின் முன்பக்கம் சிறு சேதடைந்துள்ளது.ஏறாவூர் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

### –பிந்துனுவெவ கொலையாளிகளின் விடுதலை–

## தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான உச்சநீதிமன்றின் காழ்ப்புணர்ச்சி

### – அமெரிக்க மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு குற்றச்சாட்டு

(லண்டன்)

பிந்துனுவெவ முகாமில் வைத்து விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 27 தமிழ் இளைஞர்களைக் கொலை செய்தவர்களை விடுதலை செய்தமையானது சிறிலங்கா உச்ச நீதிமன்றம் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு எதிராக காழ்ப்புணர்ச்சியுடன் இருப்பதைக் காட்டுவதாக அமெரிக்காவிலுள்ள மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்புக் குற்றம் சாட்டியுள்ளது.

பிந்துனுவெவவில் உள்ள அரசின் மறுவாழ்வு முகாமில் வைத்து விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 27 தமிழ் இளைஞர்களைப் படுகொலை செய்த குற்றத்திற்காக சிறிலங்கா உயர் நிதிமன்றினால் மரண தண்டனை விதிக்கப்பட்ட நான்கு பேரை உச்சநீதி மன்றம் சரியான ஆதாரம் இல்லை என்று காரணம் காட்டி விடுதலைசெய்தது. இந்த வழக்கை மீண்டும் விசாரணை செய்ய வேண்டும் என இந்த அமைப்பு சிறிலங்கா அரசைக் கோரியுள்ளது.

## துணுக்காய் வலய தமிழ்த்தினப் போட்டியில் முத்துஐயன்கட்டு வலதுகரை முன்னணி

(முத்துஐயன்கட்டு)

2005ஆம் ஆண்டு துணுக்காய் வலய மட்டத்திலான தமிழ்த்தினப் போட்டி நிகழ்வுகளில் மு/முத்துஐயன் கட்டு வலதுகரை அ.த.க.பாடசாலை பல முன்னணி இடங்களைப் பெற்றுள்ளது.

கடந்த மாதம் 31ஆம் திகதி நடைபெற்ற சமூகநாடகம், வில்லிசை ஆகிய போட்டி நிகழ்வுகளிலும் மேற்படி பாடசாலை முதலாம் இடத்தினையும், விவாதப்போட்டியில் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டுள்ளன.

கடந்த மாதம் 28ஆம் திகதி நடத்தப்பட்ட எழுத்தாக்கப்போட்டிகளில் மேற்பிரிவில் சிறுகதையாக்கத்தில் இ.ராதை, கவியாக்கத்தில் வே.அருள் குமார் ஆகியோர் முதலாம் இடங்களைப் பெற்றனர்.

மத்திய பிரிவில் சிறுகதையாக்கத்தில் க.கஜேந்திரன், கவிதையாக்கத்தில் ம.நிஸாந்தன் ஆகியோர் முதலாம் இடங்களைப் பெற்றுக் கொண்டனர். வெற்றியீட்டிய மாணவர்களையும், அவர்களுக்கு ஊக்கமளித்த ஆசிரியர்களையும் பாடசாலையின் அதிபர் திரு. சி. பாஸ்கரன் பாராட்டி வாழ்த்தியுள்ளார். (து)


-கண்டியில் நடந்த உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டில்-

# சுனாமி அவலத்தை சிறப்பாக வெளிப்படுத்திய

# முல்லை அரச அதிபருக்கு நேற்றுக் கௌரவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

சுனாமிப் பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தை அண்மையில் கண்டியில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் தத்ரூபமாக வெளிப்படுத்தி உரையாற்றி மக்களின் அன்றைய நிலையையும், இன்றைய நிலையையும் எடுத்துக் கூறியமைக்காக முல்லை அரச அதிபர் இமெல்டா சுகுமார் அவர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளார்.



முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும், அதன் கிளைச் சங்கங்களும், முல்லை வர்த்தக சங்கமும், முல்லை வாழ் மக்களும் இணைந்து அரசஅதிபருக்கான கௌரவிப்பை வழங்கினர்.

நேற்றுக்காலை 10.15 மணியளவில் இந்நிகழ்வு ஆரம்பமானது. முன்னதாக முல்லைத்தீவு சுற்றுவளைவுச்சந்தியில் இருந்து மங்கல வாத்தியங்கள் சகிதம் கடற்றொழிலாளர் சமாசத்தில் அமைக்கப்பட்டிருந்த மேடைக்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டார்.

இந்நிகழ்வில் தமிழீழத்தேசியக் கொடியைத் தமிழீழ கடற்படையின் முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் றங்கன் ஏற்றிவைத்தார். அடுத்து சமாசத்தலைவர் அ. மரியராசா தலைமையில் கௌரவிப்பு நிகழ்வு ஆரம்பமானது. இதில் வரவேற்புரையை முல்லை வர்த்தக சங்கத் தலைவர் மனோ நிகழ்த்தினார். ஆசியுரையை முல்லை பங்குத் தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகள் நிகழ்த்தினார். அரச அதிபருக்கான பாராட்டுரையை வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், நிகொட் திட்டப்பணிப்பாளர் ரகுநாத பிள்ளை, தமிழீழக் கடற்படை அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் பூரணி ஆகியோர் நிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து அரச அதிபரைக் கௌரவித்து தங்கப் பதக்கத்தை முல்லை கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தால் வழங்கப்பட்டது. இதனைச் சமாசத்தலைவர் மரியராசா வழங்கிக் கௌரவித்தார்.

இந்நிகழ்வில் கரைதுரைப்பற்று உதவி அரச அதிபர் சு. சோதிநாதன் விசேட ஆணையாளர் கிருஷ்ண பிள்ளை, முல்லை காவல்பணிமனைப் பொறுப்பாளர் றோய்க்காந், அரச,அரச சார்பற்ற நிறு வனத்தினர், வர்த்தகர்கள்,பொதுமக்கள் எனப் பெருமளவானவர்கள் கலந்துகொண்டனர். (லோ,தீ,20)

## சுவிற்சர்லாந்து...

அபிவிருத்திச்சேவை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டச்செயற்பாடுகள் பற்றியும்,அவற்றின் தற்போதைய நிலைப்பாடுகள் பற்றியும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவிருக்கும் வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் கேபி.றெஜி அவர்கள் விரிவாக எடுத்து விளக்கியிருந்ததையடுத்து தங்களது திருப்தியைத் தெரிவித்துக் கொண்ட அவர்கள் சுனாமிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட இடங்களையும், இடைக்கால்க் குடியிருப்புக்களையும் பார்வையிடுவதற்காக முல்லைத்தீவிற்குச் சென்றிருநதனர்.

## தமிழர்...

தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு மாவட்ட தேசிய மட்டத்தில் நடைபெற்ற போட்டிகள் மற்றும் தமிழீழ விளையாட்டுக்கழகமும், கிளி. கல்விவலையமும் இணைந்து நடத்திய மரதன் மற்றும் துவிச்சக்கர வண்டி ஓட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

**யாழ்குடாநாட்டில்....**

நேற்றுக்காலை 10.00 மணியளவில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி முன்றலில் இருந்து ஆரம்பமான பேரணி யாழ்.இந்துக்கல்லூரியைச் சென்றடைந்தது.

அங்கு இடம்பெற்ற நிகழ்வில் தியாகி பொன்சிவகுமாரின் திருவுருவப்படத்திற்கு தமிழீழ கல்வி மேம்பாட்டு யாழ்.மாவட்டப்பொறுப்பாளர் ஆர்வலன் சுடரினை ஏற்றிவைக்க, மலர்மாலையினை வடமராட்சி கோட்டப் பொறுப்பாளர் இன்பன் அணிவித்தார். முன்னாள் மாணவர்அமைப்புப் பொறுப்பாளர் மேஜர் முரளியின் திருவுருவப்படத்திற்கு தீவகச்சிறப்புப்பொறுப்பாளர் சொ.நரேன் சுடரினை ஏற்றிவைக்க மலர்மாலையினை தென்மராட்சிக் கோட்டப் பொறுப்பாளர் அன்பு அணிவித்தார்.

தொடர்ந்து தமிழ் மாணவர் ஒன்றியத்தலைவர் ப.குலேந்திரன் தலைமையில் மேடைநிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

**முள்ளியவளையில்.....**

முள்ளியவளை பிரதேச சபைக்கு முன்பாக இருந்து காலை 9.30 மணிக்கு மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள், வர்த்தகர்கள், பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசசார்பற்ற நிறுவனங்கள், திணைக்களங்களைச் சேர்ந்தவர்கள் அனைவரும் பேரணியாகத் திரண்டு வித்தியானந்தாக்கல்லூரியை வந்தடைந்து அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின.

சிறப்புரையினை தே.எ பேரவைப் பொறுப்பாளர் பொ.ஈழவன் நிகழ்த்தினார். நிகழ்வின் இறுதியில் கரைதுரைப்பற்றுக்குட்பட்ட அனைத்துப் பாடசாலைகளுக்கிடையிலான கிளித்தட்டு, கயிறிழுத்தல் போட்டிகளினை வெற்றிவீரருக்கான பரிசில்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

**கிழக்கு மாகாணத்தில்....**

திருக்கோணமலை மாவட்டத்தில் மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுகள் சேனையூர் பாடசாலை வளாகத்தில் நடைபெற்றன.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலும், மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுகள் சிறப்புற நடை பெற்றுள்ளன.

**மன்னாரில்...**

மாணவர் எழுச்சி நாள் நிகழ்வுகள் மன்னார் மாவட்டத்திலும் சிறப்புற நடைபெற்றன.

இந்நிகழ்வுகள் வங்காலை மகாவித்தியாலயத்திலும் மடுக்கல்வி வலயத்திலும் நடைபெற்றன. (சோ,சு,08,33,27,41,18,28)

## கேணல்...

ஒப்பரேசன் லிபரேசன் நடவடிக்கையின்போது புலனாய்வுத்தகவல்களைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார் என்றும், வன்னிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பல நீண்டதூரம் ஊடுருவித்தாக்கும் நடவடிக்கைத் தாக்குதல்களுக்கான புலனாய்வுத் தகவல்களைச் சேகரித்திருந்தார் என்றும் அந்தச் சிங்கள ஊடகத்தகவல் மேலும் கூறுகின்றது.

அத்துடன் கடற்புலிகளைச் சேர்நத லெப்.கேணல் கங்கைஅமரன் மீதான தாக்குதலுக்கான புலனாய்வுத் தகவல்களையும் இவரே திரட்டித் தாக்குதலை நெறிப்படுத்தியிருந்தார் என்றும் அந்த ஊடகத் தகவல் மேலும் தெரிவித்துள்ளது.

## யுத்த...

வதைத்தவிர வேறுவழி எதுவும் இல்லை என்று ஒருமித்த கருத்தை உதவிவழங்கும் நாடுகள் வெளிப்படுத்தியதாக அவர் கூறினார்.

ஆழிப்பேரலை மீளமைப்பு, போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மறுசீரமைப்புப் பணிகள் மற்றும் அமைதிப் பேச்சுக்கள் ஆகியவற்றில் சுவிஸ் அரசு முழு ஒத்துழைப்பை அளிக்கும் என்றும் அவர் உறுதியளித்தார்.

இதன்போது ஆழிப்பேரலை மீளமைப்புக்காக சுவிஸ் மக்கள் தன்னெழுச்சியாக அளித்த பேருதவிகளைப் பாராட்டிய சு.ப. தமிழ்ச்செல்வன்,யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து பேணுவதில் சிறிலங்கா அரசுக்குத் தான் தார்மீக பொறுப்பு உண்டு என்பதை அண்மைய நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டி விளக்கினார்.

திருமலை மற்றும் வவுனியா ஓமந்தை புத்தர்சிலை விவகாரங்கள் மூலம் பேரினவாதசக்திகள் உருவாக்கி வரும் பதற்றசூழல், ஆயுதக் குழுக்களை சிறிலங்கா இராணுவமே உருவாக்கிப் பாதுகாத்து வருவது மற்றும் தமிழ்மக்களின் மீதான இராணுவ நெருக்குவாரங்கள் ஆகியவற்றை விபரித்த தமிழ்ச்செல்வன், இத்தகைய நடவடிக்கைகளால் யுத்த நிறுத்த ஒப்பந்தம் மீது தமிழ்மக்கள் முழு அளவிலான நம்பிக்கையின்மையைக் கொண்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களைக் களைந்து யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் சரத்துக்களை முழுமையாகச் செயற்படுத்தி இயல்பு நிலையைத் தோற்றுவிக்க வேண்டிய பொறுப்பு சிறிலங்கா அரசுக்கு உள்ளது என்றும் தமிழ்ச்செல்வன் கூறினார்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதிலும் பொதுக் கட்டமைப்பு போன்ற விடயங்களிலும் தமிழீழ விடுதலைப்புலிகள் எத்தகைய நெகிழ்வுத் தன்மைகளோடு இயங்கி வருகிறார்கள் என்பதையும் சுவிஸ் தூதுவருக்குத் தமிழ்ச்செல்வன் விளக்கினார்.

இச்சந்திப்பின்போது சுவிஸ் வெளியுறவு அமைச்சுச் செயலாளர் மார்ட்டின் ஸரியுசிங்கர் உடனிருந்தார். விடு தலைப்புலிகள் சார்பில் தமிழீழ காவல் துறைப்பொறுப்பாளர் பா. நடேசன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோரும் இச் சந்திப்பில் பங்கேற்றனர்.

## தாயகம்...

கிறிஸ்தவ மதகுருமார்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போது திருகோணமலையில் தமிழ்மக்கள் வாழும் பகுதிகளில் குவிக்கப்பட்டுள்ள படையினரால் மக்களுக்கு அசௌகரியங்கள் மற்றும் வசதியீனங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் எனவே படையினரை விலக்கிக்கொள்ள வேண்டும் என்றும் தமிழர் தரப்பினர் வலியுறுத்தினர். அக்கோரிக்கையை புதன்கிழமை மாலை கொழும்பு திரும்பியதும் சனாதிபதியைச் சந்தித்து அவரிடம் சமர்ப்பித்து நேறறு மாலைக்குள் படையினரை விலக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் குழு தமிழர் தரப்புக்கு உறுதியளித்திருந்தது. அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படாமையைக் கண்டித்தே இன்று ஒரு நாள் ஹர்த்தாலை வடக்கு கிழக்கு மாகாணம் முழுவதும் நடத்துவது என்று கூட்ட மைப்புப் பாராளுமன்றக் குழு உறுப்பினர்களும், திருமலை மாவட்டத் தமிழ் மக்கள் பேரவைப் பிரதிநிதிகள் மற்றும் அமைப்புக்களின் பிரதிநிதி கள் பங்குபற்றிய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதாகப் பேரவையின் தலைவர் விக்கினேஸ்வரன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (25,27)

# சுதந்திரப் பறவைகள் ஏடு இன்று வெளிவருகின்றது

(நமது நிருபர்)

விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரபூர்வ ஏடான "சுதந்திரப்பறவைகள்" ஏட்டின் பங்குனி-சித்திரை-வைகாசி மாத இதழ் இன்று வெளிவருகின்றது.

"பொல்லோடு நிற்கும் சமாதானம் யுத்தத்தை விடவும் பொல்லாதது" என்ற முக்கிய அரசியல் கட்டுரையுடனும், "எதற்காகக் காத்திருக்க வேண்டும்" என்ற ஆசிரியர் தலையங்கத்துடனும் தாங்கிவரும் இந்த இதழில் சிகரங்களைத் தொட்ட பின்னும் இன்றும் பெண், தீச்சுடர்-11, போர்க்கால அவலங்களின் மத்தியில் புத்துயிர் பெறும் பெண்ணியச் சிந்தனைகள், புலிவாலை மிதித்தால்..., ஓர் குழந்தையின் ஆரோக்கியமான எதிர்காலத்தில் தாயின்பங்கு, கடைத்தேற வழி எங்கே..?, மறுபடியும் விழி சிவந்தாள் கண்ணகி, வளரிளம் பருவம் என்னும் விசித்திர உலகில், உணர்வு, பெண் ஏன் அடக்கப்பட்டாள்? ஏன் ஒடுக்கப்பட்டாள்?, இருள் கலையுமா?, நிமிர்வு ஆகிய அம்சங்களையும் தாங்கி வெளிவருகின்றது.

# தூயவன் அரசறிவியல் கல்லூரியில் புகழேந்தியின் ஓவியக்கண்காட்சி

தமிழக ஓவியர் புகழேந்தியின் ஓவியக்கண்காட்சி தூயவன் அரசறிவியல் கல்லூரியில் நாளை நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணி தொடக்கம் மாலை வரை இக்கண்காட்சி நடைபெறவுள்ளது.இதனைக் கலைஞர்கள் ஆர்வலர்கள், பொதுமக்கள் அனைவரும் குறிப்பிட்ட நேரத்தில் சென்று பார்வையிடமுடியுமென தூயவன் அரசறிவியல் கல்லூரியினர் தெரிவிக்கின்றனர்.

# கொடுவாமடு சூனியப் பிரதேசத்தில் கிளைமோர் குண்டுவெடிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு செங்கலடி-பதுளை வீதியிலுள்ள கொடுவாமடு யுத்த சூனியப் பிரதேசத்தில் நேற்றுக் காலை கிளைமோர் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விடுதலைப்புலிகள்- இராணுவ முன்னணி காவல்நிலையப் பிரதேசங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் இந்தக் குண்டு வெடித்தபோதிலும் எவருக்கும் பாதிப்புக்கள் இல்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது. விடுதலைப்புலிகளைத் தாக்கும் நோக்கத்துடன் ஊடுருவி அவர்களுக்கு எதிரான சக்தியொன்று இதனை அங்கு மறைத்து வைத்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

# தொலைக்காட்சி அலுவலகம் மீது வவுனியாவில் கைக்குண்டுத் தாக்கு

(வவுனியா)

வவுனியா, வைரவர்புளியங்குளத்திலுள்ள தனியாருக்குச் சொந்தமான தொலைக்காட்சி அலுவலகம் ஒன்றின் மீது நேற்று முன்தினம் பின் இரவு 1.45 மணியளவில் இனம் தெரியாத நபர்களினால் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஒளிபரப்புச் சேவைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயமே இக் குண்டு வீசப்பட்டுள்ளதாகவும் இச் சமயம் அலுவலகத்தில் ஒருவர் மட்டுமே இருந்துள்ளார் எனவும் மூன்று பேர்கொண்ட குழுவே இத் தாக்குதலை நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தில் ஒன்பது இலட்சம் ரூபா மதிப்புடைய உபகரணங்கள் சேதமடைந்து இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (28)

**சுற்றாடல் தினம்-ஜூன்-05**

**இயற்கை காப்போம் இன்பம் பெறுவோம்!**

**செயற்கை சுகங்கள் துன்பத்தின் திறவுகோல்!**

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது